Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரதி பாடல்கள் சிந்தனை விளக்கம்

சேக்கிழார் அடிப்பொடி

முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரதி பாடல்கள்
சிந்தனை விளக்கம்

✤

சேக்கிழார் அடிப்பொடி
முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரதி பாடல்கள் சிந்தனை விளக்கம்

சேக்கிழார் அடிப்பொடி
முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன்

தெய்வச் சேக்கிழார் சைவசித்தாந்தப் பாடசாலை
5-D, செல்வம் நகர்,
தஞ்சாவூர் - 613 007

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர்
தி.ந. இராமச்சந்திரன் டி.லிட். (யாழ்)
76ஆம் பிறந்தநாள் விழா சிறப்பு வெளியீடு

நூலின் பெயர்	:	*பாரதி பாடல்கள் சிந்தனை விளக்கம்*
நூலாசிரியர்	:	*தி.ந. இராமச்சந்திரன்*
மொழி	:	*தமிழ்*
உரிமை	:	ஆசிரியருக்கே
நூல் வெளியீடு	:	*தெய்வச் சேக்கிழார் சைவசித்தாந்தப் பாடசாலை* *5-D, செல்வம் நகர்,* *தஞ்சாவூர் - 613 007*
முதல் பதிப்பு	:	*ஜூலை, 2009*
தாள்	:	*மேப்லித்தோ*
பக்கம்	:	152
நூலின் அளவு	:	*டெமி (1 x 8)*
எழுத்தின் அளவு	:	*10 புள்ளி*
விலை	:	*ரூ.80/-*
அச்சாக்கம்	:	மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி.
விற்பனை உரிமை	:	அகரம் மனை எண்.1 நிர்மலா நகர் தஞ்சாவூர்-7

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருத்தம்

வ.எண்.	பக்கம்	வரி எண்.	மாற்றம்
1.	2	5	அவற்றின் ஆழ்நிலையிலேயே
2.	3	2	நூலாக்கம் பெறவேண்டும்
3.	4	19	தழல் வீரத்தில்
4.	17	5	ஒளியுறப் பெற்ற பிள்ளைகள்
5.	17	20	பூசலுக்கு இடந்தா ராது
6.	26	15	வெறும் இருளன்று
7.	29	16	அத்தனென் போல் வந்தில னேல்
8.	30	24	மாதம் முந்நூறு
9.	33	15	மனத்துக்கு அதீனம்
10.	33	16	மனத்துக்கு அதீதம்
11.	38	7	கனங்குழையாள் எழுந்த தற்பின்
12.	42	16	நிலையை மனத்தில் கொண்டுதான்
13.	43	19	ஆகவே இந்நாடு உயர்நாடு;
14.	44	11	பல்வகைய்வான செல்வங்களும்
15.	46	8	வேதவழியைக் கைக்கொண்டு
16.	52	9	மேலவர் நாவெனு மலர்ப்பதத்தாள்."
17.	52	14	ஓதத்தகும் எல்லாம் உள
18.	57	2	நற்செயல்கள் அன்ன பிற
19.	57	7	இதுவகையில் முயல்வார்
20.	63	25	வேயப்பட்ட திருமுக மண்டலம்
21.	64	20	பொருந்தி நிற்கும் அழகு
22.	69	22	அவள் செந்நிறத்தாள்.
23.	80	6	யுவராக விளங்கினார் யுகபுருஷர்
24.	82	20, 21, 22	உஜ்ஜயினி
25.	83	27	நமக்கு அருளுபவள் பராசக்தி
26.	91	30	பராசக்தி, பராபரனாகிய சிவனது
27.	96	24	நாட்டியத்திற்குரிய பாடலுக்கு
28.	97	4	முதலடியில் சந்தக்குறிப்பும், குழிப்பும் உண்டு.
29.	97	16	கடந்து உள்ளே உள்ளது ஆன்மா
30.	99	15	நடை வாய்ந்து
31.	102	7	செம்பொருளின் நாட்டம் மிக்குச்
32.	103	11	மன்னி நிற்கும் ஒளிப்பொருள் அவள்.
33.	104	14	வந்தபடி உள்ளன.
34.	105	1	அமரகவி தோத்திரிக்கின்றார்.
35.	111	22	மாளாத காத னோயாளன் போல்
36.	111	23	குலசேகர ஆழ்வார்.
37.	114	2	துயராண்டு உழவார்
38.	121	21	பென்னம் பெரிய அண்டங்களொடு
39.	126	28	ஒன்மை சொன்டார்; உயிர்வன்மை
40.	130	11	எண்ணியவை நிறைவேறல் வேண்டும்.
41.	130	16	மறைந்திடும் பனிமூட்டம் போல அகலவேண்டும்.
42.	132	23	வறுமையும் நைந்தொழியப் பாடுக
43.	149	22	பாடும் பாட்டுக்களின் பொருண்மை கூடும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னுரை

மகாகவி பாரதியார் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை ஒட்டி நடத்தப்பெற்ற கூட்டங்களில், 'பாரதி எனக்குப் புரியவில்லை' என்ற தலைப்பில் நான் சொற்பொழிவு நிகழ்த்தத் தொடங்கினேன். இப்படி ஒரு தலைப்பா? என்று பலரும் முணு முணுத்தனர். என்றாலும் என் சொற்பொழிவைக் கேட்ட பலரும் ஓர் இன்ப அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். எளிமையான சொற்கள் கொண்டு பாடல் அமைக்கப் பெற்றிருந்தபோதும், கனமான எழுத்துக்களைச் சுமந்து வரும் பாடல்களைப் புரிந்துகொள்ளுதல் எளிதன்று என்று பலரும் உணரத் தலைப்பட்டனர்.

'சாவித்திரி' என்ற தலைப்பில் ஸ்ரீ அரவிந்தர், ஆங்கிலத்தில் ஓர் இதிகாசம் வரைந்தார். இது இந்நூலைப் பயில்வோரைத் திகைப்பில் ஆழ்த்தியது. இப்பனுவலைப் புரிந்துகொள்ள ஓரளவேனும் உதவவேண்டும் என்று ஒரு சிலர் இந்நூலுக்கான விளக்கங்களை வரைந்து அச்சிட்டனர்.

திருமந்திரத்தில் 'சூனிய சம்பாஷனை' என்ற ஒருபகுதி உண்டு. மக்களின் பேச்சு மொழியில் பயன்படும் சொற்களே இப்பகுதியில் இடம் பெற்றன. என்றாலும் இப்பகுதியை முறையாக விளங்கிக் கொள்ளுதல் அருமையிலும் அருமை.

சொற்களுக்கும் காரண, ஸ்தூல, சூக்கும சரீரங்கள் உள. அவையிற்றைக் கூர்ந்து நோக்குவாருக்கே இவ்வுண்மை விளங்கும். உண்மைக் கவிஞர்களின் நூல்களை ஆர்வத்தோடு பயிலப் பயில சிறிது சிறிதாக, அவை தேக்கி வைத்திருக்கும் ரகசியங்கள் வெளிப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரதி வழியில் நிலைத்து, அலகிட்டு ஆர்வ நடை பயின்ற அமரர் திருலோக சீதாராம் தாம் பாடிய பாடல்களில் எளிய சொற்களைத்தாம் பெரிதும் கையாண்டார். என்றாலும் இவர் பாடிய பாக்களின் பொருண்மை, அவற்றின் மேல் மட்டத்தில் மிதக்காமல், அவற்றின் சூழ்நிலையிலேயே கால்கொண்டு நின்றது.

காட்டு ஒன்று மட்டும் காட்டுகிறேன்.

"கோலம் மிகுந்தொளி கூட்டி மயக்கமும் காட்டியெழும்
காலமென் றேபெருங் கற்பனைக் கேமயலாகி நின்று
சாலப் பலபல நாடகம் சார்ந்து சதாசிவமாய்
ஞாலத் திசைவெளி யேபடர்ந் தேங்கு முயிரினமே

கூட்டிப் பெருக்கிக் கழித்து வருத்துங் கணக்கறியாப்
பாட்டிற் படுதுய ராயின வேதும் பகுத்தறியாது
ஏட்டிற் பெருக்கி எழுதிய வெல்லாம் இலக்கியமாய்ப்
போட்டுவைப் போமிது போதுமி தேநாம் புரிதவமே"

இப் பாடலை எவரே எளிதில் விளங்கிக்கொள்ளல் ஒல்லும்? திருலோகம் பாரதியாரின் ஆன்மிக புத்திரர் ஆவார். வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம் பாரதியார் பாடல்களை எனக்கு விளக்கிச் சொன்னார். இவர் மூலம் நான் அறிந்தனவற்றையும், பன்னூல் பயிற்சி மூலம் நான் கற்றனவற்றையும் பயன்படுத்தி நான் பாரதியார் பாடல்களுக்கு விளக்கம் வரையவேண்டும் என்று என் மூத்தமகன் சுரேஷும், பாரதிதாசன் பக்தனான ய. மணிகண்டனும் என்னை வற்புறுத்தி வந்தனர். 1.3.1998இல் என் பணியைத் தொடங்கினேன். ஆனால் தொடர்ந்து செயல்பட முடியவில்லை. ஏழு பாடல்களுக்கு உரை எழுதி முடிப்பதற்குள் எட்டு மாதங்கள் உருண்டோடி விட்டன. பிறகு விளக்கம் வரைவதை நிறுத்திவிட்டேன். இருந்தாலும் என் மகனும், மணிகண்டனும் என்னைத் தொடர்ந்து வற்புறுத்தவே செய்தனர். மீளவும் என் பணியை 21.10.2007 அன்று தொடங்கினேன். இது 28.11.2007 வரை நடைபெற்றது. பிறகு... பழைய கதைதான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னுடைய 76ஆம் ஆண்டு பிறந்த நாளை ஒட்டி, நான் வரைந்த விளக்கங்கள் நூலாகப் பெறவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப் பட்டேன். நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அச்சுப் புத்தகங்களும், நானூறுக்கு மேற்பட்ட குறிப்பு நோட்டுப் புத்தகங்களும், குறிப்புகள், கட்டுரைகள் முதலியன கொண்ட பல ஆயிரம் தாள்களும் மண்டிக் கிடக்கும் என் நூல் நிலையத்தில் என்னுடைய விளக்கம் ஒளிந்து கொண்டுவிட்டது. அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்துத் தந்தவர் அன்பர் இரா.சுப்பராயலு அவர்கள். அவரே என் எழுத்துக்களைப் படிப்பதற்கான சாமர்த்தியமும் உடையவர். அரும்பாடுபட்டு என் விளக்கங்களைத் தெளிவான முறையில் அவர் கையெழுத்துப் படுத்தினார். அவரது சேவையை யான் மறக்கமுடியாது. என் கண்கள் மங்கிவரும் நிலையில் என் கண்களாக விளங்குபவரும் அவரே. அவருடைய பெருமுயற்சியாலே இந்நூல் இப்போது வெளிவருகின்றது.

பாரதி படைப்புகள் பற்றி ஆங்கிலப் பேராசிரியர் பி.மகாதேவன் 50 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட கருத்துகளை இங்கே தருகிறேன். "இன்று பாரதியார் பாடல்களைப் பெருமளவும் புரிந்து கொள்ள முடியும் என்றுள்ள நிலை 50 ஆண்டுகளுக்குப் பிறகு மாறிவிடும். பாரதியார் பாரதநாட்டின் பண்பு, கலாசாரம், நாகரிகம், மரபு முதலியனவற்றில் துறைபோகியவர். நாட்கள் செல்லச் செல்ல இவையிற்றில் தோய்ந்திருப்பார் எண்ணிக்கை சுருங்கிவிடும். அப்படி வரும் கால கட்டத்தில் விளக்கம் இன்றி பாரதியாரின் பாடல்களை புரிந்துகொள்ள முடியாமல் போய்விடும்."

பேராசிரியரின் தீர்க்கதரிசனம் இப்போது பலித்து வருகிறது. பாரதியார் பற்றி விபரீதமான நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவர்களைக் கண்டிக்க நம்மிடையே பாரதிதாசன் இல்லை. இது ஒரு பெரும் சோதனைக் காலம்.

பாரதியார் பல மொழிகள் அறிந்தவர். குறிப்பாக ஆங்கிலத்திலும், வடமொழியிலும் அவர் சிறப்பான தேர்ச்சி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெற்றிருந்தார். வடமொழிப் பாடல் அடிகளையும், மூதுரைகளையும் அவர் தமிழில் தந்திருக்கிறார்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்ற பாரதி வாசகம்,

"ஜநநீ ஜந்ம பூமிச்ச
ஸ்வர் காதபி கரி யஸீ"

என்ற வடமொழிக் கூற்றின் தமிழாக்கம்.

"காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்"

என்று பாடியவர் பாரதியார். இது,

"பசுர் வேத்தி, சிசுர் வேத்தி
வேத்தி கான ரஸம் பணீ:"

என்ற வடமொழியில் அமைந்த பழமொழிக்கான தமிழ் மொழி பெயர்ப்பு.

பாரதியாரின் இளவலான சி.விசுவநாத ஐயரை மானாமதுரையில் சந்தித்து உரையாடும் பேறு அன்பர் சீனி.விசுவநாதன் மூலம் எனக்குக் கிட்டியது. அப்போது அப்பெரியவர், "கழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?" என்று தம் தமையனார் பாடியதற்கு மூலாதாரம் காளிதாசன் இரகு வம்சத்தில் பாடிவைத்த வாசகம் என்றும், அவ்வாசகமே, "தேஜஸாம் ஹி ந வய: ஸமீப்யதே" என்றும் கூறினார்.

பாரதியாரின் பிரயோகங்களைப் புரிந்துகொள்ளாமல் பலரும் தத்தளிக்கின்றனர். அம்பு என்ற சொல்லுக்கு 'நீர்' என்பது பொருள் என்றும், 'கதலி' என்னும் சொல்லுக்கு 'மான்' என்பது பொருள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றும், 'காணி' என்னும் சொல்லுக்கு 'உரிமை' என்பது பொருள் என்றும், 'துரிதம்' என்ற சொல்லுக்கு 'பாவம்' என்பது பொருள் என்றும் அரும்பாடுபட்டுத் தெரிந்து கொண்டேன். பலப் பல அரிய செய்திகளை 'வழி வழி பாரதி' என்ற என்னுடைய நூலில் பதிவு செய்து வைத்திருக்கிறேன்.

பாரத நாடு சுதந்திரம் பெற்ற பிறகு தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளும் இன்று பொலிவு இழந்து காணப்படுகின்றன. குறிப்பாக தமிழ் இலக்கண அறிவு உடையார் எண்ணிக்கை சுருங்கிவிட்டது. இந்நிலை நீடித்தல் கூடாது.

இச்சூழலில் பாரதி பாடல்களைச் சான்றோர் ஏற்கும் முறையில் விளக்கத்தோடு ஒரு நூலை வெளியிடுதல் ஒரு நற்பணி என்று கருதுகிறேன். இயன்றதைச் சாதித்திருக்கிறேன். பாரதியார் கூறியதுபோல "ஆதர்சமாக அன்று; வழிகாட்டியாக."

பாரதி பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் என்னையும் பாராட்டிய தமிழக அரசிற்கும், "பாரதி சீர் பரவுவார்" என்ற விருதை எனக்களித்த தஞ்சை வழக்கறிஞர் சங்கத்திற்கும், "பாரதி சித்தாந்தச் செம்மல்" என்ற பட்டத்தை அளித்து என்னைப் பாராட்டிய அமரர் இளமுருகு பொற்செல்வி அவர்களுக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த அன்பர் கதிர் அவர்களைப் போற்றுகிறேன்.

சேக்கிழார் அடிப்பொடி

முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன்

தஞ்சை

01.07.09

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளுறை

1. வந்தே மாதரம் 13

2. வந்தே மாதரம் 19

3. வந்தே மாதரம் 24

4. வந்தே மாதரமா மந்திரமெங்கே? 29

5. நாட்டு வணக்கம் 32

6. எங்கள் நாடு 36

7. பாரத நாடு 41

8. சரஸ்வதி தேவியின் புகழ் 48

9. சரஸ்வதி ஸ்தோத்ரம் 58

10. லக்ஷ்மி ப்ரார்த்தனை 62

11. லக்ஷ்மி தேவி 66

12. திருமகள் 71

13. திருக்காதல் 74

14. மூன்று காதல் 76

15. நவராத்திரிப் பாட்டு 82

16. நவராத்திரிப் பாட்டு – II 84

17. சக்தி 87

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18. சக்தி விளக்கம்	90
19. சக்தி திருப்புகழ்	93
20. சக்திக் கூத்து	96
21. வேள்விப் பாட்டு	100
22. கேட்பன	107
23. மஹாசக்தி	110
24. மஹாசக்தி வெண்பா	112
25. மஹாசக்தி பஞ்சகம்	115
26. மஹாசக்தி வாழ்த்து	119
27. வைய முழுதும்	124
28. மஹாசக்திக்கு விண்ணப்பம் - I	127
29. மஹாசக்திக்கு விண்ணப்பம் - II	130
30. பராசக்தி	131
31. காணி நிலம்	135
32. ஓம் சக்தி	138
33. சிவசக்தி புகழ்	144
34. ஊழிக் கூத்து	148

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. வந்தே மாதரம்

பல்லவி

வந்தே மாதர மென்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம். (வந்தே)

சரணங்கள்

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்,
வேதியராயினு மொன்றே - அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே (வந்தே) 1

ஈனப் பறையர்க ளேனும் - அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ? - பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ? (வந்தே) 2

ஆயிர முண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி? - ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர் - தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ? (வந்தே) 3

ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் னமக்கெது வேண்டும்? (வந்தே) 4

எப்பதம் வாய்த்திடு மேனும் - நம்மில்
யாவர்க்கு மந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் (வந்தே) 5

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புல்லடிமைத் தொழில் பேணி - பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர - இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி (வந்தே) 6

இப்பாடலை மகாகவி, தாயுமானவர் அருளிய 'ஆனந்தக் களிப்பு' என்ற மகுடமிட்டு அருளிய பாடல்களின் மெட்டிலே அமைத்திருக்கிறார்.

மெட்டமைத்த தாயுமானவர் தம் பாடலை இப்படித் தொடங்குகிறார்:

"சங்கர சங்கர சம்பு - சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு"

இதற்குரிய இராகம் நாதநாமக் கிரியை. சோக வெளிப்பாட்டிற்குரிய இராகம் இதுவாகும்.

"எங்கே என்னை இருந்திடம் தேடி" என வரும் அப்பரடிகளின் திருவாய்மூர் திருப்பாடல் இவ்விராகத்திலே பாடப்பெற்றது.

இனிய இசை சோகமுடையது என்பது பாரதியின் மதம்.

"என்றுமிருக்க உளங்கொண்டாய் இன்பத் தமிழுக் கிலக்கியமாய்" என்று மகாகவி, தாயுமானவரைப் போற்றியிருப்பது இங்கே உளங்கொள்ளத் தக்கது. இச்சொற்கள் கொண்ட பாடல் 1914-ஆம் ஆண்டு (பிரமாதீச வருஷம் மாசி மாதம்) வெளிவந்த ஞானபாநு தொகுதி 1, பகுதி 11இல் வெளிவந்தது.

வந்தேமாதரம் என்ற வங்காளிப் பாடலின் வரலாறு வருமாறு:

இப்பாடலாசிரியரான பங்கிம் சந்திர சாட்டர்ஜி அவர்கள் வங்க மொழியிலே ஒரு சஞ்சிகை நடத்திவந்தார். ஒரு நாள் அச்சுத்தாளிலே ஒரு பகுதி மிச்சமிருந்தது. இதை நிரப்ப வேண்டுமென்று அச்சகப் பணியாளர் சாட்டர்ஜியைக் கேட்டுக்கொண்டார். சிறிது நேரம் கழித்து அவரை வரச்சொல்லிவிட்டு சாட்டர்ஜி சிந்தனையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆழ்ந்தார். அவர் உற்ற அறிதுயிலில் முகிழ்த்த இப்பாட்டே இன்று உலகெங்கும் அறியப்பட்ட "வந்தே மாதரம்" பாடலாகும். அப்பாடலுக்கு மகாகவி இரு மொழி பெயர்ப்புகள் செய்திருக்கிறார். பின்னாளில் சாட்டர்ஜி எழுதிய "ஆனந்த மடத்"தில் இப்பாடலைச் சேர்த்துக்கொண்டார். இப்பாடலின் தொடக்கச் சொற்களான 'வந்தே மாதரம்' சிதறிக் கிடந்த பாரத தேசத்தை ஒன்றுபடுத்தியது.

இச்சொல் தொடரே அங்கங்கும் தேசபக்தர்கள் ஜெபித்த மந்திரமாகும். "மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்ற பெரு நாட்டத்தைச் சான்றோர் ஏற்கவேண்டுமென்று விரும்பிய மகாகவி, இம்மந்திரத்தால் உந்தப்பட்டு மேலேகண்ட பாடலைப் பாடினார்.

'வந்தே மாதரம்' என்றால் "தாயை வணங்குகிறேன்" என்று பொருள்.

மகாகவியின் தாய் பராசக்தி. அப் பராசக்தியே பாரதமாதா.

பல்லவியிலேயே 'வந்தே மாதரம்' என்ற மந்திரத்திற்குத் தாம் கொண்ட பொருள் என்ன என்பதை விளக்கியிருக்கிறார். மகாகவியைப் பொறுத்த அளவில் 'மாநிலம்' என்பது பாரத நாடு. அப்பரடிகளைப் பொறுத்த அளவில் 'மாநிலம்' என்பது தமிழகம். 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' என்பது வாகீச வேதம்.

இதே சொற்றொடர் அகில உலகத்தையும் காட்டுவதாகவும் மகாகவி அருளியிருக்கிறார். "மன்னும் இமயமலை எங்கள் மலையே மாநில மீதது போற் பிறிதிலையே" என்பதையும் காண்க.

ஜாதி, மதம் : மதம் என்ற சொல்லிற்குக் கொள்கை என்று பொருள். ஒரு பெரும் கொள்கை அடிப்படையிலேயே பல்வகை மக்கள் இணைந்து ஒரு குறிப்பிட்ட சமயத்தின் உறுப்பினர் ஆகின்றனர். உலகில் பெரிய சமயங்கள் இந்து சமயம், கிறித்துவம், இஸ்லாம் போன்றவை. இந்து சமயம் சனாதன தர்மம் என்று சொல்லப்படும். இது என்றும் உள்ள சமயமாம். இதில் பலப்பல பிரிவுகள் உள. மதம், அதாவது சமயம் என்பதற்கு ஆங்கிலச் சொல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Religion. சாதியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் Caste. பாரத நாட்டின் மரபுப்படி அந்தந்த சாதிக்கும் அதனதனுக்கும் உரிய தொழிலுண்டு. அப்படி ஒழுகி நடப்பவரிடையே பூசலுக்கு இடமில்லை. "சாதிகள் நெறியில் தப்பா" என்பது தெய்வச் சேக்கிழாரின் அருள்வாக்கு. சமூகத்தின் நலனுக்கு எல்லாச் சாதிகளும் பாடுபடவேண்டும். அவர்கள் இயற்றும் தொழில்களிலே ஏற்றத்தாழ்வு இல்லை. நாளடைவில் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்பட்டதால் இவ்வமைப்பு சீரழிந்தது. சமயம் வேறு; ஆன்மிகம் வேறு. என்றாலும் ஆன்மிக ஒருமைப்பாடே சமயத்தின் குறிக்கோள். ஆழ்வார்களும், நாயன்மாரும் சமயாதீதப் பரம்பொருளின் அருளினாலே, சமயங் கடந்த பேரருளாளர்கள். அவர்களின் சாதி, குலம் மறைந்து அவர்கள் பக்தர்களாய், தொண்டர்களாய், அன்பர்களாய், அடியார்களாய் மாறிவிட்டனர். இதுவே வாழ்வாங்கு வாழும் முறை. ஆகவே இப்பெரியோர்களே வானுறையும் தெய்வங்கள்.

இப்பெருநிலையை எய்துதற்குச் சாதியோ, சமயமோ, தடையாக இருக்குமாயின் அவற்றைக் கணக்கிலிருந்து நீக்கவேண்டும். ஆகவேதான் மகாகவி, "சாதி மதங்களைப் பாரோம்" என்று அருளினார்.

பாரதியார் ஏற்றுக்கொண்ட சாதி பாரத சாதி. இந்தச் சாதியுள் இந்நாட்டில் வாழும் எல்லா மதத்தினரும் அடங்குவர். பல்வகைப் பட்ட இவர்களுள் வாசி என்று ஏதுமில்லை. தாரதம்மியமற்ற ஒருமைப்பாடே இச்சாதியினரை இணைக்கின்ற ஆன்மிகப்பாசம். இப் பொற்சரடு அகக் கண்களுக்கே காட்சிப்பொருளாம்.

பாரத வாசியினர் பாரத சாதியினர். இவர்களுள் எல்லோரும் சமம். எல்லோரும் ஓர் நிறை. எல்லோரும் ஓர் விலை (WORTH).

தராதலத்தில் தாரதம்யம் அறியாப் பெருந்தகையோர் இவர்களே.

"ஈனப் பறையர்களேனும்" என்று தொடங்கும் சரணத்தில் இத்தேச சரித்திரத்தின் சுருக்கம் காண்கிறோம். ஜெய பேரிகை கொட்டிய அவ்வினத்தாருக்கு ஈனத்தை ஆரோகணம் செய்த கொடுமையை என்னென்று சொல்வது? இக்குலத்துதித்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒருவனாகத் தோன்றி சங்கர பகவத் பாதருக்கு அறிவு கொளுத்தினான் சிவன். அந்த ஆதிசிவன் மைந்தர்களுக்கு ஈனமுண்டோ? ரிஷபமே வாகனமாகக் கொண்ட சுடலை மாடனின் தமர் இவர். இவர்கள் தந்த கொடையே தேசத்தின் பொருளாதாரம். இவர்கள், பாரதராணி ஒளிவுறப்பெற்ற பிள்ளைகள், இவர்கள் நமர். சீனத்தர் அல்லர். பிறதேசத்தார்போல் தீங்கிழைப்பவர் அல்லர். முடத் தைமூரைப் போல், செங்கிஸ்கான் போல், கஜினி முகமதுபோல், மாலிக்காபூர் போல், இன்னும் இவர்களை ஒத்த பிறர்போல் பாரததேசத்திற்கு ஊறுவிளைவிக்க அறியாதவர்கள்.

ஒன்றாய் முளைப்பது எத்தனையோ கவடுபடும். பாரதசாதி ஆயிரம் சாதிகளாய்ப் பல்கியதில் ஆச்சரியமில்லை. என்றாலும், ஒரு குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகளை மாற்றான் புகுந்து தீர்க்கலாகாது. தீர்த்துவைக்கச் சொல்லி அவனை யாரும் அழைக்கவில்லை. சிறு குழப்பத்தை, தனக்கு அனுகூலமாக்கிக்கொண்டு, குரங்கு மத்தியஸ்தம் செய்ய வருபவன்தான் அன்னியன். அன்னிய ஆக்கிரமிப்பு அநீதி. பூசலிட்டுக் கொண்டோர் ஒரே குடும்பத்தினர். ஒரு தாயின் மக்கள். வந்த விரைவிலே பூசலும் அகலும், - அன்னியத் தலையீடு இல்லாமல் இருக்குமாயின். இதுவே மூன்றாம் சரணம் செப்பும் செய்தி.

பூசல் விளைந்தால் அன்னியர் மகிழ்வர். பூசலுக்கு இடந்தராது இருக்க, ஒற்றுமை வேண்டப்படும். இதுவே அடிப்படைத் தேவை. ஒன்றுபட்டால்தான் வாழ்வு உண்டு. ஒற்றுமைக் கட்டடத்தில் விரிசல் விழக்கூடாது. விரிசல் தாழ்வின் அடையாளம்.

நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு என்ற மகாகவியின் கூற்றுக்கான உண்மைப் பொருளை விளங்கிக் கொள்ளல் வேண்டும். ஒரு சமுதாயத்தின் பென்னம் பெரும்பகுதி ஒற்றுமையுடன் வாழ, ஒரு சின்னஞ்சிறு பகுதி ஒற்றுமையற்று இருக்குமானால் அதனால் விளையும் தீமை அதற்குக் காரணமான சின்னஞ்சிறு பகுதியை மட்டுமே தாக்காது. தீமையின் வீச்சு சமுதாயத்தை ஒட்டுமொத்தமாகச் சாடும்; வீழ்த்தும். ஓர் இயந்திரத்தின் ஒரு சிறுபாகம் பழுதுபட்டாலும் அவ்வியந்திரத்தினால் ஆய பயன் முழுதும் கெடும். ஒரு கிணற்றைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாண்டுபவன் முக்காலே மூன்று வீசம் தாண்டிவிட்டாலும், கிணற்றுக்குள்தான் விழவேண்டும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. 'The strength of a chain is the strength of its weakest link". ஒரு சங்கிலியின் வலிமை அதனுடைய மிகப் பலவீனமான கண்ணியின் அளவினதேயாம். ஆகவேதான் தன் மக்களுள் பூஞ்சையான குழந்தையின்மீதே ஒரு தாய் அக்கறை செலுத்துவாள்.

உண்மை அறிவு என்கிற மெய்ஞானம் ஒற்றுமையே; ஒருமைப்பாடே. இவ்வுண்மை நமக்குத் தடக்கை நெல்லிக்கனியாயினால் எல்லாத் தேவைகளையும் கடந்து விட்டவர்களாவோம்.

"இந்த ஞானம் வந்தால் பின் நமக்கு எது வேண்டும்?"

ஒரு சிறிய விதை பிளந்து, மண்கிறி தலையெடுக்கும்போது அகில உலகமே பிரசவ வேதனை உறுகிறது. "அறிவினால் ஆகுவது ஒன்று உண்டோ பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றாக்கடை" என்பது வேதம். ஆகவே எந்நிலை தோன்றினாலும் அந்நிலை யாவர்க்கும் பொது. வாழ்விலும் சாவிலும் இப்பொதுமையே நிலவுதல் வேண்டும். இதுவே ஐந்தாம் சரணம் சாற்றும் செய்தி.

நம் சிறுமையால் நம் நாடு அடிமைப்பட்டது. அதைவிடக் கொடுமை என்னவென்றால், "அடிமை சால அழகுடைத்து" என்ற எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு நாம் அடிமை நேசர்களாக வாழ்ந்துவிட்டோம். நம்பால் வேர்விட்டு, தோன்றி, கிளைத்துப் பல்கியிருக்கும் அடிமை மோகத்தை உணர்ந்து, வெள்கி, அதனை உடனே வெட்டிச் சாய்த்தல் வேண்டும். இதில் காலந் தாழ்த்தலாகாது. விரைந்து திறனோடு செயல்பட்டால் தொடர்ந்து வந்த இகழ்ச்சிகள் வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் நாசமுறும். அடிமைத்தொண்டு அடாது. ஆகவே, "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்; பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்."

✣

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. வந்தே மாதரம்

பல்லவி

வந்தே - மாதரம் - ஜய
வந்தே - மாதரம்.

சரணங்கள்

ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய ஜய ஜய. (வந்தே) 1

ஆரிய பூமியில்
நாரிய ரும் நர
சூரிய ரும்சொலும்
வீரிய வாசகம் (வந்தே) 2

நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நந்தே சத்தர் - உ
வந்தே சொல்வது. (வந்தே) 3

ஒன்றாய் நின்றினி
வென்றா யினுமுயிர்
சென்றா யினும் வலி
குன்றா தோதுவம் (வந்தே) 4

இந்த கீதத்தின் பல்லவி வந்தே மாதரம் - ஜய - வந்தே மாதரம் என்பதாம். ஜய என்ற வடசொல் வெற்றி வாழ்த்தை அறிவிக்கும் சொல். இச்சொல்லுக்குப் பொருள் "வெல்க" என்பதாம். "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க" என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாசகம். மங்கல வாழ்த்தைச் சுட்டும் இச்சொல் சுருக்கமான முறையிலே "பல்லாண்டு" இசைக்கும். அளவிடமுடியாதபடி நம்மினும் பலகோடி வகைகளில் விஞ்சிநிற்கும் பரம்பொருளை வாழ்த்துதல் பாரதநாட்டின் மரபு. பரம்பொருளை ஓர் அடியவன் வாழ்த்தல் முறைதானா? என்ற கேள்விக்கு இடமில்லை. "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்..." என்பதும் திருவாசகம்.

பரம்பொருள் வணங்கப்படுவதற்காக வாழ்த்தப்படுகிறது.

"மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" என்று சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார்.

நான்கு குறு அடிகள் கொண்ட சரணங்கள் நான்கு கொண்ட பாடல் இது. வெற்றியைக் குறிக்கும் ஜய என்னும் சொல் முதற் சரணத்தில் பத்துமுறை பெய்யப்பட்டிருக்கிறது.

"சிவ சிவ என்கிலர்" என்று தொடங்கும் நாற்சீரடி நான்கு கொண்ட திருமந்திரத்தில்கூட சிவ என்ற சொல் ஒன்பது இடங்களில் மட்டுமே வருகிறது. இரு சீரடி கொண்ட நாலடிப் பாடலில் மகாகவி "ஜய" என்ற சொல்லை வைத்து பத்து இடங்களில் போற்றியது சிந்தித்து இன்புறற்குரியது.

பாரத பூமி ஆரிய பூமி என்கிறார் மகாகவி. 'ஆரிய' என்ற சொல்லுக்கு சரியான விளக்கம் தரப்படாததால் இவ்வாரிய பூமியில் விளைவிக்கப்பட்ட இன்னல்கள் ஒரு கோடி. 'ஆரிய' என்றால் சீரிய, உயரிய, உன்னதமான, சால்புடைய என்றே பொருள்.

'ஆரியன்' என்னுஞ் சொல் ஓர் இனத்தானைக் குறிக்கவே குறிக்காது. உள்நோக்கத்தோடு தவறான பொருள் கற்பிக்கப் பட்டதால் இன்றளவும் இப்புண்ணிய பூமியில் பூசல்கள் ஓயவில்லை. தவறான பொருளை வேண்டுமென்றே கற்பித்தவர் மாக்ஸ்முல்லர் என்னும் பெரியார். தம்முடைய தவறான விளக்கத்தால் எழுந்த விபரீதங்களைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி, பின்னாளில் தொடர்ந்து முப்பது ஆண்டுகள் 'ஆரிய' என்ற சொல்லுக்கான உண்மைப் பொருளை மறித்து மறித்து அப்பெரியவர் ஓயாமல் கூறிவந்தபோதும், அவரால் தோற்றுவிக்கப்பட்ட பூதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாகாவரம் பெற்று தலைவிரித்தாடுகிறது. அவர் காலத்திலேயே வாழ்ந்த பேரறிஞர் ஐசக் டெய்லர் இதை விளக்கி "The origin of the Aryans" என்ற நூலை வெளியிட்டார். இதன் இரண்டாம் பதிப்பு 1898இல் வந்தது. 'ஆரிய' என்னும் சொல் மொழியைக் குறிக்கும் சொல் என்பதை மாக்ஸ்முல்லர் ஏற்றுக்கொண்டதோடு அல்லாமல், இதுவே கொள்ளப்படவேண்டிய பொருள் என்றும் அழுத்தமாகக் கூறியிருக்கிறார். தமிழ் மொழியில் 'ஆரிய' என்ற சொல் உயர்வு பற்றியே கையாளப்பட்டது. பாவாணர் அவர்களும், அண்ணா அவர்களும் இக்கருத்தை உறுதி செய்திருக்கின்றனர். வித்துவான் தியாகராச செட்டியார், தம்முடைய ஆசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களை "நம்பும் அருள் மீனாட்சி சுந்தர ஆரியன்" என்றே போற்றியுள்ளார். *(பக்கம் 504; ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு, 1910).*

'ஆர்யா' என்ற சஞ்சிகையை ஸ்ரீ அரவிந்தர் 1914இல் தோற்றுவித்தார். அவர் அந்தணர் அல்லர். சுவாமி விவேகானந்தரும் அந்தணர் அல்லர். பதினெண் புராணங்களையும் விரித்துரைத்த, திருஞானசம்பந்தரால் போற்றப்பட்ட சூதமுனிவரும் அந்தணர் அல்லர். அனைவரிலும் மேம்பட்ட பெரியோர் அவர் ஆதலினால் அவர் ஆரியர் ஆவர்.

ஸ்ரீ அரவிந்தர் தந்துள்ள விளக்கத்திலிருந்து ஒரு நறுக்கு. "There is no word in human speech that has a nobler history". *(மானுடர் மொழியில் இச்சொல்லைப் போல் அதி உன்னத சரித்திரச் சொல் எதுவும் இல்லை).*

"ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கு ஓங்குக"

என்று மகாகவி பாரதியார் தமிழ்நாடு உள்ளிட்ட பாரதம் ஆகிய நாடு என்றார்.

ஆரிய என்றால், சீரிய, சிறப்புமிக்க, அருமையான, உயர்வான என்றுதான் பொருள். வடமொழி நிகண்டான அமர கோசமும் இப்பொருள்களையே கூறுகின்றது. சுயநலமற்ற, பிறர் நலம் பேணுவோனாய், புலன் அழுக்கற்றவனாய், நீதி நெறி வழுவா நெறி முறையில் இயங்குவோனாய், தன்னை வென்றாளும் சமர்த்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உடையோனாய், உண்மை விளம்பியாய் உள்ள ஒவ்வொருவனும் ஆரியனே என்பது ஸ்ரீ அரவிந்தர் தந்த விளக்கம். இறை உலகு தன்னுள்ளும், புறத்தும் குடிகொள்ளப் போராடுபவன் ஆரியன். "Always he (the Arya) fights for the coming of the Kingdom of God within himself and the world" என்றார் ஸ்ரீ அரவிந்தர்.

உண்மை ஆரியன் சிவபெருமானே. நம்முடைய திருமுறைகளும் சாத்திரங்களும் சாற்றுவன கேளீர். "ஆரியம் தமிழோடு இசையானவன்" என்றும், "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்றும், "செந்தமிழோடு ஆரியனைச் சீரியானை" என்றும், தமிழ் மறையைக் காலத்தால் முதலில் அறிவித்த அப்பர் அடிகள் அருளியுள்ளார்.

மகாகவியும் 'ஆரிய' என்ற சொல்லை ஐயம், திரிபுகளுக்கு இடமின்றி சரியான பொருளை அங்கங்கும் பெய்திருக்கிறார். 'ஆரியா வர்த்தம்' என்ற சொற்றொடரையே மகாகவி ஆரியபூமி என்று கூறியிருக்கிறார். 'ஆரியா வர்த்தம்' என்பது அகண்ட பாரத தேசம்.

இப்புண்ணிய மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த பெரியோர்கள் எல்லோருமே மிகப்பெரிய தேச பக்தர்கள். இப்பக்தருள் சிறப்பிடம் பெற்றவர் பெண்களே. ஆகவேதான் மகாகவி நாரியர் போற்றும் நாடு இந்நாடு என்பதைத் தெளிவாக அறிவிக்கிறார். இந்நாரியருக்கு இணையான பெருமை படைத்தவர்களை நரசூரியர் என்று மகாகவி அடையாளம் காட்டுகிறார். சூரியனைப் பேரறிவின் அடையாளமாக எல்லா நாடுகளும் கொள்ளுகின்றன. ஒளிவடிவான சூரியன் ஞான வடிவினன் என்பது எம்மதத்தாருக்கும் சம்மதமான கொள்கை. சூரியனை நவ வியாகரண பண்டிதன் என்று சாத்திரங்கள் போற்றுகின்றன.

ஆசிரியன் கற்பிக்கும் வேகத்தில் முழுமையாக கற்பிக்கப் பட்டதை வாங்கி, தன் மனத்தில் பதிவுசெய்துகொள்ள வல்லவனே மாணாக்கருள் ஆணியாம். ஆதித்தியன் சொன்ன வேகத்திலே அனைத்துப் பொருளையும் சிந்தாமல் சிதறாமல் முழுமையாகக் கற்றுக்கொண்டவன் அனுமன் ஆவான். ஆகவேதான் அவ்வனுமனே "சொல்லின் செல்வன்" என்று தென்சொல் கடந்து வடசொற்கு எல்லை தேர்ந்த இராகவன் போற்றினான். 'நரசூரியர்'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பார் மனிதருள் தினகரன் போன்றார். வைகுந்தத்திலே வாழ்வோர் நித்தியசூரிகள். பாரதத்தில் வாழ்ந்த பலர் நரசூரியர். குணியின் குணத்தைக் காப்பாற்றுவது வீரியம். வீரியம் கெட்டால் குணம் அழியும். குணியும் அங்ஙனே. மருந்து விற்போர் மருந்தின் வீரிய காலத்தை மருந்துக்குரிய புட்டியின் மேல் குறித்தல் வேண்டும் என்பது அரசாணை. மருந்தாய், மந்திரமாய் விளங்கும் "வந்தே மாதரம்" என்றுமே வீரியம் குன்றாத ஒன்று. அது நிரந்தரம் வாழும்; வாழ வைக்கும்.

சஞ்சீவி பர்வதச் சாரலில் முளைக்கும் மூலிகையின் சாறு போன்றது வீரியம். இச்சாவா மூவா மருந்து கொண்ட எழுத்துருவமே 'வந்தே மாதரம்'.

உடல் சோர்ந்தபோது கைகொடுத்துத் தூக்கிவிடுவது உள வீரமே. உடல் நொந்தபோதும், மனம் வெந்தபோதும், புத்துயிர் அளிப்பது ஆன்ம வீரமே.

இதையறிந்த நம் நாட்டினர் என்றும் உவந்தே 'வந்தே மாதர' மந்திரத்தை ஓதுவர்.

தனி வழிபாட்டிலும் கூட்டு வழிபாடு சிறப்புடையது. ஆகவே, வாழ்விலும் ஊழ் மாறுபாட்டால் விளையும் சாவிலும் ஒன்றாய் நின்று ஓதப்படவேண்டிய ஒரு தனி மந்திரம் 'வந்தே மாதரம்'. இது உள ஈடுபாட்டோடு தோத்தரித்து விண்ணப்பிக்கப்படவேண்டிய மகாமந்திரம்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. வந்தே மாதரம்

ஆரிய மென்ற பெரும்பெயர் கொண்டவெ
மன்னையின் மீது திகழ்
அன்பெனு மென்கொடி வாடிய காலை
யதற்குயிர் தந்திடுவான்
மாரியெ னும்படி வந்து சிறந்தது
வந்தே மாதரமே.
மானுயர் பாரத தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே.
வீரிய ஞான மரும்புகழ் மங்கிட
மேவி நலாரியரை
மிஞ்சி வளைந்திடு புன்மையி ருட்கணம்
வீவுற வங்கமகா
வாரிதி மீதிலெழுந்த இளங்கதிர்
வந்தே மாதரமே.
வாழிந லாரிய தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே. 1

காரடர் வெண்முடி வானி மயந்தரு
கங்கை வரம்பினிலும்
கன்னியை வந்தொரு தென்றிசை யார்கலி
காதல் செயாயிடையும்
வீரர்கள் மிஞ்சி விளங்கு புனாமுதல்
வேறுள வூர்களிலும்
விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
வியந்திடு மந்திரமும்
பாரத தேச விரோதிகள் நெஞ்சு
பதைத்திடு மந்திரமும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாதக ரோதினு மேதக வுற்றிடு
　　பண்புயர் மந்திரமும்,
வார முறுஞ்சுவை யின்னற வுண்கனி
　　வான மருந்தெனவே
மாணுயர் பாரததேவி விரும்பிடும்
　　வந்தே மாதரமே.

இப்பாடலில் பாரத மாதாவின் திருப்பெயர் 'ஆரியம்' என்ற ஒன்று என்று கூறப்படுகிறது. இந்த ஆரியம் என்ற பெயர் ஒரு பெரும் பெயர் என்று பாரதியாரால் விதந்து ஓதப்பட்டிருக்கிறது. பெரும் பெயர் என்பதற்கு மகாவாக்கியம் என்று பொருள். வேதாந்த நுண்பொருளைச் சாற்றும் சில வாக்கியங்களுக்கு மகா வாக்கியம் என்று பெயர். இவ்வாக்கியங்களில் ஒன்றான 'தத்துவ மசி' என்பதை மகாகவி பெரிதும் போற்றுகின்றவர். 'பாரதி அறுபத்தாறு' என்ற பெயரில் வெளியாகிய பாடலில் முடிவிலே கூறப்படுகிற செய்தி இதுதான்:

"பூமியிலே வழங்கிவரு மதத்துக் கெல்லாம்
பொருளினை நாமிங் கெடுத்துப் புகலக் கேளாய்;
சாமி நீ; சாமி நீ; கடவுள் நீயே;
தத்வமஸி; தத்வமஸி; நீயே யஃதாம்"

பெரும்பெயர் என்பது மகாவாக்கியத்தைக் குறிக்குமா என்று ஐயுறல் வேண்டா. சிவஞான போதத்திற்கு அமைந்த பாயிரத்தில் "பெரும் பெயர்க் கடவுள்" என்ற சொற்றொடர் வருகின்றது. இதன் பொருள் யாதெனின் மகா வாக்கியங்களால் நிறுவப்பட்ட கடவுள் என்பதாகும். "ஆரியம் என்ற பெரும் பெயர் கொண்ட எம் அன்னையின் மீது திகழ் அன்பெனும் மென்கொடி" என்று கொடிமீது படர்ந்த கொடியைச் சுட்டிக்காட்டுகிறார் மகாகவி. அதாவது பாரதமாதா என்ற மரத்தின்மீது படரும் கொடிக்குப் பெயர் அன்பு என்பதாகும். இவ்வன்புக்கு ஆதாரமாக இருப்பவர் பாரதமாதா. பாரதமாதா வாடினால் இக்கொடியும் வாடிவிடும். இந்தக் கொடி மென்கொடி என்றே பேசப்படுகிறது. இக் கொடி வாடினால் பாரத மாநிலமே வாடிநிற்கும். ஆக, இந்த வாட்டத்தைப் போக்க ஊட்டப் படவேண்டிய மருந்து யாது? என்றால் அது 'வந்தே மாதரம்' என்பதே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுவே, வாடிய கொடிக்கும், அவ்வாட்டம் கண்டு தளரும் மரத்திற்கும் உயிர்தரும் உன்னத ஔடதம். வறண்டு இருக்கும் மண்ணுக்கு வானம் கனிவதுபோல் சாம்பி நிற்கும் கொடிக்கும் அதைத் தாங்கி நிற்கும் தருவிற்கும் மழையென வந்து உயிர் நல்கும் மந்திரம் வந்தே மாதரமே. இம்மந்திரமே மாண் உயர் மந்திரம் என்றும், உயர்வற உயர்நலம் உடைய மந்திரம் என்றும், இத்தன்மைத்தான இதுவே பாரததேவியின் மந்திரம் என்றும் மகாகவி அருளுகிறார்.

தர்மத்தின் வாழ்வுதனை, சூது அப்பப்போதும் கௌவும். அதுபோலே இருட்கணம் பல்கிப் பெருகி புன்மை விளைத்திடும். ஆரியரிடம் இயல்பாகவே வீரியம், ஞானம், அரும் பெரும் புகழ் என்பன மண்டிக் கிடக்கும். ஆனால் இருட்கணத்தால் அவர்கள் சூழப்பட்டுவிட்டால் அவர்களுடைய குணநலன்கள் மங்கிவிடும். மங்குவதற்குக் காரணம் இருட்கணம் என்று கண்டோம். இது வெறும் இருளென்று. இது இருள் கூட்டமாம். தங்கு திண் கரிய காளிமை சிவணிய இருட்செறிவின் கூட்டமாம். இதை சூரியோதயமே அகற்றமுடியும். இவ்விருட்கணம் சூழ்ந்திருப்பது நல்லாரியரை. ஆரியருள்ளும் நன்மை அறியாதாரை இவ்விருட்கணம் சூழ்ந்திருந்தால் அதுபற்றி நாம் கவலை கொள்ளல் வேண்டா. ஆனால் நல்லாரியருக்கு எவ்விதத்திலும் இடையூறு தோன்றுதல் கூடாது. சொற்களை மிகவும் கவனத்தோடு கையாளுகிறவர் மகாகவி. இங்கு நல்லாரியர் என்று கூறும் அவர் பிறிதோர் இடத்தில் "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றிமிழர்" என்று குறிப்பிட்டிருத்தல் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். நற்றமிழர் நல்லாரியரே என்பது மகாகவியின் சித்தாந்தம். இவர்களைப் புன்மையில் அழுத்தும் இருட்கணம் தோன்றுங்கால், அது நீங்குமாறு ஒரு சூரியோதயம் தோன்றவேண்டும். அங்ஙனம் வங்க மகாகடலிலே எழுந்த இளங்கதிர் வந்தேமாதரமாம். இம்மந்திரோதயம் மகத்தானது.

பாரதமாதா திருப்பள்ளியெழுச்சியில் மகாகவி, "பொழுது புலர்ந்தது யாஞ்செய்த தவத்தால்; புன்மையிருட்கணம் போயின யாவும்" என்று பாடியிருக்கிறார். இங்கு சொல்லப்பட்ட புன்மை இருட்கணமே 'வந்தே மாதரம்' பாடலிலும் கூறப்பட்டிருக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புன்மை இருட்கணம் என்பது கூட்டம் கூட்டமாக செறிவோடு படையெடுக்கும் பகை என்பதைக் காட்டவந்த மகாகவி, இருட்கணம் போயிற்று என்று சொல்லாமல் போயின' என்று பன்மையில் பேசுகிறார்.

ஆயிரம் காக்கைக்கு ஒரு கல். இருட் கணங்களுக்கு ஒரு சொல். அதுவே பாரதமாதாவைத் துயில் உணர்த்தப் பாடப்படுகின்ற சுப்ரபாதத்தின் மணிமுடிச் சொல். இதுவே நல் ஆரியதேவியின் மந்திரமாம்.

ஐம்பத்தாறு நாடுகளைக் கொண்ட பாரதம் முழுவதும் அங்கங்கும் மூலை முடுக்குகளிலும் முழங்கப்படும் மூல மந்திரம் வந்தே மாதரமே! செப்புமொழி பதினெட்டுடையாள் நம்மைச் செப்பச் சொல்லும் மந்திரமும் இதுவே. நான்குத் திக்குகளிலும் பரந்திருக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டை சாதித்துக் காட்டும் மந்திரம் இம்மந்திரம். கருமேகங்களால் சூழப்பட்டதும் வெண்முடி கொண்டதுமான இமயத்திலிருந்து இழிந்துவரும் கங்கைக் கரைகளிலும், தென்கோடியில் இந்து மகாசமுத்திரத்தால் சூழப்பட்ட கன்னியாகுமரியிலும் பெருவீரர்களின் தாயகமாகிய பூனாவிலும், வேறு பல் ஊர்களிலும் அன்போடு மக்களால் பயிலப்படும் மந்திரவித்தை வந்தே மாதரமே! இதைக் கேட்ட அளவிலே பாரத தேச விரோதிகள் நெஞ்சு பதைத்து வலி இழந்து மாழாந்து கிடப்பர். இம்மந்திரத்தைப் பாவிகள் ஓதினாலும் அவர்கள் புண்ணிய சீலர்கள் ஆவர். இம்மந்திரம் ஒரு மருந்து. தேன்போலும், பக்குவமான கனிபோலும் சுவை பயக்கும் இம்மருந்து அன்பெனும் பொருளால் ஆயது. இதனையே உயர்வற உயர்நலம் உடைய பாரத தேவியும் விரும்புகிறாள். கன்னியாகுமரி வரையும் ஒளி வீசுவது இம்மந்திரம். கருமஞ்சு சூழ்ந்திருந்தும், வெண்பனிப் போர்வையின் பெருமையால் ஒளிவண்ணமாகத் திகழும் இமயம் முதல், புனா, வேறு பல் ஊர்களிலும் பயிலப்படுவது இம்மந்திரவித்தையே! இது உண்ண உண்ணத் தெவிட்டாது. இஃதோர் தீங்கனி. இதில் உள்ள தேன் அன்பே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருஞ்சொற்களுக்குப் பொருள்:

மாண் (மாண்பு)	:	பெருமை
வாரிதி	:	கடல்
கார்	:	மேகம்
அடர்	:	செறிந்த
ஆர்கலி	:	சமுத்திரம்
விஞ்சை	:	வித்தை
வாரம்	:	அன்பு
நறவு	:	தேன்

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. வந்தே மாதரமா மந்திரமெங்கே?

விந்தைத் திலகரர விந்தரொடு பாலர்பதி
சிந்தைச் சிதம்பரமாஞ் செம்மலுமே - வந்திலரேல்
ஆதரமா மன்னை வளநாடெங் கேவந்தே
மாதரமா மந்திரமெங் கே.

தமிழிலக்கியத்தில் நன்கு பயன்படுத்தப்பட்ட ஒருவகைச் செய்யுள் இப்பாடலுக்கு ஆசு ஆக அமைந்திருக்கிறது. உதாரணமாக சில பாடல்களைக் காண்போம்:

1. சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம்சுந்தரனும்
   சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
   வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
   எந்தைபிரான் அஞ்செழுத்து எங்கே? - பழம்பாடல்.

2. ஆரறிவார் நீதிவழி யாரறிவார் சித்திமுத்தி
   யாரறிவார் நற்றவங்க ளன்பனைத்தும் - பாரெவர்க்குங்
   கர்த்தன் கமலையில்வாழ் ஞானப்ர காசனெனும்
   அத்தனென்போல் வந்தில னால். - சிவபோக சாரம்.

3. மாலெங்கே வேதன்உயர் வாழ்வெங்கே இந்திரன்செங்
   கோலெங்கே வானோர் குடிஎங்கே - கோலஞ்சேர்
   அண்டமெங்கே அவ்வவ் வரும்பொருள் எங்கேநினது
   கண்டம் அங்கே நீலமுறாக் கால்? - திருவருட்பா.

சைவருக்கு மாமந்திரம் திருவைந்தெழுத்து. இந்திய விடுதலைக்கான மாமந்திரம் வந்தே மாதரம். இவ் வந்தே மாதரம் ஐம்பெரும் தேசியத் தலைவர்களால் ஏற்றவும் போற்றவும் பெற்றது.

இவ்வெண்பாவின் முதல் இரண்டு அடிகளில் அவ்வைவர் திருப்பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் : (1)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விந்தைத் திலகர், (2) அரவிந்தர், (3) பாலர், (4) பதி, (5) சிந்தைச் சிதம்பரமாம் செம்மல். திலகரே, 'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' என்று குரல் கொடுத்தவர். திலகர் பாரத ராணியின் திலகமாவார். அவரை மகாகவி, திலகமுனிவர்கோன் என்றே நமக்கு அறிவிக்கின்றார். "இலகு பெருங்குணம் யாவைக்கும் எல்லையாம் திலக முனிக்கு ஒத்த அடிமைக்காரன்" என்று மகாகவி அடிமை ஓலைச்சீட்டு வரைந்து கொடுத்திருக்கிறார்.

திலகர் பெருமையைப் பேசவந்த மகாகவி, "அஞ்செழுத்தினை சைவர் மொழிதல் போல் அன்பொடு ஓதும் பெயர்உடை ஆரியன்" என்று வருணித்துள்ளார். மாட்சிமை அனைத்திற்கும் கருவூலமாகத் திகழ்தலே திலகரிடம் நாம் தரிசிக்கும் விந்தையாகும். சுய ராஜ்யம் வேட்ட வீரர்களுள் இயல்பாகவே முதலிடம் வகிப்பவர் திலகர்.

அடுத்து அரவிந்தர் போற்றப்பெறுகிறார். இவர் தாய் மொழியான வங்காளமொழியைக் கற்கவோ பேசவோ கூடாது என்று கருதியவர் இவர் தந்தை. அவர் ஆங்கில வெறி படைத்தவர். தம் பிள்ளைகள் அம்மொழியில் சர்வாதிகாரம் பெறவேண்டும் என்று வெள்ளையர் பள்ளிகளுக்கே தம்பிள்ளைகளை அனுப்பியவர். அரவிந்தர் இங்கிலாந்துச் சீமையில் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலம், பிரெஞ்சு, கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளில் பெரும்புலமை எய்தினார். இங்ஙனம் மகத்தான தகுதிகளை தேடித் தக்கவைத்துக் கொண்ட தன் மைந்தனுக்கு மடைமாற்றம் பழக்கித் தந்து தன்சேவைக்கு ஆட்படுத்தினாள் பாரதத்தாய். பாரதநாடு வந்தபிறகே அரவிந்தர் வங்கமொழியும் வடமொழியும் பயின்று அம்மொழிகளிலும் மிகச் சிறந்த புலமை பெற்றார். மாதம் முன்னூறு ரூபாய் சம்பளமாக பரோடா சமஸ்தானத்தில் பணியாற்றி வந்தார். அதை உதறிவிட்டு கல்கத்தாவில் தோற்றுவிக்கப்பட்ட தேசீயக் கல்லூரியின் முதல்வராகப் பணியேற்றார். அப்போது அவர் பெற்ற மாதச் சம்பளம் ரூபாய் நாற்பத்தைந்து.

பாலர் என்பார் விபின்சந்திர பாலராவார். இப்பெருமகனை சென்னைக்கு அழைத்து வந்தவர் மகாகவி. பாலர் கலந்துகொண்ட கடற்கரைக் கூட்டத்தில் தமிழில் தேசீயப் பாடல்களைப் பாடியவர் மகாகவி. இந்தியாவையும், இந்து சமயத்தையும் உலகுக்கு நல்ல முறையில் அறிவித்தவர் பாலர். இவர் ஒரு தியாக சீலரும் ஆவார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதி என்பார் லாஜபதி ஆவார். இவரைப் பஞ்சாபின் சிங்கம் என்பர். இந்திய மண்ணில் இவர் தங்கினாலே தங்கள் ஆட்சி ஆட்டம் கண்டுவிடும் என்று இவரை வெளிநாட்டில் சிறையில் வைத்தனர். இவர்மீது துதியாக மகாகவி பாடிய பாடலிலிருந்து ஒரு நறுக்கு:

“விண்ணகத்தே யிரவிதனை வைத்தாலும்
அதன் கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே யொளிதருதல் காண்கிலமோ?
நின்னையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெலா மறக்கொணா தெம்
எண்ணகத்தே, லாஜபதி, யிடையின்றி
நீவளர்தற் கென்செய் வாரே?”

மகாகவி, வ.உ.சிதம்பரம் அவர்களை “சிந்தைச் சிதம்பரமாம் செம்மல்” என்று வருணிக்கின்றார். பரஞான வெளியே சிதம்பரமாம். நெல்வேலிச் சைவராகிய பிள்ளையவர்களை சைவ பரிபாஷையில் பாரதியார் போற்றுகிறார். பிள்ளையவர்களின் சிந்தையே சிதம்பரம் என்கிறார். நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை நாட்டியவர் சிதம்பரனார். “கொடுமைகளைக் கண்டு மலைவுறோம் - சித்தம் களையுறோம்” என்று முழங்கி சுதந்திர ஆவலை அங்கங்கும் வெளியிட்டவர் இப்பெருமகனார்.

மேற்சொன்ன ஐவரே பாரதநாட்டினை வாழ்விக்க வந்த ஐம்பேராயத்தினர். இவர்களாலே மாமந்திரமாம் வந்தே மாதரம் விம்மி விகசித்து விண்ணெங்கும் ஓடிப் பரவிற்று. அதனாலே மண்ணகம் வாழ்ந்தது. மண்ணகம் வாழவே பாரதநாடும் வளமுற்றது. அதன் மக்களுக்கு ஆதாரமாகவும் திகழ்ந்தது. மகாகவியின் பாடலின் செய்தி என்னவென்றால், பாரதத்தின் நல்வாழ்வு ஐவர் தந்த கொடை என்பதாம்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. நாட்டு வணக்கம்

ஸ்வதேச வந்தனம்

எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே - அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே - அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே - இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ? - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? 1

இன்னுயிர் தந்தெமை யீன்றுவளர்த் தரு
ளீந்தது மிந்நாடே - எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
யறிந்தது மிந்நாடே - அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே - தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடியில்
போந்தது மிந்நாடே - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? 2

மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே - அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே - மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே - பின்னர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே - இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ? 3

உறுதிப் பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. ஒவ்வோர் உயிரும் இன்பமே வேட்டு வாழ்கிறது. இவ்வின்பம் என்பது சிற்றின்பமே. ஆனாலும், கலவியின்பம் ஒன்றே சிற்றின்பம் என்று கொள்ளுதல் கூடாது. ஒவ்வொரு பொறி வழியே பெறப்படும் புலனின்பம் ஒவ்வொன்றும் சிற்றின்பமே. இவற்றுள் தலைசிறந்தது சேர்க்கை இன்பம் என்பது வள்ளுவர் பெருமானின் கருத்து.

சிற்றின்பத்திற்கும், பேரின்பத்துக்கும் நெடுவாசி உண்டு. பொறி புலன்களால் அனுபவிக்கப்படுவது சிற்றின்பம். பொறி புலன்களைக் கடந்த இன்பம் பேரின்பம். சிற்றின்பம் என்பது மனதுக்கு அதீனம் - அதாவது உட்பட்டது. பேரின்பம் என்பது மனதுக்கு அதீதம் - அதாவது அப்பாற்பட்டது.

உடலோடு கூடிய நிலையில் பெறப்படும் இன்பங்களுள் தலையாயது சேர்க்கை இன்பமே. இது ஏதோ நாம்தாம் புதிதாக அனுபவிக்கின்றோம் என்று எண்ணலாகாது. காலம் காலமாக நிகழ்ந்து வருவது இவ்வின்பம். காவியங்கள், நாடகங்கள் போன்றவற்றைப் படிக்குங்கால் தலைவன், தலைவியோடு தனித்து இருந்து சையோகித்த இன்ப வருணனை எதிர்ப்படும். அத்தலைவனும், தலைவியும் நம் மூதாதையர் என்ற மரியாதை எண்ணம் அப்போது நம் மனத்தில் தோன்ற வேண்டும். வருணனைகளைப் படித்து கிளுகிளுப்படைதல் தவறு. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவினர் என்றே எண்ணல்வேண்டும். தந்தையும், தாயும் மகிழ்ந்து குலாவியதால் ஆவிக் கலப்பில் மக்கள் என்பார் உளராயினர். பாரத நாட்டிலே மூன்றாம் புருடார்த்தத்தை முற்றுமாகவே நம் முந்தையர் பெற்றுத் துய்த்தனர். காலங்காலமாக, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அவர்களுடைய நல்லின்ப வாழ்வு இம்மண்ணிலே தொடர்ந்து நிறைவுற்றது. நிறை வாழ்வு வாழ்ந்ததனால் சிந்தையில் வளம் கூடிற்று. சிந்தை வளம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எண்ணங்களாக வெளிவந்தன. நல் எண்ணங்களே நல்வாழ்வின் தூண்கள். "நான்கு புறங்களிலிருந்தும் நற்சிந்தனைகள் நம்மை நாடி வருதல் வேண்டும்" என்று வேதம் பிரார்த்தனை புரிகின்றது. நம் முந்தையோர் சிந்தனைகளில் நல் எண்ணங்கள் மலர்ந்து இந்நாட்டின் காற்றில் கரைக்கப் பட்டிருக்கின்றன. அவையிற்றை இன்றும் நாம் சுவாசிப்பதால் ஒரு சக்தி பிறக்குது நம் மூச்சினிலே. ஆகவே, இத் தாய்நாட்டை வாழ்த்தி வணங்குதல் இம்மண்ணின் மைந்தர் ஒவ்வொருவருடைய கடமை ஆகும். வணங்காதிருத்தல் கூடாது, முடியாது.

சீதை - இராமன் இல்வாழ்வு, நளன்-தமயந்தி ஈடுபட்ட கேளிக்கைகள், துஷ்யந்தன் - சகுந்தலை அனுபவித்த சுகங்கள்; இவை போன்றவை இந்நாட்டின் அமர இலக்கியங்களில் அழியா இடம் பெற்றுள்ளன. அவையிற்றை ஓதும் ஒவ்வொருவனும் தன் முந்தையர் பெற்ற இன்பம் தன்மீது ஆதல் வேண்டும் என்று அம்முந்தையரை வணங்கிக் கேட்டுப் பெறுதல் வேண்டும். நம்முடைய தாயும் ஒரு காலத்தில் குழந்தையாகத் தோன்றி, மழலையும் குதலையும் செப்பிச் சிலிர்த்தது உண்மைதானே! அத்தாயும் தன் காதலனோடு அரமியத்தில் சந்தித்துக் களித்ததும் மெய்தானே! அவளும் நீரில் குடைந்து குடைந்து ஆடி இன்புற்றது சத்தியந்தானே! இப்படி நம் முந்தையோருக்கும் நமக்கும் இன்னுயிர் தந்து பேணி வளர்க்கும் இந்நாட்டை "வந்தே மாதரம், வந்தே மாதரம்" என்று வணங்க வேண்டாமா?

"ஸ்வதேச வந்தனம்" என்று மகுடம் பெற்று இருக்கும் இப்பாடலில் மகாகவி, நம்முந்தையர் அங்கு வாழ்ந்த இன்ப வாழ்வு பற்றியே பன்னிப் பன்னிப் பேசுகிறார்.

அம் முன்னோர் இன்பம் சிவணிய வாழ்வை இல்லறத்தில் கண்டனர். அறத்தான் வருவதே இன்பம் என்பது அவர்கள் பெற்ற அனுபூதி. இதையே மகாகவி, "மங்கையராய் அவர் இல்லறம் நன்கு வளர்த்ததும் இந்நாடே" என்று பாடிப் பரவசம் எய்துகிறார். மனை மாட்சியின் பயன் நன்மக்கட்பேறு. ஆகவே, மகாகவி கூறுகிறார், "அவர் தங்க மதலைகள் ஈன்று அமுதூட்டித் தழுவியது இந்நாடே" என்று ஜெயபேரிகை கொட்டுகிறார். நன்மக்களை இரட்சிப்பவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆண்டவனே. அவன் எங்கெங்கும் குடியிருக்கிறான் என்றாலும், சிறப்பாக அவன் வதிகின்ற பதி, ஆகமவழி எழுப்பப்பட்ட கோயிலாகும். அப்படிப்பட்ட கோயில் இல்லாத ஊரில் குடியிருத்தல் பாவம். அங்கங்கும் பலபதிகள் சிறப்புற்று ஓங்க, மக்கள் உயர்வு எய்துதல் ஒருதலை. உடலால் பெறக்கூடிய உறுதிப் பொருள்கள் மூன்றினையும் பெரியோர் பெற்று, இயற்கையுற்றபோது அவர்கள் முடிந்த முடிவான வீட்டுலகும் பெறுவர். ஆவி விடுதலை பெற்ற நிலையில் அவருடைய அழிந்த சடலங்களும் அவர்கள் பிறந்த மண்ணிற்கு வளங்கூட்டும். இதையே மகாகவி, "அங்கவர் மாய அவர் உடல் பூந்துகள் ஆர்ந்ததும் இந்நாடே" என்று அருளியுள்ளார். நேருவும் தமது கடைசி விருப்பமாகக் கூறியது நினைவுக்கு வருகிறதல்லவா? அவர் மாய, அவர் பூந்துகள் நாடெங்கும் தூவப் பெற்றது.

பாடலின் செய்தி : பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. எங்கள் நாடு

மன்னு மிமய மலையெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கிலை யீடே 1

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர்பிரா னருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே 2

இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி யினிமண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்
கன்னலுந் தேனும் கனியுமின் பாலும்
கதலியும் செந்நெலு நல்குமெக் காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவ மிஃதை யெமக்கிலை யீடே. 3

மலைகளில் உயர்ந்த மலை இமயமலை. எப்போதும் பனி படர்ந்திருக்கும் மலை இம்மலை. ஆகவே, இதன் புனிதத் தன்மைக்கு எல்லை இல்லை. ஷேக்ஸ்பியர் கூறியுள்ள "As chaste

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

as the unsunned snow" என்ற சொற்றொடரின் பெருமையை இங்கு நினைவுகொள்ளல் வேண்டும். புனிதத்தின் ஐந்யஸ்தானமான இமயமலையை வெள்ளிமலை என்பர். மேருமலையைப் பொன்மலை என்பர். என்றும் நிலைபெற்றிருக்க வல்லதாய் இருப்பதால் இமய மலையை மன்னும் இமயமலை என்று மகாகவி வருணிக்கிறார். இம்மாநிலத்தில் அதாவது இப்பிரபஞ்சத்தில் இதுபோல் வேறு ஒருமலை இல்லை. மாநிலம் என்ற சொற்றொடர் பலபொருள் காட்டும் என்பதை முதல் பாட்டின் விளக்கத்தில் கூறியிருக்கிறோம். புண்ணிய பாரதத்தின் வட எல்லையாக விண்ணளாவி நிற்கும் இம்மலைத் தொடரில்தான் முக்கட் பெருமானாகிய சிவனார் வதியும் கயிலை இடம்பெறுகிறது. இது பூ கயிலாயம் ஆகும். பரமேட்டியின் நிரந்தர வாசத்தலம் ஸ்ரீ கயிலாயமாகும். மகாகவி ஒரு மிகச்சிறந்த சிவபக்தர். திருமூலரைப் போல் அன்பே சிவம் என்ற கொள்கையை அவர் கடைபிடிப்பவர். பிறிதோரிடத்தில், "அன்பு சிவம், உலகத் துயர் யாவையும் அன்பினில் போகும்" என்று அவர் அருளியுள்ளார். இவ்வன்பின் பிறப்பிடமே இமயமலை.

இம்மலையிலிருந்து தெய்வ நலமுடைய நதிகள் தோன்றுகின்றன. ஆறுகளுக்கு அரசு என்று போற்றப்படும் கங்கை இம்மலையில் தான் பிறக்கின்றது. இப்பிறப்பிடமே கங்கோத்ரி என்று ஏற்றப்படுகிறது. இதுவே தேவாரம் போற்றும் அநேகதங்காபதம் என்னும் திருத்தலமாகும்.

வேதகாலத்தில் சீரும், சிறப்போடும் செழித்துப் பரந்தோங்கிய சரசுவதி நதி சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு சுவறிப் போயிற்று. அதன் பின்னர் சகலவிதமான சிறப்புகளோடும் ஒளிர்ந்து வருவது இக்கங்கையே. "தான் போம் வழியெலாம் தன்மமொடு பொன் விளைக்கும் வான்போந்த கங்கை" என்று இவ்வாறு மகாகவியால் மேலும் போற்றப்பட்டிருக்கிறது. கங்கையின் மாண்பு இங்குள்ள எந்நதிக்கும் இல்லை. சீதையெனும் கற்பின் கனலி அவதரித்த பின்னர் அவளழகுக்கு முன்னால் ஏனைய அழகிய மாதர்கள், அப்ஸரஸ்கள், அணங்குகள் முதலியோர் தங்கள் தங்கள் சோபையை இழந்து நின்றனர். இதற்கு உதாரணம் தரவந்த கம்பர் என்ன கூறுகிறாரென்றால், கங்கையானது விண்ணிலிருந்து பூமிக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வந்தபிறகு இப்புவியிலுள்ள எல்லா நதிகளும் தம்முடைய திறல் இழந்து சாதாரண தீர்த்தங்கள் ஆயின என்கிறார்.

“குணங்களை என் கூறுவது? கொம்பினைச்
சேர்ந்து அவை உய்யப்
பிணங்குவன; அழகு இவளைத் தவம்
செய்து பெற்றது காண்;
கணங்குழையாள் எழுந்த கற்பின்
கதிர்வானில் கங்கை எனும்
அணங்கு இழியப் பொலிவு இழந்த
ஆறு ஒத்தார் வேறு உள்ளார்”

என்பதே கம்பர் தரும் காட்சி.

இக் கங்கையும், தென்திசை கங்கையான கெடிலமும், கங்கையிற் புனிதமாய காவிரியும் பாய்ந்தோடும் இப்பாரதத்தில் தோன்றிய நூல்களே பன்னரு உபநிட நூல்கள். இவற்றிற்கு இணையான நூல் வேறு எங்கும் தோன்றவில்லை. இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

“என் வாழ்வு, சாவு என்ற இரண்டிற்குமான சுகானுபவமே இவ்வுபநிடதங்கள்” என்று கூறிப் போந்தார் ஜெர்மன் நாட்டு ஞானியான ஷோபன்ஹர். உபநிடதங்களே வேதாந்தம் என்று பேசப்படும். வேத விருட்சத்தின் உச்சிக் கொம்பரில் பழுத்து ஒளிரும் பரமஞானப் பழங்களே உபநிடதங்கள். ஆக, பல்வகை வளனும் மண்டிக்கிடக்கும் நாடு நம் பாரத நாடு, இதில் பிறக்கக் கொடுத்து வைத்த நாமும் ஈடு இணை அற்றவர்களே.

மகாகவி இந்நாட்டை ‘மாரத வீரர் மலிந்த நன்னாடு’ என்று இனங் காட்டுகிறார். ரதத்திலிருந்து வீரம் விளைப்போர் நான்கு வகையினர். அவருள் தலையாயவர் மகா்ரதர். தான் ஒருவனாகி, பதினாயிரம் வீரரை எதிர்த்துப் பொரவல்ல தேர்வீரன் மகாரதன் ஆவான். தான் ஒருவனாக நின்று பல்லோரை எதிர்த்துப் பொரவல்லவன் அதிரதன். பிறிதொரு தேர்வீரனோடு தோலாமல் போர்புரியவல்ல தேர்வீரன் சமரதன். ஒருவனோடு போர்புரிந்து பின்னடையும் தேர்வீரன் அர்த்தரதன் ஆவான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டவர் அணிவகுப்பில் சிகண்டி, சாத்தகி, திட்டத்துய்மன், விராடர்கோன், தருமன் ஆகியோர் மகாரதர் அதிபதிகள். சிவேதன், வீமன், விஜயன், அபிமன்யு ஆகியோர் அதிரதர் அதிபதிகள். யாகசேனன், உதாமன், உத்தம பானு ஆகியோர் சமரதர் அதிபதிகள். நகுலன், சகாதேவன் போன்றார் அர்த்தரதர் அதிபதிகள், துரியோதனன் படையில் சோமதத்தன், வரதத்தன், பகதத்தன், துன்மருடனன் ஆகியோர் மகாரதர் அதிபதிகள். பீஷ்மர், துரோணர், அசுவத்தாமா, பூரிசரவா ஆகியோர் அதிரதர் அதிபதிகள். கிருபன், சகுனி, சல்லியன், சயத்ரதன் ஆகியோர் சமரத அதிபதிகள். விருடசேனன், துரியோதனனின் 99 தம்பிகள் அர்த்தரத அதிபதிகளே. பீஷ்மர் வேண்டுமென்றே கர்ணனை அர்த்தரத அதிபதி என்று கூறவே, கோபமுற்ற கர்ணன் பீஷ்மர் சாகும் வரையில் யுத்தத்தில் பங்கு கொள்ளமாட்டேன் என்று கூறிவிட்டான். மாரதன் என்பான் ஒரு தனி மனிதன் ஆனாலும் அத்தனிமனிதன் ஒரு பெரும் படைக்கு நிகராவான். மறத்திலே சிறந்த மாரதர் மலிந்த நன்னாடு இந்நாடு, ‘மாரதவீரர் மலிந்த நன்னாடு என்றே மகாகவியின் போற்றி அமைந்து இருக்கிறது. மலிந்த எனும் சொல், வளப் பெருக்கத்தைக் காட்டும். நம்பி ஆரூரரும், “கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பனுக்கடியேன்” என்று கூறியுள்ளார். இது போலவே அறத்திலே சிறந்த மாமுனிவர் பலர் வாழ்ந்த பொன்னாடு இந்நாடு.

இசையால் இசைகொண்ட இந்நாடு நாரதகான நலந்திகழ் நாடு. இசைத்துறையில் எல்லையற்ற புலமையோடு விளங்கியவர் நாரதர். அவர் கையகத்தே என்றும் விளங்கிய யாழினுக்குப் பெயர் மகதி என்பதாகும். இவரை வில்லிபுத்தூராழ்வார் “சரிகம பதநி தண்டு தைவரும் நாரதர்” என்று போற்றுவார். தெய்வநலங்கனிந்த இசைப் பெருக்கை உடைய இந்நாடு நல்லன யாவையும் நாடுறு நாடு. இத்தருணத்தே காஞ்சி மகாமுனிவர் அருளிய வாசகத்தை நினைவிற் கோடல் நலம் பயக்கும். அவர் சொன்னார்: “உனக்குப் பிடித்ததை நாடி நீ செல்லாதே. எவை எவை நல்லனவோ அவையிற்றை நாடி நீ செல்வாயாக.” இதுவே வேதத்தின் பிரார்த்தனையும் ஆகும். இந்நன்னாட்டில்தான் ஞானம் பூரணமுற்றது. கருவிலே திருவுடையவராய் இறைவனால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றோராய் சிவஞானசம்பந்தராய் பலப்பல ஞானிகள் இந்நாட்டில் அவதாரம் செய்திருக்கிறார்கள். இஞ்ஞானியருள் புத்தரும் ஒருவர். திருமாலின் தசாவதாரத்தில் புத்தாவதாரம் அடங்கும் என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கீதகோவிந்தம் பாடிய ஜெயதேவரின் மதம். சங்கர பகவத்பாதர் புத்தரை சந்நியாசிகளின் சக்கரவர்த்தி என்று போற்றியுள்ளார். இத்தகு புத்தர்பிரான் அருள்பொங்கிய நாடு பழம்பெரு நாடாகிய நம் பாரத நாடு. இந் நாட்டில் பிறக்கக் கொடுத்து வைத்த நம்மை நாமே போற்றவுஞ் செய்வோம். இதன் பெருமைகளைப் பாடிப் பரவுவோம். இப்படிப் பாடுகின்ற என்னுடைய "மணிநாவு வாழ்க" என்போம்.

இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஓர் உன்னத வீரனாக ஒளிர்தல் வேண்டும் என்பதே மகாகவியின் விழைவு ஆகும். ஆகவே, இம் மண்ணின் மைந்தன் என்றுமே அச்சம் அற்றவனாக இருத்தல்வேண்டும். இடுக்கண் வருங்கால் அதனைச் சிரித்து எரிக்கவல்ல திறல் அவன் கைவசப்படல் வேண்டும், "அச்சத்தைப் பொசுக்கி அங்கு சாம்பரும் இன்றியே" என்று மகாகவி பிறிதோரிடத்திலும் கூறியுள்ளார். இன்னல் வந்தபோழ்து ஆண்மையை இழப்பவனே ஏழை. அதாவது பெட்டைத் தன்மை படைத்தவன். "ஆண்மை தவறேல்" என்று இயம்புகிறது மகாகவியின் புதிய ஆத்திசூடி.

வீரன் என்பான் பிறர்நலம் பேணுபவன். அஞ்சும் கோழையே தன்னலத்திற்காக இழிதொழிலில் கூசாது இழிவோன். இந்நிலை இந்தியாவில் எங்குமே இருப்பதுகூடாது. ஆதலால் "தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்" என்கிறார் மகாகவி.

தாய்நாட்டின் தேவையென்றால் அனைத்தையும் அதற்குச் சமர்ப்பிப்பவனே நற்றாயின் உண்மையான சேய். பிறந்த மண்ணிற்காக உடல், பொருள், ஆவி என்ற மூன்றையும் அர்ப்பணிக்கச் சமைவாக உள்ளவனே உண்மையான தேசபக்தன். அத்தகு தேசபக்தர்கள் மலிந்த நாட்டில் கன்னலும், தேனும், கனியும், சுவைப்பாலும், கதலியும், செந்நெலும் மல்கும். அங்ஙனம் வளம் பெற்ற நாடே உன்னத ஆரிய நாடாகிய பாரதநாடு. இந்நாட்டிற்கு இணையான நாடு இவ்வொரு நாடுதான். ஆகவே "ஓதுவம் இஃதை எமக்கில்லை ஈடே."

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. பாரத நாடு

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

ஞானத்திலே பர மோனத்திலே - உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 1

தீரத்திலே படை வீரத்திலே - நெஞ்சில்
ஈரத்திலே யுப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 2

நன்மையிலே யுடல் வன்மையிலே - செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 3

ஆக்கத்திலே தொழிலூக்கத்திலே - புய
வீக்கத்திலே யுயர் நோக்கத்திலே
காக்கத் திறல் கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 4

வண்மையிலே யுளத் திண்மையிலே - மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறாத புலவர்
உணர்வினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 5

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாக்த்திலே தவ வேகத்திலே - தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார்தம்
அருளினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 6

ஆற்றினிலே சுனை யூற்றினிலே - தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பய னீந்திடுங் காலி
யினத்தினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 7

தோட்டத்திலே மரக் கூட்டத்திலே - கனி
யீட்டத்திலே பயி ருட்டத்திலே
தேட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர் நாடு - இந்தப் (பாரு) 8

பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்கிறார் மகாகவி. நல்ல நாடு என்பது யாது? பாரதந்தான். காரணம் என்ன? இது முற்காலத்தில் எல்லா வகைகளிலும் சிறந்து விளங்கிற்று. வள்ளுவரும் இதன் உன்னத நிலையை மனதில் கொண்டுதான், "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாட வளந்தரு நாடு" என்று அருளினார்.

வளங்களில் சிறந்த வளம் ஞான வளமே. மோனம் என்பது ஞான வரம்பு. ஆகவேதான் மகாகவி ஞானத்திலே - பரமோனத்திலே உயர் நாடு பாரத நாடு என்கிறார். மோனத்தை மோனம் என்று சொல்லாமல் பரமோனம் என்று மகாகவி கூறுவதற்கான காரணம் என்ன? மோனம் என்பது "வாய் மூடி பேசாதிருத்தல்" என்ற அளவிலே நிற்பதன்று. வாய் மூடினவர் மனத்திலும் உள்ளத்திலும் பேரிரைச்சல் கடல் ஒலி போல் சப்தமிட்டுக் கொண்டே இருக்கும். ஆகவே பௌதிக மௌனம் ஒருவகை லௌகிக சாதனமே. உண்மையில் மௌனம் என்பது யாதெனின் புறக்கரணச் சேட்டைகள் அந்தக் கரணங்களில் அடங்கி மற்று அந்நால்வகை அந்தக் கரணங்களும் ஆன்மாவிலே ஒடுங்கி அவ்வான்மாவும் பேரான்மாவாகிய இறைமையில் ஒன்றிவிடுதலாகும். இந்த மனோநாசமே (மனோ லயமன்று) பரமோனம் என்று மகாகவியால் சுட்டப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞானமும், பரமோனமும் தழைத்து நிற்கும் பாரதத்தில்தான் மானம் சிறந்து ஒளிர்கின்றது. இந்த மானத்தை ஒத்த சிறப்பு அன்னதானமே. "அன்னதானத்திற்கு அன்ன தானமில்லை" என்பது வாரியார் சுவாமிகள் வாக்கு. மகா கவியும் "வயிற்றுக்குச் சோறிடுதல் வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்றருளியுள்ளார்.

பாரத நாடு "கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே உயர்நாடு" என்றும் மகாகவியால் இனங்காட்டப்படுகிறது. அமுதாக நிறைந்த என்ற சொற்றொடரை அமுதாக நிறைந்த கானத்திலே என்றும், அமுதாக நிறைந்த கவிதையிலே என்றும் ஈரிடத்தும் கூட்டவேண்டும். கானம் என்பது இசை. சூழ்நிலை எப்படியிருப்பினும் இசை தோன்றவேண்டும். அப்படி அது தோன்றவேண்டும் என்றால், அது தோன்றும் இடம் சுதந்திர பூமியாக இருத்தல்வேண்டும். அடிமையால் பாடமுடியாது. அந்தோ, அவன் அழத்தான் செய்வான். பாரதநாடு நாரத கான நலந்திகழ்நாடு. கவிதையிலே உயர் நாடு. வேத ரிஷிகளின் கவிதை உலகப் பிரசித்தம். வேதம் என்றால் அறிவு என்றுதானே பொருள். அறிவார்ந்த செம்பொருளாளர்கள் பேருலகையே கவிதையில் சிமிழ்ப்புறச் செய்து இருக்கிறார்கள். ஆகவே இந்நாடு உயர்நாடு 'உயர்' என்னும் சொல் முக்காலத்தையும் காட்டும் வினைத்தொகை.

ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டு மக்களின் வீரத்தில் வெளிப்படும். வீரத்துள் வீரம் தீரமாகும். "மேரு சமான தீர" என்று இராகவனை தியாகப்பிரும்மம் போற்றுவார். உண்மையான வீரமும், தீரமும் உள்ள இடத்தில் நெஞ்சின் ஈரமும் காணப்படும். இவர்களாலே இவ்வுலகம் தழைக்கிறது. இவர்களின் ஒவ்வொரு செய்கையும் உபகாரமே. துஷ்ட நிக்கிரகமும், சிஷ்ட பரிபாலனமும் அறத்தின்பால்படும். இதையே வள்ளுவர், "அறத்திற்கே அன்பு சார்பென்ப அறிகிலார்; மறத்திற்கும் அஃதே துணை" என்று கூறியுள்ளார். நாடு வாழ்வதற்கு அந்நாட்டில் தோன்றும் உண்மைச் சாத்திரம் வழிவகுக்கும். அச் சாத்திரமும் சுருக்கமாகவும், சாரமாகவும் அமையும். சாத்திரம் என்றால் என்ன? "அதாவது, மதியிலே தழுவிய கொள்கை, கருத்து, குளிர்ந்திடு நோக்கம்" என்றே விளக்கம் தந்திருக்கிறார் மகாகவி. உயர் நாடு என்று சொன்னால் அது "சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு தரும்." ஞானம் பொய்த்த இடத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொய்மைச்சாத்திரம் புகுந்திடும். "பொய்மைச்சாத்திரம் புகுந்திடின் மக்கள் பொய்மையாகிப் புழுவென மடிவர்." ஆகவேதான் மகாகவி, "சாத்திரங் கண்டாய் சாதியின் உயிர்த்தலம்" என்று அருளியுள்ளார். மேலும், "ஈங்கிதிற் கலக்கம் எய்திடுமாயின் மற்றதன் பின்னர் மருந்தொன்றில்லை" என்று அருளியுள்ளார். ஞானமே நமது பண்டாரம். சாத்திரங்களே ஞான பண்டாரங்கள்.

நாட்டைப் பரிபாலித்தல் என்பது, அந்நாட்டில் நல்லனவற்றை நாட்டலும், அல்லாதனவற்றை ஓட்டலுமாம். சமுதாயத்தின் உடல் அதன் அரசு ஆகும். இந்த உடலில் நன்மையும், வன்மையும் பல்கியிருந்தால்தான் சமுதாயம் செல்வத்தோடு செழித்து நிற்கும். ஒருவகைத்தான செல்வமேயன்றி பல்வகைத்தான செல்வங்களும் ஒரு நாட்டில் பல்கிப் பெருக வேண்டும். இங்ஙனம் அமைந்த சமுதாயத்தைக் காப்பது வீரமே - அதாவது, மறத் தன்மையே. இவையெல்லாம் இந்நாட்டில் கொழிப்பதால், "நன்மையிலே, உடல் வன்மையிலே, செல்வப் பன்மையிலே, மறத் தன்மையிலே" உயர்நாடு இந்நாடு என்கிறார் மகாகவி.

எல்லைமீறி மறத்தன்மை வளர்ந்துவிட்டால் ஒருவகை மூர்க்கம் பிறக்கும். இது தவிர்க்கப்படவேண்டிய ஒன்று. இதை யாரால் தவிர்க்கமுடியும்? பொன்மயில் ஒத்திடு மாதராலே. மகாகவியும், "முல்லைச் சிரிப்பாலே எனது மூர்க்கம் தவிர்த்திடுவாய்" என்று கூறியுள்ளார். காளையொத்த மறவர் வாழும் நாட்டில் பொன்மயில் ஒத்த மாதர் தோன்றவே செய்வர். அம் மாதர்தம் கற்பினாலே அந்நாடு வளம்பெறும். அதன் புகழைப் பெருக்க, தங்க மதலையர் தோன்றுவர்.

உழவு, தொழில் என்ற இரண்டுமே வந்தனைக்குரிய. ஆக்கபூர்வமான நாட்டு நலனுக்குத் தொழில் வளமே ஆதாரம். தொழில் வளர்வது ஊக்கத்தாலே. இவ்வூக்கமும் எல்லோரிடத்தும் காணப்படவேண்டும். நேரே தொழில் செய்யாதாரும் தொழில் புரிவோரை உலோபமில்லாமல் உபசரித்துப் போற்றவேண்டும். இந்த ஊக்கம் தொழில் புரிவோருக்கு உயர்நோக்கமும் வழங்கும். அவர்களும் தோள்பூரித்து நிற்பர். இதைத்தான், "ஆக்கத்திலே, தொழில் ஊக்கத்திலே-புய வீக்கத்திலே, உயர் நோக்கத்திலே" நல்லநாடு இந்நாடு என்கிறார் மகாகவி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு நாடு எதைக் காத்து நின்றால் சிறந்து நிற்கும்? இதற்கு விடை மூன்று எழுத்துகள் கொண்ட ஒரு சொல். அதன் பெயர் "அமைதி". இவ்வமைதியைக் காப்பதற்கே ஒரு நாட்டில் சேனைகள் தேவைப்படும். ஆகவே, புய வீக்கத்திலே, உயர் நோக்கத்திலே காக்கத் திறல் கொண்ட மல்லர்தம் சேனைக்கடல் ஒரு நல்ல நாட்டின் அடிப்படைத் தேவை. மகாகவி போர்தொடுக்கச் சொல்லவில்லை. ஆனால், போர் வந்தால் பின்வாங்கமாட்டோம்; எம் வீரத்தால் என்றும் வெற்றியே பெறுவோம் என்பதை எதிரிகளுக்கு உணர்த்தச் சொல்கிறார். ஆகவேதான், தாம் அருளிய புதிய ஆத்திசூடியில் "சௌரியம் தவறேல்" என்றும், "ரௌத்திரம் பழகு" என்றும் மகாகவி அருளியுள்ளார். தேவைப்பட்டால் சீற்றங் காட்டத் தயங்கக்கூடாது.

கொடை என்பது பிறவிக்குணம். தொட்டிலிலே சிறுகுழந்தையாகக் கிடந்த கர்ணனுடைய தேஜஸைக் கண்டு அதனால் ஈர்க்கப்பட்ட சப்த ரிஷிகள் தங்கள் வான்செலவை நீக்கி, புவியிலிறங்கி அவன் தொட்டிலைச் சூழ நின்றனர். அவர்களைக் கண்டு மகிழ்ந்த குழந்தை தன் மகிழ்ச்சியை வெளியிடும் வகையில் தன் கழுத்திலிருந்த முத்து மாலையை அவிழ்த்து அவர்களிடம் நீட்டியது. இவ்வகை ஈகை பாரத மண்ணிற்குச் சொந்தம். வண்மையற்ற பெருஞ்செல்வம் வெறும் குப்பையும் கூளமும் ஆம். இதையே வள்ளுவர், "மிகுநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று" என்று கலுழ்ந்து கூறுகிறார். வண்மையற்ற நாடு நாடு அன்று. கோசல நாட்டில் வண்மையில்லை. ஆகவே அஃது ஒரு நாடு அன்று என்று வாசகர் எண்ணலாகாது. இப்படி எண்ணிய கம்பர், "வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்" என்று கூறியுள்ளார். வண்மையிலேயே வளர்ந்த நாடு பாரதநாடு. ஐயமிட்டு உண்டு கொழிக்கும் நாடு. எந்நிலையிலும் எக்கொடையையும் வழங்கச் சமைவாக உள்ள நாடு இந்நாடு. வண்மையே இந்நாட்டின் திண்மையும் ஆகும். ஆதலால், ஈகையால் மன ஈரம் பெற்றநாடு இந்நாடு. இதையே மனத் தண்மை என்கிறார் மகாகவி. கொடைமடம் பட்டபோதும் கூர்த்த மதிபடைத்த நுண்மையான நோக்கு படைத்த சான்றோரே இந்நாட்டின் குடிகளாவர். இவர்களே புலன்களை வென்ற புலவரும் ஆவர். உண்மையிலே தவறாத புலவர் ஆன இவர்தம் உணர்வினில் கதிக்கும் நன்மையால் நாடொறும் உயர்ந்துவரும் நாடு இந்நாடு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நெடுஞ்சேய்மையான காலந்தொட்டே உலகுக்கோர் ஒளி என்று இலகும் பாரதநாட்டில் யாகம், தவம், யோகம், பத்தி, அருள் போன்ற எல்லாச் செல்வங்களும் மண்டிக் கிடந்தன. யாகம் என்பதை விளக்கவந்த பாரதி, "உயிர் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்" என்று விளக்கியிருக்கிறார். ஊருக்குழைத்திடல் யோகம் என்ற புதிய துலக்கத்தை மகாகவி நமக்கு அருளியுள்ளார். தவசித்தி பெற்றால் அடையமுடியாதது ஏதுமில்லை. ஆகவே, "செய்க தவம், செய்க தவம்" என்று வேதமும், வேதவிழியைக் கைக்கொண்டு அருளாளர்களும் பன்னிப் பன்னிக் கூறும் திருவார்த்தைகளாம். வள்ளுவரும், "தவமும் தவமுடையார்க்கே" என்று அருளியிருப்பதை நுணுகி நோக்கி உணர்தல் வேண்டும். யாகம், யோகம், தவம் என்பன போகத்திற்கு விரோதமில்லை என்பதே மகாகவியின் மதம். போகம் என்பது அனுபோகம். இம்மண்ணில் பலபோகங்கள் உள. இப்போக அனுபோகங்கள் முடிவில் இறை அனுபோகத்தை அருளுபவை. இது எப்படி சாதிக்கப்படுகிறது என்றால் "பக்தியின் மூலம் என்று விடைதருகிறார் மகாகவி. "ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார்தம் அருளினிலே உயர்நாடு" இந்நாடு என்கிறார். ஆகம் என்ற சொல் உடலைக் குறிக்கும்; குறிப்பாக இதயத்தைக் குறிக்கும். ஆகத்திலே, அதாவது இதயத்திலே தெய்வபக்தி துளும்ப வேண்டும். முக்தியையும்விட மிகச்சிறந்தது பக்தியே. இதுவே வீடும் வேண்டா விறலினை அருளவல்லது. பக்தியுடையாரே இறைத்தொண்டராவர். இவர்களே நாயன்மார் என்றும் ஆழ்வார்கள் என்றும் நாமறிந்து கொள்ளவேண்டும். பக்தர்களின் இருப்பினாலே எங்கும் அருளாட்சி பரவும்.

அருள் மணக்கும் பாரத நாட்டில் பொருளுக்குப் பஞ்சமில்லை என்று மகாகவி காட்டுகிறார். இறைவனது செயற்கை நமக்கு இயற்கையாக அமைகிறது. ஆறு, சுனை, மலை முதலிய இயற்கையின்பால்படும். அப்படியென்றால் என்ன பொருள்? இவையெல்லாம் ஈசனார் கொடை என்று பொருள். பாரதநாட்டில் ஓடும் புண்ணிய நதிகள் பலப்பலவாகும். இந்நதிகளுக்கும் பிறவற்றிற்கும் தோற்றமாக அமைந்த சுனை ஊற்றுகளும் பலப்பலவாம். இவை இரண்டுமே இடம் பெற்று விளங்குவதற்கு ஆதாரமாக இருக்கும் மலைகளும் பலப்பலவாம். அம்மலைகளினின்றும் இறங்கி நம்மை மகிழவைக்கும் மந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாருதமும் இறையருளை நமக்கு நினைவூட்டுவதாம். குறிஞ்சி எவ்வளவு சிறப்புடையதோ, அவ்வளவு சிறப்புடையது மருதம். மருதநிலத்தை ஏறுகள் கீறாவிட்டால் உலகில் பஞ்சமே மிகும். காலிகளாம் ஏறுகள் நிலங்கீறிப் பயன் விளைத்தலால் அவையும் தெய்வ அருளையே நமக்கு நினைவுகூறுகின்றன. எனவேதான், மகாகவி, "ஏற்றினிலே பயன் ஈந்திடும் காலி இனத்தினிலே உயர்நாடு" என்று தேவாரம் பாடுகிறார். வாழ்க ஆனினம்.

ஒரு மனிதன் சுவாசத்திற்குச் செடியோ, கொடியோ, மரமோ தேவைப்படும். ஒரு மனிதனுக்கு இவற்றில் ஆறு தேவைப்படும் என்று கணக்கிடுகிறார்கள். உயிர்க்காற்று தூய்மை உள்ளதாக இருக்க வேண்டுமாயின் சுத்தமான தோட்டங்கள் வளர்க்கப்படவேண்டும். "கண்ணன் என் ஆண்டான்" என்ற மகுடமுள்ள பாட்டில் ஆண்டானைப் பார்த்து அடிமை இப்படிப் பேசுகிறான்:

"தோட்டங்கள் கொத்திச் செடி வளர்க்கச் சொல்லிச்
சோதனை போடாண்டே"

தோட்டங்களும், மரக்கூட்டங்களும் மனிதர் வாழத் தம்மை வழங்குபவை. இவற்றிலும், கனி ஈட்டத்திலும், பயிர் ஊட்டத்திலும் பல்கிப் பொலியும் நாடு இந்நாடு. இதன் வளம் ஓர் எல்லைக்கு உட்படாதது. இதன் சிறப்பு, தேட்டத்திலே அடங்காத நிதியாகும். இந்நிதியின் இருப்புத்தான் நமக்குப் புரியவில்லை. மண்ணின் முழை இருட்டிலும் கடலின் கால்கொளா ஆழத்திலும் மற்றும் மலைகளிலும் உள்ள வளங்களைக் கண்டுபிடித்து பொருள் பெருக்கும் சாத்திரம் சேர்த்திடுவோமே.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. சரஸ்வதி தேவியின் புகழ்

வெள்ளைத் தாமரை பூவி லிருப்பாள்
    வீணை செய்யு மொலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
    கூறு பாவல ருள்ளத் திருப்பாள்
உள்ளதாம்பொருள் தேடி யுணர்ந்தே
    யோதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
    கருணை வாசகத் துட்பொரு ளாவாள்   (வெள்ளைத்)   1

மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
    மக்கள் பேசு மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
    கிளியி னாவை யிருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழலுடைத் தாகிக்
    குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தி னெழிலிடை யுற்றாள்
    இன்பமே வடிவாகிடப் பெற்றாள்.   (வெள்ளைத்)   2

வஞ்ச மற்ற தொழில் புரிந் துண்டு
    வாழு மாந்தர் குல தெய்வ மாவாள்
வெஞ்சமர்க் குயிராகிய கொல்லர்
    வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற் பொருள் வாணிகஞ் செய்வோர்
    வீரமன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
    தரணி மீதறி வாகிய தெய்வம்.   (வெள்ளைத்)   3

தெய்வம் யாவு முணர்த்திடுந் தெய்வம்
    தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உய்வ மென்ற கருத்துடையோர்கள்
    உயிரினுக் குயிராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
    செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி யுழைப்பவர் தெய்வம்
    கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம் (வெள்ளைத்) 4

செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்
    சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
    வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
    வரிசையாக அடுக்கி யதன்மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
    சாத்திரம் இவள் பூசனை யன்றாம் (வெள்ளைத்) 5

வீடு தோறுங் கலையின் விளக்கம்
    வீதி தோறு மிரண்டொரு பள்ளி
நாடு முற்றிலு முள்ளன வூர்கள்
    நகர்க ளெங்கும் பலபல பள்ளி,
தேடு கல்வியி லாததொ ரூரைத்
    தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கு மமுதமெ னன்னை
    கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் (வெள்ளைத்) 6

ஊணர்தேசம், யவனர்தந் தேசம்
    உதய ஞாயிற் றொளிபெறு நாடு,
சேணகன்ற தோர் சிற்றடிச் சீனம்
    செல்வப் பாரசிகப் பழந் தேசம்
தோணலத்த துருக்க மிசிரம்,
    சூழ்கடற் கப்புறத் தினிலின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
    கல்வித் தேவி னொளிமிகுத் தோங்க (வெள்ளைத்) 7

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
    நல்ல பாரத நாட்டிடை வந்தீர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா;
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்) 8

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிர நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல். (வெள்ளைத்) 9

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவு நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுதும் வாரீர். (வெள்ளைத்) 10

பிரமன் தன் சக்தியான சரஸ்வதியைப் போற்றி பதினைந்து ஸ்லோகங்கள் பாடினான். அவற்றுள் ஐந்தாம் ஸ்லோகம் பின்வருமாறு:

"யாகுந்தேந்து துஷாரஹார தவளா
யா ஸுப்ர வஸ்த்ராவ்ருதா
யாவீணா வரதண்ட மண்டிதகரா
யா ஸ்வேத பத்மா ஸநா|
யா ப்ரஹ்மாச்யுத ஸங்கரப்ரப்ருதிபிர்
தேவைஸ்ஸதா பூஜிதா
ஸா மாம் பாது ஸரஸ்வதீ பகவதீ
நிஸ்ஸேஷ ஜாட்யாபஹா||

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எந்த சரஸ்வதி தேவியானவள் முல்லை, சந்திரன், பனிமுத்து (போன்ற) வெண்மையானவளோ, எந்த (தேவியானவள்) வெண்மையான ஆடையை உடுத்தியவளும், எந்த (தேவியானவள்) சிறந்த வீணையால் அலங்கரிக்கப்பட்ட கரத்தை உடையவளும், எந்த (தேவியானவள்) வெள்ளைத் தாமரையை ஆசனமாக உடையவளும், எந்த (தேவியானவள்) பிரம, விஷ்ணு, சங்கரர்களால் எப்பொழுதும் பூஜிக்கப்படுகின்றவளும், ஈறு இல்லா அறியாமையைப் போக்குகின்றவளுமானவளும் ஆவளோ அந்த தேவி என்னை இரட்சிக்க வேண்டும்.

பிரமன் பாடிய பதினைந்து ஸ்லோகங்களையும் பாராயணம் செய்யும் ஒருவர் இவ்வுலகப் பாவங்கள் எல்லாவற்றிலிமிருந்தும் விடுபடுவர்; நிலவுலகில் புகழ் பெறுவர்; மேலும் உலகோரால் என்றும் போற்றப்படுவர்; விரும்பிய பலன் அனைத்தும் பெறுவர். இதில் ஐயம் ஏதும் இல்லை.

பாரதியார் பாடிய ஸரஸ்வதி ஸ்தோத்திரத்திற்கு, மேலே கூறப்பட்டவை ஒரு பொருத்தமான அறிமுகம் ஆகும்.

கலைமகளின் பீடம் வெள்ளைத் தாமரை. திருமகளின் பீடம் செந்தாமரை. சரஸ்வதி வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பவள். அது அவளுடைய ஸ்வேத பத்மாஸனம். வெள்ளைத் தாமரை என்பது தூய உள்ளம்.

நாமகள் வீணையின் ஒலி ஆவாள். அவள் ஒரு கையில் ஏடு ஒன்றினையும் வேறொரு கையில் வீணையையும் தாங்கி இருப்பாள். வீணை என்பது ஆன்மாவே. இதில் சிவநாதம் எழும்பவேண்டும்.

"இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க" என்பது திருவாசகம்.

"வீணை முரன்று எழும் ஓசையில் இன்பம் மிகுத்திடும்" என்பதும் மணிவாசகம்.

மகாகவியும் மணக்குள விநாயகரைப் போற்றும்போது, "தேற்றமுடன் வாணிபதம் போற்றுவித்து வாழ்விப்பாய் வாணியருள் வீணையொலி என்னாவில் விண்டு" என்று கூறித் தம் விழைவை வெளிப்படுத்தியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாவலராம் பாவலர்கள் தீஞ்சுவைச் செஞ்சொற் கவி இன்பத்தில் திளைத்திருப்பவர்கள். அவர்தம் உள்ளத்தில் கொலு வீற்றிருப்பவள் வாணியே. கொள்ளையின்பம் குலவு கவிதை கூறுபாவலர் உள்ளத்து இருப்பவள் வாணியே. அவர்தம் உள்ளத்திலும் நாவிலும் விளங்குபவள் வாக் தேவி. அவ்வாணி,

"சொற்படு நயமறிவார் - இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறிவார்
விற்பனத் தமிழ்ப் புலவோர் - அந்த
மேலவர் நா வெனு மலர்ப் பதத்தாள்"

கலைமகள் வேதத்தின் உள்நின்று ஒளிர்வாள். என்றுமுள்ள பொருள் 'சத்' என்ற பெயர் பெறும். 'சத்' என்பதே உள்ளதாம் பொருள்; உண்மைப் பொருள்; என்றும் நிலைத்து நிற்கும் பொருள். அவ்வேதத்தை ஓதி ஓதி உணர்ந்தவர்களே ஞானிகள். "வேதத்தில் ஓதத்தரும் எல்லாம் உள" என்பது திருமந்திரம்.

பொருள் உண்மை அந்தரங்கத்தில் அமிழ்ந்து இருக்கும். அதன் பொலிவு புறத்தே தோற்றாது. மனத்துக்கண் மாசற்று இருப்போர்க்கே உட்பொருள் தரிசனமாகும். இக்காட்சி கைவரப் பெற்று பொலிபவர்களே முனிவர்கள். உயிர்களின்மீது கொண்ட கருணை அவர்களிடம் பொங்கித் ததும்பும். தாம் பெற்ற இன்பம் இவ்வுலகம் பெற விழைபவர்கள் அப்பெரியோராம் முனிவர்கள். அவர்கள் வாசகம் கருணையோடு சிவணி நிற்கும். அவர்கள் கூறும் வாசகத்தின் வடிவமே கலை வாணியின் வடிவம் ஆகும்.

சரஸ்வதி ஞான வடிவினள். அவள் எங்கும் உள்ளாள். எல்லாக் குரல்களும் அவளது குரலே. மாதரின் தீங்குரல் வடிவிலும் அவர்கள் ஆடும் ஆடல் வடிவிலும் வாணி விளங்கித் தோன்றுவாள். சொக்க வைக்கும் குழந்தைப் பேச்சில் குடியிருப்பவள் வாக் தேவியே.

குயில் பாடும். அதில் கீத ரசம் பொங்கும். "கள்ளவிழ் மலர்க்கோதி களித்து இசைபாடும் குயில்" என்று ஆண்டாள் அருளியுள்ளார். அக்குயிலின் குரல் நாமகளின் சிங்காதனம். கிளியின் பேச்சு கிறுகிறுக்க வைக்கும். தலைவியை 'கிளிப் பேச்சுக்காரி' என்று பாரதிதாசன் கூறியிருப்பதை மறக்கக்கூடாது. கிளியின் நாவே வாணியின் பத்ம பீடம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாணி இல்லாத நல்லிடம் ஏது? குற்றமற்ற வண்ணத் தொழிலின் விளைவுகளே கொஞ்சும் சித்திரம், கோபுரம், கோயில் முதலியன. இவ்வனைத்திலும் நாம் காண்பது வெள்ளைத் தாமரையாளின் பேரெழில் அன்றோ! இன்ப வடிவு எல்லாம் இவ்வன்னையின் வடிவே.

'யாதானும் தொழில் புரிவோம்; யாதும் அவள் தொழிலாம்' என்றார் மகாகவி. செய்யும் தொழிலில் நேர்மை மிளிரவேண்டும். அங்கு வஞ்சனைக்கு இடமில்லை. இவ்வாறு தொழில் இயற்றி வாழும் மாந்தரின் குலதெய்வம் யார்? அத் தெய்வம் சரஸ்வதியே. இத் தெய்வம் அறிவுத் தெய்வம். தொழில் செய்வோர் யாவரும் தெய்வ அம்சம் உடையவரே. கடும் போர் புரிய வேண்டப்படும் கருவிகளைப் படைப்போர் கொல்லர். விந்தையாம் வித்தை (கலை/அறிவு) படைத்தவர் சிற்பியரும் தச்சரும் ஆவர். உயிர்வாழ நற்பொருள் வாங்கி விற்போர் வணிகர். நாடு புரப்பவர் வீர மன்னர், வேதம் ஓதி உலகிற்கு நன்மை சேர்ப்பவர் வேதியர். இவர்கள் அனைவரும் இயற்றும் தொழிலாலே வையம் தழைக்கின்றது. தொழில் செய்வோர் சிருட்டி கர்த்தாக்கள். "பிரம தேவன் கலை இங்கு நீரே" என்று மகாகவி இவர்களை போற்றுகிறார். இவர்கள் அனைவருமே வாணியைத் தஞ்சம் புகுந்து வணங்கி வாழ்கின்றனர். இதுவே அறிவுடைமை.

உணர்த்த உணர்வது ஆன்மா. இது சைவ சித்தாந்தம். உணர்த்த வல்லவர் யார்? தெய்வமும் அருளாளர்களுமே; ஆம். உணர்த்தும் முறையில் கருணை இருவகையாகச் செயல்படும். ஒன்று அறக் கருணை மற்றது மறக்கருணை. மறக்கருணை மூலம் தெய்வம் நமக்குத் தீமையைக் காட்டி நம்மைத் திருத்தும். இதையே மகாகவி,

"தெய்வம் யாவும் உணர்த்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்" என்றார்.

இறைவன் ஆன்மாவோடு ஒன்றாய், வேறாய், உடனாய் இயங்குபவன். உடனாய நிலையே உயிர்க்கு உயிரான நிலை. உய்ய வேண்டும் என்று செயல்படுவோரே உண்மையில் பெரியவர்கள். அவர்கள் உறுதிகூட இறைவன் அவர்தம் உயிருக்குயிராய் இலகி நிற்கிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எண்ணியர் திண்ணியராக இருப்பின் மட்டுமே வேட்ட விளைவு கைகூடும். இங்ஙனம் திட சங்கற்பத்தோடு செய்கை தொடங்குவோர், தம் செய்கையில் செம்மை பிறந்து சிறக்க வேண்டி வாணியையே நாடி வணங்கி வெற்றி பெறுவர்.

தெய்வாம்சம் எங்கும் உளது. "ஈசா வாஸ்யம் இதம்ஸர்வம்" என்பது ஓர் உபநிடத வாசகம். இந்நிலையை உணர்வோர் அறிவுடையோர் ஆவர். தெய்வாம்சம் எங்கும் உளதால் கைவருந்தி உழைப்பவர் தெய்வம்; கவிஞர் தெய்வம்; எழுதுகோல் தெய்வம்; எழுத்தும் தெய்வம்; தெய்வமும் தெய்வம்.

உண்மையில் சரஸ்வதி பூஜை என்பது என்ன? இத் தெய்வத்தை செந்தமிழ் நாட்டில் உள்ள அனைவரும் இணைந்து வணங்கும் முறைதான் யாது? கலைவாணியை வணங்குதல் என்பது ஓர் எளிதான செயல் அன்று. சித்தர் மரபின் வழி வந்தவர் பாரதியார். அவர்,

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்"

என்று கூறியுள்ளார். சித்தர் சிவவாக்கியர்,

"நட்டகல்லை தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொண என்று சொல்லும் மந்திரம் ஏதடா?"

என்று கேட்கிறார். இந்தக் கேள்வியை, அதன் உட்பொருளை உணர்ந்தவர் பாரதியார். ஆகவே,

"மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை அன்றாம்"

என்கிறார். உயிர்ப்பு அற்ற செய்கை, வெற்றுச் சடங்கு. அதனால் ஆயபயன் ஏதுமில்லை. அப்படியானால், உயிர்ப்புள்ள வாணி பூஜையை எங்ஙனம் இயற்றவேண்டும்? வேதம் புதுமை செய்யவந்த பாரதியார் கூறுகிறார்: ஒவ்வொரு வீட்டிலும் கலை விளங்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டும். வீதி ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது இரண்டு பள்ளிகள் செயல்படவேண்டும். நாடு முழுவதும் உள்ள ஊர்களிலும், நகரங்களிலும் பலப்பல பள்ளிகள் அறிவாலயங்களாகச் செயல்படல் வேண்டும். கல்வி பயிற்றுவிக்கும் பள்ளி இல்லாமல் எந்த ஊரும் இருத்தல் கூடாது. கல்விச்சாலை இல்லாத ஊர் என்பது ஒன்று இருக்குமானால் அவ்வூரையே தீயிட்டுக் கொளுத்தல் வேண்டும். மக்கள் உறும் கேடுகளுக்கு உற்ற அருமருந்தாய், அமுதமாய் விளங்கும் கலைத் தேவியுடன் நல் இணக்கம் கொள்ள இஃதொன்றே வழி; இதுவே வாணிக்கு நாம் செய் பூசனை. தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இச்சகத்தினையே அழித்திடுவோம் என்ற ஞான தீரர் வேறு எம்முறையை ஏற்பார்? கல்வியற்ற ஊர் பரந்து கெடுக.

பாரதநாட்டின் நெடுஞ் சேய்மையான புகழை என்றும் மறவாதவர் பாரதியார். கலைவாணியின் ஒளி பாரதநாட்டிற்கும் அப்பால் உள்ள நாடுகளிலும் பரவுதல் வேண்டும் என்று விழைந்தவர் பாரதியார். காட்டுமிராண்டிகள் வாழும் பிரதேசத்திலும், பல இனங்கள் கலந்து வாழும் நாட்டிலும் கல்வி தழைத்தல் வேண்டும் என்று பாரதியார் பிரார்த்தனை புரிகிறார். ஊணர் என்பார் (HUNS) 'ஹன்ஸ்'. இவர்கள் அங்கங்கும் படையெடுத்து பலநாடுகளைச் சீரழித்தவர். இந்நாளில் ஜெர்மானியரையும் பிரஷ்ய மக்களையும் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டது. யவனர், கிரேக்க நாட்டினர் என்றும், அரேபியர் என்றும் கொள்ளப்படுவர். இப்பாடலில் குறிக்கப்பெறும் யவன தேசம் பாரத நாட்டின் 56 தேசங்களில் ஒன்றான யவன தேசம் என்று கூறமுடியாது. இப்பாடல் பாரத நாட்டிற்கு அப்பாலுள்ள தேசங்களையே பட்டியலிடுகிறது. உதயநாடு, ஒளிபெறும் நாடாகிய ஜப்பான். சீனநாட்டை பாரதியார் சிற்றடிச் சீனம் என்று வருணிக்கிறார். அந்நாளில் சீனப்பெண்கள் தங்களுடைய அடிகள் சிறுத்திருக்க இளமையிலிருந்தே முயன்று வந்தனர். பாரசீகம் என்பது ஒரு பழைய நாடு. இது ஈரான் என்ற பெயரோடு இன்று விளங்குகிறது. பாரசீகம் பலகலைகள் தழைத்து விளங்கிய நாடு. இங்குதான் ஜொராஸ்தரர் பார்ஸி மதத்தைத் தோற்றுவித்தார். பார்ஸி மார்க்கம் பற்றி பாரதி அறுபத்தாறு என்ற பனுவலிலும் ஒரு குறிப்பு வருகிறது. துருக்கி நாட்டைப் பாரதியார் 'தோணலத்த துருக்கம்' என்று வருணிக்கிறார். இந்நாட்டவர் ஆஜானுபாகுகள். மிசிரம் என்பது எகிப்து நாடு. இது மிசிர நாடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று குறிக்கப்பெறும். இதன் பழைய தலைநகர் மெம்ஃபிஸ். பற்பல வெளிநாடுகளிலும் கலைத் தேவியின் ஒளி ஓங்கவேண்டும் என்பதே மகாகவியின் விழைவு.

பாரதநாட்டவர் பான்மை கெட்டிருப்பது கண்டு மகாகவி துயருறாத நாள் இல்லை. ஞானபூமியில் தோன்றிய இவர்தம் பெருமையை மகாகவி அப்பப்போதும் உணர்த்தத் தவறியதில்லை. அறிவென்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாய் உள்ள நாடு பாரதநாடு. அந்நாட்டிற்கு அம்மண்ணில் தோன்றியவர் ஊனம் இழைக்கலாமா?

"ஞானம் என்ப தோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிது இழைக்கின்றீர்!"

என்று அவர்களை நோக்கி அறைகூவினார் மகாகவி. "சீர்த்தியுள்ள கல்வியையும் உழைப்பையும் உதாசீனம் செய்யலாமா? அவ்வுதாசீனம் உங்களை மானமற்றவர்களாக, விலங்குகளாக மாற்றிவிடுமே" என்கிறார் மகாகவி. பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு வாழும் வாழ்வு ஒருவாழ்வு ஆகுமா? ஆகாது, ஒருகாலும் ஆகாது.

போனது போகட்டும், சென்றதற்கு வருந்துதல் வேண்டாம். சென்றதையே சிந்தைசெய்து கொன்றழிக்கும் கவலை எனும் குழியில் வீழ்ந்து குமைய வேண்டாம். போனது போகட்டும். மீதி உயிர் இருக்கும்போதே புன்மையைப் போக்க முயல்வதே சுகாரம்பம். ஆகவே இவ்வகையில் நன்று கருது; நாளெலாம் வினை செய்; நினைப்பது முடியும் என்று கூறி மகாகவி நம்மவரைத் தட்டியெழுப்பினார்.

இனிச் செய்ய வேண்டியது என்ன? அது எளிதானது. என்றாலும், அதன்பயன் அளவற்றது. அது தோற்றுவிக்கும் நற்பயனுக்கு எதையும் ஈடாகக் காட்டமுடியாது. ஆம், செய்ய வேண்டிய பணி இதுவே. ஒவ்வொருவரும் முயன்று ஒவ்வோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் வேண்டும். இது மகத்தான செயல். இனிய, நல்ல கனிகள் கஞலிய சோலைகளைச் செய்தல், நறிய நீர்ச் சுனைகள் இயற்றல், அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதினாயிரம் நாட்டல், நிகழும் தருமகாரியங்கள் புகழ்கூடி விளங்க நிலைபெறுவித்தல் என்றுள்ள நற்செயல்கள் அன்ன பிறன்ன அறங்கள் ஆகிய அனைத்தையும்விட கோடிக்கணக்கில் புண்ணியம் ஈட்டவல்லது ஏழை ஒருவனுக்கு எழுத்து அறிவித்தலே.

ஊர் கூடித் திரண்டு இந்த வேள்வியை இயற்றவேண்டும். இதற்காகும் செலவை எண்ணி மலைத்து நிற்க வேண்டாம். உள்ளது கொண்டு உய்வுக்கு வழிகோலல் ஒல்லும். இதுவகையில் உயர்வார் ஒவ்வொருவரும் மார்க்கபந்துவே. இக் கைங்கர்யத்தில் எல்லோரும் ஈடுபடமுடியும். பெருஞ்செல்வர்கள் பொற்குவை வழங்கமுடியும். வசதி குறைந்தவர் தங்களளவில் பொருள் உதவமுடியும். வறியோராயிருப்போர் இப்பணியை மதுர மென்மொழி கொண்டு வாழ்த்தவேண்டும். உழைப்பின் மூலம் இப்பணி வெற்றிபெற ஆண்மையாளர்கள் உழைத்தல் வேண்டும். இதுவே வாணி பூசை. இதை இயற்றல் வேண்டும். இல்லில் இருந்தபடியே இல்லத்தரசிகள் இல்லத்தலைவரிடமும், மக்களிடமும், இப்பணியின் செயலாக்கத்திற்கு இதமான, மதுர, மங்கல வாசகங்கள் கூறி ஊக்குவிக்க வேண்டும். எவ்வழியிலேனும் நல்கக் கூடியதை நல்கி செய்யவேண்டியதைச் செய்து அறியாமையை அகற்றல் வேண்டும்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும். இயல்வது கரவேல்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. சரஸ்வதி ஸ்தோத்ரம்

எங்ஙனம் சென்றிருந்தீர் - என
தின்னுயிரே யென்றன் இசையமுதே,
திங்களைக் கண்டவுடன் - கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப் பார்த்தவுடன் - இங்கு
காலையி லிரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே - அந்தப்
புதுமையிலே துயர் மறந்திருப்பேன். 1

மாதமொர் நான்கா நீர் - அன்பு
வறுமையிலே யெனை வீழ்த்திவிட்டீர்,
பாதங்கள் போற்றுகின்றேன் - என்றன்
பாவமெலாங் கெட்டு ஞான கங்கை
நாதமொ டெப்பொழுதும் - என்றன்
நாவினிலே பொழிந்திட வேண்டும்
வேதங்க ளாக்கிடுவீர் - அந்த
விண்ணவர் கண்ணிடை விளங்கிடுவீர். 2

கண்மணி போன்றவரே - இங்கு
காலையு மாலையுந் திருமகளாம்
பெண்மணி யின்பத்தையும் - சக்திப்
பெருமகள் திருவடிப் பெருமையையும்
வண்மையி லோதிடுவீர் - என்றன்
வாயிலு மதியிலும் வளர்ந்திடுவீர்
அண்மையி லிருந்திடுவீர் - இனி
அடியனைப் பிரிந்திடல் ஆற்றுவனோ? 3

தானெனும் பேய் கெடவே - பல
சஞ்சலக் குரங்குகள் தளைப்படவே
வானெனும் ஒளிபெறவே - நல்ல
வாய்மையிலே மதி நிலைத்திடவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேனெனப் பொழிந்திடுவீர் - அந்தத்
திருமகள் சினங்களைத் தீர்த்திடுவீர்
ஊனங்கள் போக்கிடுவீர் - நல்ல
ஊக்கமும் பெருமையும் உதவிடுவீர். 4

தீயினை நிறுத்திடுவீர் - நல்ல
தீரமுந் தெளிவுமிங் கருள்புரிவீர்
மாயையி லறிவிழந்தே - உம்மை
மதிப்பது மறந்தன பிழைகளெல்லாம்
தாயென வுமைப் பணிந்தேன் - பொறை
சார்த்திநல் லருள்செய வேண்டுகின்றேன்
வாயினிற் சபதமிட்டேன் - இனி
மறக்கிலேன் எனை மறக்கலீர்! 5

"புல்லிக் கிடந்தேன் புடையொர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு"

என்பது தமிழ்வேதம். தலைவனின் பிரிவைத் தலைவி கணநேரமும் ஆற்றாள். கணநேரப் புடைபெயர்ச்சியே மிகவும் கொடிது என்றால், நீட்டித்த பிரிவின் கொடுமையை என்னென்பது?

பக்தனும் வழிபடு தெய்வத்தைப் பிரிந்திருப்பின் துயருறுவான்; வேதனையில் நொந்துபோவான்.

வெள்ளமாய்க் கவிபொழியும் பாரதியார் தொடர்ந்து நான்கு மாதங்கள் ஏதும் பாடமுடியாத நிலை உற்றார். இந்த அவலத்திற்கான காரணத்தை அவர் அறிவார். அவரைக் கலைவாணி சற்றே பிரிந்திருந்தாள். விரக தாபமுற்ற தலைவியைப் போல் அவர் கதறத் தொடங்கினார். மேலும் பிரிவை நீட்டிக்கவிரும்பாத சரஸ்வதி அவர்பால் வந்துசேர்ந்தாள். இங்ஙனம் வந்து சேர்ந்த சீமாட்டியை அவர் கண்டு களித்தாலும் அவர் உற்ற வெக்கை அவரிடமிருந்து ஒரு வினாவாக எழுந்தது. "எங்ஙனம் சென்றிருந்தீர்?" அவர் வாணியை நோக்கி விடுத்த வினா இது.

"எப்படி அம்மா நீ என்னை விட்டு விலகியிருந்தாய்? நீ என் இன்னுயிர் ஆயிற்றே! என் இசையில் அமுதத்தைக் குழைத்துக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொடுப்பவள் நீதானே! நான் காணும் காட்சி எத்தன்மைத்தாயினும், கண்டவுடன் அதை நான் பாடுவேன். சந்திரனைக் கண்டபோதும், அலைகளைக் கண்ணுற்றபோதும், காற்றில் மிதந்து வரும் கவினைக் கேட்டபோதும், வைகறையில் எழும் இரவியின் தோற்றம் கண்டு தொழுதபோதும் நீ என் நாவில் அமிழ்து எனப் பொங்குவாய். அப்போதைக்கப்போது எழும் ஆரா அமுதில் என் துயரமெலாம் என்னால் மறக்கப்படும்."

இக்கால முறைக்கேற்ப பாரதியார் சமர்ப்பித்த வாசகங்களை அமைத்துக் காட்டினோம். ஆனால் மகாகவி சங்ககாலத்துக் கவி போலவே தலைவியை விளித்துப் பேசும்போது அவளை முன்னிலையில் "நீர்" என்றே விளிப்பார். இனிவரும் விளக்கம் இங்ஙனம் பாரதி கூறியதை அனுசரிக்கும். பாரதியார் கூறுவதாவது:

"தேவி, நான்கு மாதங்கள் என்னைப் புறக்கணித்து விட்டீர். இதனால் விளைந்தது அன்பு வறட்சி. இவ்வறட்சிப் படுகுழியில் நான் குமைந்து கிடந்தேன். வாதனை பொறுக்கவில்லை. உம் திருவடிகளை ஏற்றுகிறேன், போற்றுகிறேன். என் பாவங்கள் கெட்டு ஒழியட்டும், இனி ஞான கீத நாதமொடு எப்பொழுதும் கங்கையென உம் அருளை என் நாவில் பொழிந்திடுவீர். அன்னையே! அறிவு ஆகரமானவற்றை அவ்வப்பொழுதும் நவநவமாக வழங்குபவரே! என் கண்ணிடை விளங்குபவரே! என் கண்ணே, கண்ணின் மணியே, மணியாடு பாவாய், காவாய். என்னைக் கொண்டு உம்மைக் கீர்த்தித்துக் கொண்டிருப்பவரே! காலையும், மாலையும் எப்போதும் திருமகள் அருள் இன்பத்தையும் பெண்ணின் நல்லாளாம் உமையின் திருவடிப் பெருமையையும், அவ்வன்னையின் ஈடில்லா வண்மையையும் யான் இசைத்திடும்படி என்னை ஆக்குவீர். என் நாவிலும், அறிவிலும் கொலுவிருந்து என்னை வளர்த்திடுவீர். இனி என்னை நீர் பிரிந்திட ஒல்லேன்.

"என்னை ஆட்டிவைக்கும் ஆணவம் அழிதல் வேண்டும். குரங்குபோல் தாவித் தாவி என் மீது படையெடுக்கும் சஞ்சலங்கள் பிணிக்கப்பெற்று அகற்றப்படல் வேண்டும். என் அறிவு தூய வாய்மையில் பிரதிஷ்டை ஆகிடவேண்டும். தேன் ஆறு என உம் அருளால் என் நாவிலிருந்து கவியாறு பாய்தல் வேண்டும். திருமகள் அருட்பார்வைக்கு இலக்காகாமல் நான் வறுமையில் வாடுகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அம் மாமகள் என்மீது கொண்ட சினங்கள் அகல அத்திருமகளை நான் தோத்தரிக்க என் பிரார்த்தனையில் அமர்ந்து அருளுவீர். யான் உற்ற குறைகளைக் களைந்திடுவீர். எனக்கு ஆக்கமும், ஊக்கமும், பெருமையும் உதவிடுவீர்."

இவ்வாறு நயந்துருகி மகாகவி பாடுகிறார்.

"செயல் தீர்ந்த செம்பொருளின் நாட்டம் மிக்குச்
செய்கின்ற வேள்வி இச்சிறிய வாழ்வு"

என்பது திருலோக தரிசனம். பாரதியார் தம் ஆன்மாவையே வேள்விக் கூடமாக அமைத்துக்கொண்டவர்.

"தீ வளர்த்திடுவோம் - பெருந்
தீ வளர்த்திடுவோம்

ஆவியி னுள்ளும் அறிவி னிடையிலும்
அன்பை வளர்த்திடுவோம்"

என்று பாடிப் பரவியவர் பாரதியார். பாரதியார் போற்றிய தீ அன்பைப் புடமிட வல்லது. அத்தகு தீயைக் கலைவாணி தம்முடைய உள்ளத்தில் நிறுத்திடல் வேண்டும் என்று வேண்டுகிறார். மேலும் அத்தீயினால் ஆய பயன் கொள்ள நமக்கு வாணி தீரமும், தெளிவும் அருள்புரிய வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறார். அவர் பிரார்த்தனை பலித்தது. சொல் உராய்ந்து எழுந்த தீயின் சுடரெழக் கனிந்த நாவுடைய நாவலராக அவர் திகழ்ந்து வந்தார். மண் மாசு அகன்ற வான்படு சொற்கள் கொண்டு பலப்பல கவிகள் சமைத்தார்.

மாயை விளைத்த மயக்கத்தால் தாம் கலாதேவியை மறந்து விட்டதை எண்ணி தம் அறிவு இழப்பிற்காக வருந்தித் தாயாம் அத் தெய்வம் தம்மை மன்னித்து அருளல்வேண்டும் என்று மனமுருகி வேண்டினார். 'எற்றென்று இரங்குமாறு பிழை செய்துவிட்டேன்; இனி மற்றன்ன செய்யமாட்டேன்' என்று தம் திருவாயால் சபதமிட்டார். 'அன்னே! உம்மையல்லால் இனி யாரை நினைக்கேன்?' என்று உருகிச் சொன்னார். 'இனி உம்மை மறக்கிலேன் எனை மறக்கலீர்' என்று கூறி மகாகவி தம் பாடலைத் தலைக்கட்டுகிறார்.

✣

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. லக்ஷ்மி ப்ரார்த்தனை

திருவேட்கை

மலரின் மேவு திருவே - உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யு முகமும் - காண்பார்
நினை வழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும் - தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும் - கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன். 1

கமல மேவு திருவே - நின்மேல்
காதலாகி நின்றேன்
குமரி நின்னை யிங்கே - பெற்றார்
கோடியின்ப முற்றார்
அமரர் போல வாழ்வேன் - என்மேல்
அன்பு கொள்வையாயின்
இமய வெற்பின் மோத - நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன். 2

வாணி தன்னை யென்றும் - நினது
வரிசை பாட வைப்பேன்
நாணி யேகலாமோ? - என்னை
நன்கறிந்தி லாயோ?
பேணி வைய மெல்லாம் - நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணு மைந்த ரெல்லாம் - கண்ணன்
பொறிக ளாவ ரன்றோ? 3

பொன்னு நல்ல மணியும் - சுடர்செய்
பூண்க ளேந்தி வந்தாய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மின்னு நின்றன் வடிவிற் - பணிகள்
மேவி நிற்கு மழகை
என்னுரைப்ப னேடீ - திருவே
என்னுயிர்க் கொ ரமுதே
நின்னை மார்பு சேரத் - தழுவி
நிகரி லாது வாழ்வேன். 4

செல்வ மெட்டு மெய்தி - நின்னாற்
செம்மை யேறி வாழ்வேன்,
இல்லை யென்ற கொடுமை - உலகில்
இல்லை யாக வைப்பேன்.
முல்லை போன்ற ம்முறுவல் - காட்டி
மோக வாதை நீக்கி
எல்லை யற்ற சுவையே - எனைநீ
என்றும் வாழ வைப்பாய். 5

அண்டத்தைப் பொதுத்து அப்புறத்து நீரில் அப்பு ஆடும் இரணியனின் கல்லொத்த ஆகம் கீண்டு அவனது குடலை மாலையாக அணிந்துகொண்ட நரசிம்மத்தின் சினம் ஆறவில்லை. தேவர்கள் வேண்ட, செந்தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும் செந்திரு அம் மானுட மடங்கல் முன்பு தோன்ற, செங்கட்சீயத்தின் சினம் ஆறியது. சினத்தைச் செற்று நலம்பல விளைக்கும் திருவைப் போற்றுதல் சீவனின் தலையாய கடன். உயிரினும் மேலாக அச்சீமாட்டியை நேசித்தல் வேண்டும். அப் பெருமாட்டியின் பெரும் புகழை நன்கறிந்த மகாகவி அத் தெய்வத்தை அன்பு பொங்கத் தோத்தரிக்கிறார். சந்திரிகை கொண்டு வேயப்பட்டத் திருமுக மண்டலம் உடையவள் இலக்குமி. தண்ணளியின் தனிப்பெரும் உருவுடையவள் ஸ்ரீ தேவி. அவள் பார்வை, காண்போனை அவள் வசமாக்கும். காண்போனின் நிலை திருமகள் ஆட்சிக்கு உட்படும். அவளது அருளே அவனுடைய ஊனிலும், உயிரிலும் பதிந்து நிற்கும். அவள் பேச்சிலே இசைவெள்ளம் பெருக்கெடுத்து கலகலென ஓடும். அவளது புன்னகையில் மங்கல இன்பங்கள் மண்டிநிற்கும். ஸ்ரீதேவி மோட்சஸ்ரீ ஆவாள். பேரின்பச் செல்வமே அவள் திருமேனி. இவை அனைத்தையும் உணர்ந்த மகாகவி அவள் அருளும் பேரின்பம் வேட்டு அவளைப் பணிகின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்ளக் கமலத்தில் மேவும் திருவின்மீது நனிசால பக்தி பூணுகின்றார் பாரதியார். அக்குமரியின் அருள்பெற்றார் ஒருகோடி இன்பம் பெற்றார் ஆவர் என்று அவர் அறிவார். அவளுடைய பக்தன் பெறும் வாழ்வு அழியா அமர வாழ்வு. தம் மீது திருமகள் அருள்பாலிப்பின் அத்தெய்வத்தின் மீது புகழ் பொருந்தியனவும், பண்சுமந்து நிற்பனவுமான திருப்பாடல்களைத் தாம் இயற்ற அவற்றின் இசை அலைகள் இமயமலையை மோதி நிற்கும் என்கிறார் மகாகவி.

மேலும், அத்திருவின்மீது சீரார்ந்த பாடல்களை இசைக்குமாறு வாணியைப் பணிப்பேன் என்றும் அவர் கூறுகிறார். தம்மைக் கேவலம் ஒரு மானுடன்தானே என்று எண்ணித் திருமகள் கூச்சத்தால் தம்மைவிட்டு அகலக்கூடாது என்றும் அவர் வேண்டுகிறார். மேலும், செந்திரு தம்மை நன்கு அறிந்தவள் என்றும் அவர் உவகை உறுகிறார். உலக நன்மையைப் பேணி வளர்க்க விரதம் பூண்ட அனைவரும் கண்ணபிரானின் பொறிகளாவர் என்றும் அவர் அறைகின்றார்.

இலக்குமி பொன்னாலும் மணியாலும் இயன்ற ஒளி திகழ் அணிகலன்களைப் பூண்டு தரிசனம் தருபவள். அவள் பேரழகி; அவள் ஆபரணங்களும் அழகிய அவளது பொன்னொத்த வடிவில் அவை பொருந்தி நிற்கும் அழகு மங்கலம் விளைக்க வல்லது. மகாகவி, 'அடடா! உன் சொக்கழகுக் கோலத்தை எங்ஙனம் நான் வருணிப்பேன்' என்று விதந்து கூறுகிறார். அப்பேர் எழிலாட்டியின் பெருநலன்களை மகாகவி வியந்தும், நயந்தும் போற்றுகிறார். திரு தம் உயிர்க்கு ஓர் ஆரமுது என்று அறிக்கையிடுகிறார். திருவைத் தம் நெஞ்சில் இருத்தி வைத்து 'நிகரிலாது வாழ்வேன்' என்றும், பிறர்க்கு அரிய - ஆனால், தாம் பெறற்குரிய - அனுபூதிப்பேறு பற்றிப் பறை சாற்றவும் செய்கிறார்.

ஸ்ரீதேவியின் அருளால் அட்டமாசித்திகளைப் பெற்று செம்மையான வாழ்வு உற்று தாம் வாழப்போவதாகவும் அவர் அறிவிக்கிறார். செல்வத் திருமகள் அருளைப் பெற்று உலகு முழுதும் செல்வச் செழிப்பு கொழிக்குமாறு தாம் வாழ்வாங்கு வாழப் போவதாகவும் கூறுகிறார். 'இல்லை என்ற கொடுமை இனி உலகில் இல்லை' என்று சாதிக்கப்போவதாக அவர் அறைகூவல் விடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர் வேண்டுதலின் முடிவு ஒரு மோகன முடிவு. தம்மை வாட்டும் மோகத்தைத் திருமகள் தன் முல்லைப் புன்சிரிப்பைக் காட்டி நீக்கிவிடல் வேண்டும் என்றும் வேண்டுகிறார். சிரித்துப் புரம் எரித்தவர் சிவபெருமான். முப்புரமாவது மும்மல காரியம். சிரித்து மோகத்தை எரிப்பவள் ஸ்ரீ தேவி. அவள் எல்லையற்ற பேரின்பச் சுவை. அவளருளால் தாம் அந்தமில் பேரின்பம் கைவரப் பெற்றவர் ஆகி, என்றும் நிலைபேறு பெறுபவராகி இருப்பது ஒருதலை என்று கூறி நிரந்தரத்திற்கு இலக்காகி விளங்குகிறார்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

11. லக்ஷ்மி தேவி

சரண்புகுதல்

மாதவன் சக்தியினைச் - செய்ய
மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
போதுமிவ் வறுமையெலாம் - எந்தப்
போதினுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் - உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்க வில்லை - அன்னை
மாமக ளடியிணை சரண்புகுவோம். 1

கீழ்களி னவமதிப்பும் - தொழில்
கெட்டவ ரிணக்கமுங் கிணற்றினுள்ளே
மூழ்கிய விளக்கினைப்போல் - செய்யு
முயற்சியெல் லாங்கெட்டு - முடிவதுவும்
ஏழ்கட லோடியுமோர் - பயன்
எய்திட வழியின்றி யிருப்பதுவும்
வீழ்க விக்கொடு நோய்தான் - வைய
மீதினியில் வறுமையொர் கொடுமையன்றோ? 2

பாற்கட லிடைப் பிறந்தாள் - அது
பயந்தநல் லமுதத்தின் பான்மை கொண்டாள்
ஏற்குமொர் தாமரைப்பூ - அதில்
இணைமலர் திருவடி யிசைந்திருப்பாள்
நாற்கரந் தானுடையாள் - அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்
வேற்கரு விழியுடையாள் - செய்ய
மேனியள் பசுமையை விரும்பிடுவாள். 3

நாரணன் மார்பினிலே - அன்பு
நலமுற நித்தமு மிணைந்திருப்பாள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோரணப் பந்தரிலும் - பசுத்
தொழுவிலுஞ் சுடர்மணி மாடத்திலும்
வீரர்தந் தோளினிலும் - உடல்
வெயர்த்திட வுழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும் - ஒளி
பரவிட வீற்றிருந் தருள்புரிவாள். 4

பொன்னிலு மணிகளிலும் - நறும்
பூவிலுஞ் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் - செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் - மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடுந் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி - அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம். 5

மண்ணினுட் கனிகளிலும் - மலை
வாய்ப்பிலும் வார்கட லாழத்திலும்
புண்ணிய வேள்வியிலும் - உயர்
புகழிலு மதியிலும் புதுமையிலும்
பண்ணுநற் பாவையிலும் - நல்ல
பாட்டிலுங் கூத்திலும் படத்தினிலும்
நண்ணிய தேவிதனை - எங்கள்
நாவிலு மனத்திலு நாட்டிடுவோம். 6

வெற்றிகொள் படையினிலும் - பல
விநயங்க ளறிந்தவர் கடையினிலும்
நற்றவ நடையினிலும் - நல்ல
நாவலர் தேமொழித் தொடையினிலும்
உற்றசெந் திருத்தாயை - நித்தம்
உவகையிற் போற்றியிங் குயர்ந்திடுவோம்
கற்ற பல் கலைகளெல்லாம் - அவள்
கருணைநல் லொளிபெறக் கலிதவிர்ப்போம். 7

படைப்போன் தன் படைப்பின் சுவையைத் தானே போற்றுவதுண்டு. இதைத் திருலோக சீதாராம், "தன் இதழ் ஊறலைத் தானே சுவைத்தல்" என்பார். மகாகவி தாம் படைத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடல்களைத் தாமே பாடிப்பாடி மகிழ்வதுண்டு. இங்கு விளக்கம் பெறவுள்ள பாடலைத் தாமே நனிசுவைத்து அதற்கு ஆங்கில ஆக்கமும் கண்டுள்ளார். பாரதியார் ஆங்கிலத்தில் துறைபோகியவர்.

'சக்தி' என்ற சொல் ஆற்றலைக் குறிப்பது, மூன்று வல்லெழுத்துக்கள் கொண்டது இச்சொல் என்று மகாகவியே கூறியுள்ளார். சிவனாரின் ஆற்றல் 'சக்தி' என்றே போற்றப்படுகிறது. பிரமனின் சக்தி சரஸ்வதி. விஷ்ணுவின் சக்தி ஸ்ரீதேவி. இலக்குமியை மகாகவி மாதவன் சக்தி என்று வருணிக்கிறார். மாதவன், கோளரி மாதவனாம் கோவிந்தன்.

திருமகளின் பீடம் செய்ய மலராம் செந்தாமரை. செவ்விய தாமரை என்பது தூய உள்ளமே. திருமாலைப் பரிபாடல், 'திருஞெமர்ந்தமர்ந்த திருமார்பன்' என்று போற்றும், பதும மலர் வளர்மணிப் பெண் செந்திரு. இவளை வாழ்த்துவார் நல்வாழ்வு பெறுவர்.

வறுமை என்பது ஒரு கொடுமை. கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை. இளவயதினரான மகாகவியை வறுமை சாலவும் துன்புறுத்தியது. இதனால் தாங்கொணாக் கொடுமையை அவர் தாங்க நேரிட்டது. துயரால் துவண்டுபோன பாரதியார், "போதும் இவ்வறுமை எலாம்" என்று கதறியிருக்கிறார். வறுமை என்பது ஒன்றுதான்; ஆனால் அதன் கொடுமைகள் பலப்பல. வறுமை ஒருவனைச் சிறுமையில் தள்ளும். சிறுமை என்பது செத்தும் சாகாமல் இருக்கும். அது புகைந்து கொண்டே இருக்கும். இந்த வேதனையால் மன எரிச்சல் தொடரும்.

வறுமையே கல்விக்குச் சத்ரு; ஞானத்திற்குப் பகை. வேதத்தின் மீது வெறுப்புக் கொள்ளுமாறு மிடிமை செய்துவிடும்; மதி சோர்வுறும்; மழுங்கிப் போய்விடும், மதி மயங்கினாலும் கேடில்லை. தெளிவுபெற வாய்ப்புக்கிட்டும். ஆனால் மதி சோர்வு பெற்றுவிட்டால் முற்றிலும் அயர்ந்து போகும். சோர்வு, மறதியுமாம். கற்ற கல்வி மறந்து போகும்; கை நழுவிவிடும். இதனால் அறிவின் மீது கூட வெறுப்புத் தோன்றும். விளைவு எல்லையில்லா வேதனை. இவ்வறுமை எப்பொழுது ஒழியும்? அன்னையாம் இலக்குமியை, மாமகளைச் சரண்புகுந்தால் வறுமை வற்றும். ஸ்ரீதேவியை மாமகள் என்று மகாகவி குறிப்பிடுவார். "அம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாமகளுக்கு ஓர் ஊனம் நினைந்திலன்" என்று அவர் பிறிதோரிடத்தில் கூறியுள்ளார்.

வறுமையால் விளையும் கொடுமைகளில் மிகக் கொடுமையானது கீழ்மக்களால் அவமதிக்கப்படுதல். கீழ்களைவிடக் கீழோர் உலகில் இல்லை. உத்தமராயினும் பொருள் உறாதவர்களைக் கீழ்மக்கள் கண்டால், உதாசீனம் செய்வர். "செம்மாக்குங் கீழ்" என்பது வள்ளுவம். ஒத்தார், மிக்கார், உதாசீனத்தைச் சகித்துக்கொள்ளலாம். கீழ்களின் அவமதிப்பைத் தாங்கிக்கொள்ளவே முடியாது. வறுமை ஒருவனை எங்கெல்லாம் கொண்டு தள்ளும் என்பதை மகாகவி இப்பாடலில் பட்டியல் இட்டுக் காட்டுகிறார். கீழ்களின் அவமதிப்பு, தோற்றோருடன் இணக்கம், கிணற்றில் மூழ்கிய விளக்குப் போல் ஆக்க விரோத முயற்சி, நாசப்படுகுழி, ஏழ்கடல் ஓடியும் பயனேதும் பயக்காத மோகமார்க்கம் ஆகியவை இப்பட்டியிலில் இடம்பெறுகின்றன. இவ்வையத்தில் இவ்வறுமையை ஒத்த கொடுமை ஏதுமில்லை. இவ்வறுமை நோய் கெட்டொழிக.

திருமகள் பாற்கடலில் உதித்தவள். அக்கடல் பயந்த அமுதத்தின் பெற்றியள். அவள் இருப்பிடம் பொருத்தமான செந்தாமரை. அம்மலரொத்த இணையடிகளோடு அங்கு தங்கியிருப்பவள், அவள் நான்கு கரங்கள் உடையவள். கரம் ஒவ்வொன்றிலும் பல்வகைச் செல்வங்கள் ஒளிரும். சுடர் வேலை ஒத்த கரிய விழிகள் உடையவள். அவள் செந்நிறத்தால். அவள் அன்பு பசுமையானது. அன்பு செய்யவே அவள் விரும்புவாள்.

நாரணக் கடவுள் மார்பில் அவள் எப்போதும் கோயில் கொண்டிருப்பாள். இதனால் அவள் காட்டும் அன்பு நலம் பல விளைக்கும். நாரணனை, 'அலர்மேல் மங்கை உறை மலர் மார்பன்' என்று போற்றுவர். திரு மிக்க இடங்கள் ஆவன : தோரணம், பந்தர், பசுத்தொழுவம், சுடர்மணிமாடம், வீரருடைய திரள் திண் தோள், உழைப்பாளிகளின் தொழில்கள், சரஸ்வதியின் திருமுடி. இவ்விடங்களிலெல்லாம் அவள் செம்மாந்திருக்க, அவள் பேரொளி வையம் முழுவதும் தைவரும்.

அவள் திருப்பாத மலர்களை வாழ்த்தி வணங்கினால் நற்பதம் பெறுவோம். அவள் தன் திருப்பாதங்களைப் பொன்னிலும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணிகளிலும், நறும் பூவிலும், சாந்து பொது சீதத்திலும், விளக்கின் சுடர் ஒளியிலும், கன்னியர் புன்னகையிலும், செழித்த காடுகளிலும், பொழில்களின் பொலிவிலும், பயிர்நிறைந்த செய்களிலும், எண்ணித் துணிந்த துணிவிலும், செங்கோல் மன்னர் திருமுகத்திலும் பதித்திருக்கிறாள். இங்கெல்லாம் அவள் கால் வண்ணமும், கைவண்ணமும் காணப்பெறும்.

மண்ணுள் உலோகக் கனிகளோடு அமிழ்ந்திருக்கும் சுரங்கங்களிலும், மலைச் சாரலிலும், வளையவரும் கடல் ஆழத்திலும், புண்ணிய வேள்வியிலும் உயர்நலம் உடைய புகழிலும், கூர்த்த மதியிலும், வளம்தரவரும் புதுமையிலும், விசேட விக்கிரகங்களிலும், சித்திரங்களிலும், கனிவு கொடுக்கும் நல்ல பாட்டிலும், குதூகலக் கூத்திலும் இவ்வன்னை நண்ணியிருப்பாள். அன்னம் அன்ன அன்னவளை நம் நாவிலும், மனத்திலும் பிரதிஷ்டை செய்வோமாக.

ஸ்ரீதேவி விஜய ஸ்ரீ. அவள் அருள்பெற்ற படை வெற்றி பெறும். பணிவுடையோர் அவளது அருளுக்கு இலக்கு ஆவர். நற்றவம் உடையாரின் பெருவாழ்வு அவள். நாவலர், பாவலர் தம் தேமதுரப் பனுவல்களில் அவள் கொலுவிருப்பாள். புண்ணியத்தால் நமக்கு வாய்த்த ஜகந்மாதா அவள். இன்களி மகிழ்வோடு தினமும் அவளைப் போற்றினால், உயர்வற உயர்நலம் நம்முடையதாகும். நாம் கற்ற கலைகள் அவளது ஓலக்கம். அவளுடைய கருணை கனுலிய நல்லொளி கொண்டு கலியை நலியச்செய்வோம்.

தமிழறியாதாரும் இப்பாடலைப் புரிந்துகொள்ள இதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பை மகாகவி வரைந்துள்ளார். மூலப் பாடலில் கரந்திருக்கும் கருத்துக்களுக்கு இம்மொழிபெயர்ப்பில் விளக்கம் கிடைக்கிறது. மகாகவியின் ஆங்கிலம் நனிசிறப்புடையது. சில நறுக்குகளை இங்கே தருகிறேன். மாதவன் சக்தி என்பதை the Energy of Vishnu என்றும் செய்யமலர் வளர்மணி என்பதை the Jewel of the Crimson Flower என்றும், சிறுமையின் புகை என்பதனை the Fumes of Paltriness என்றும் உயர்வேதம் என்பதை the Noblest Truths என்றும் அவர் மொழி பெயர்த்திருப்பதன் நேர்த்தியை என்னென்று ஏத்துகேன்!

✣

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

12. திருமகள்

நித்தமுனை வேண்டிமன நினைப்பதெல்லா நீயாய்ப்
பித்தனைப்போல் வாழ்வதிலே பெருமையுண்டோ திருவே?
சித்த வுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை கொள்வரென்றே
உயர்ந்த வேத முரைப்பதெல்லாம்
சுத்தவெறும் பொய்யோடீ? சுடர்மணியே, திருவே
மெத்த மயல் கொண்டுவிட்டேன், மேவிடுவாய் திருவே. 1

உன்னையன்றி யின்பமுண்டோ வுலகமிசை வேறே?
பொன்னைவடி வென்றுடையாய் புத்தமுதே, திருவே.
மின்னொளிதரு நன்மணிகள்
மேடையுயர்ந்த மாளிகைகள்
வன்னமுடைய தாமரை சேர்
மணிக்குளமுள்ள சோலைகளும்
அன்னநறு நெய்பாலும் அதிசயமாய்த் தருவாய்
நின்னருளை வாழ்த்தி நன்றா நிலமளிப்பேன், திருவே. 2

ஆடுகளு மாடுகளும் அழகுடைய பரியும்
வீடுகளு நெடுநிலமும் விரைவினிலே தருவாய்
ஈடுநினக் கொர் தெய்வமுண்டோ?
எனக்குனை யன்றிச் சரணுமுண்டோ?
வாடுநிலத்தைக் கண்டிரங்கா
மழையினைப்போ லுள்ளமுண்டோ?
நாடுமணிச் செல்வமெல்லா நன்கருள்வாய் திருவே
பீடுடைய வான்பொருளே பெருங்களியே திருவே. 3

சித்தப் பிரமையினால் சிறப்பேதும் விளையாது. ஒன்றையே எண்ணி, அதன் நினைவாகவே இருந்தும் அந்த ஒன்று கைவரப் பெறவில்லை என்றால் அவ்வாழ்வில் பெருமையுண்டோ? மனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பது தாவித் தாவிச் செல்லும் தன்மையுடையது. என்றாலும், பேரார்வத்தோடு அது ஒன்றைப் பற்றும்போது அது அந்த ஒன்றையே எங்கும் காணும். குயில் மீது மோகமுற்ற பாரதி, தாம் உற்றநிலை பற்றிக் கூறுகிறார்:

“கொம்புக் குயிலுருவம் கோடி பல்கோடியாய்
ஒன்றே அதுவாய் உலகமெலாம் தோற்றமுற”

தாம் நைந்துபோனார். பித்தர்நிலை அன்னதே. இப்பாடலில் பாரதியார் தாம் உற்றநிலை தெய்வப்பித்து என்று அறிவித்தார். தம் நினைவு திருமகள் மீது நிலைத்துவிட்டமை தம் சித்த உறுதியாலே என்று எண்ணினார்.

“சித்த உறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை கொள்வரென்றே”

உயர்ந்த வேதங்கள் அறைகின்றன. என்றாலும், தம்மைப் பொறுத்தவரையில் அவர் வேட்ட உன்னதம் உருக்கொள்ளவில்லை. ஆகவே, வேதக்கூற்று பொய்யா? என்று அவர் வேதவல்லியை வினவினார். சுடர்மணியாம் திரு வசப்படாததால் இருளில் குமைந்திருந்தார். காதல் நோய்க்கு மருந்து யாதெனின், கொண்ட காதலைத் தீவிரப்படுத்தலே. இதையே வழி என்று கண்டு, “திருவே, மெத்த மையல் கொண்டுவிட்டேன்; (என்னை) மேவுவாய்” என்று வேண்டுகிறார்.

திரு வழங்கும் அருளே உண்மை இன்பம். பொன்னவிர் மேனி படைத்தவள் திரு. அப்போதைக்கப்போது ஆரா அமுதாய் இருப்பவள் அவளே. அவள் வழங்கும் அமுது புத்தமுது. அவள் பெருங் கொடையாளி. பக்தர்களுக்குத் திரு கண்ணைப் பறிக்கும் மின்னொளி வீசும் நல்ல நல்ல நவமணிகளும், மேடைகள் பலகொண்ட மாட மாளிகைகளும், வண்ணத் தாமரைத் தடாகங்கள் கொண்டிலங்கும் கவின்சோலைகளும், அன்ன பிறவும், மேலும் தூய உணவு, நறு நெய், பால், அன்ன பிறவும் அதிசயமாய் அருளுவாள். இவையிற்றைப் பெற்றுக்கொண்டு, தாம் அவள் அருளால் அவள் அருளை வாழ்த்தி வையத்தை வாழ்விக்கப்போவதாக மகாகவி அறிவிக்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொன்னும், மணியும், ஜதி பல்லக்கும் தமக்கு முருகன் அருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார் அருணகிரியார். அவரைப் போலவே மகாகவியும், செந்திரு தமக்கு ஆடுகளும், மாடுகளும், வாம்பரிகளும், வீடுகளும், பரப்பமைந்த பயிர்நிலங்களும் விரைவில் தந்தருளவேண்டும் என்று வேண்டுகிறார். ஸ்ரீதேவியையொத்த தெய்வம் எங்குமில்லை. அப்பெருமாட்டியைத் தவிர தமக்குச் சரணம் வேறில்லை என்று சாற்றுகிறார் மகாகவி.

வறண்டிருந்த மண்ணுக்கு வானம் கனிய வேண்டும். திரண்டிருந்தும் பொழியா மேகங்கள் போன்ற உள்ளமும் உண்டோ? இலக்குமி, அருளுடைய சீமாட்டி. வேட்கும் செல்வக் குவியல்களை வேண்டியாங்கு வழங்குபவள். அப்படித் தமக்கு பெருமையுடன் பொலியும் வான் பொருளாம் ஸ்ரீதேவி வழங்குதல் வேண்டும் என்றும் மகாகவி விண்ணப்பிக்கின்றார். உண்மையில் பெருமகிழ்வு என்பது லக்ஷ்மி கடாட்சமே என்பது பாரதியாரின் துணிபு.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

13. திருக்காதல்

திருவே நினைக் காதல் கொண்டேனே - நினது திரு
வுருவே மறவா திருந்தேனே - பல திசையில்
தேடித் திரிந் திளைத்தேனே - நினக்கு மனம்
வாடித் தினங் களைத்தேனே - அடி நினது
பருவம் பொறுத் திருந்தேனே - மிகவு நம்பிக்
கருவம் படைத் திருந்தேனே - இடை நடுவில்
பையச் சதிகள் செய்தாயே - அதனிலு மென்
மையல் வளர்தல் கண்டாயே - அமுதமழை
பெய்யக் கடைக் கணல்காயே - நினதருளில்
உய்யக் கருணை செய்வாயே - பெருமை கொண்டு
வையந் தழைக்க வைப்பேனே - அமர யுகஞ்
செய்யத் துணிந்து நிற்பேனே - அடியெனது
தேனே யென திரு கண்ணே - எனையுகந்து
தானே வருந் திருப் பெண்ணே.

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்றார் அப்பர் அடிகள். "எந்த விழைவும் நிறைவு பெறாது போவதில்லை" என்றார் கலீல் ஜிப்ரான். எண்ணியர் திண்ணியராகப் பெறின், எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்றார் வள்ளுவர். நாம் நல்லனவற்றையே எண்ணவேண்டும். "நன்று கருது; நாளெல்லாம் வினைசெய்; நினைப்பது முடியும்" என்று கூறுகிறது புதிய ஆத்திசூடி.

திருமகள் அருள் பெறல் வேண்டும் என்று மகாகவி சங்கல்பம் செய்துகொண்டார். அவ்வன்னை மீது அருட்காதல் பூண்டார். அவளது திருவுருவை என்றும் மறவாதிருந்தார். பல திசைகளிலும் அவளைத் தேடித் தேடி அலைந்தார். தரிசனம் கிடைக்கப் பெறாது மனம் வாடினார். அவளது வருகையின் பருவம் பொறுத்திருந்தார். எங்ஙனமேனும் தம் எண்ணம் ஈடேறுமென்று அவர் நம்பியிருந்தார். ஆயினும், அவர் நம்பிக்கை தளர்வுறுமாறு அன்னை சோதனைகள் நிகழ்த்தினாள். ஆனாலும், அந்நிலையிலும் அவர் ஆவல் வளரவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்தது. இதற்காகவே ஸ்ரீதேவி அவரைப் பரிட்சை செய்தாள். நிச்சயம் அவள் அருள் தமக்குக் கிட்டும் என்ற திடபுத்தி அவரிடம் நிலை கொண்டிருந்தது. "உன் கடைக்கண் பார்வைக்கு என்னை இலக்கு ஆக்கு. என்மீது உன் அருள் அமுத மழை பொழியுமாயின் யான் வேட்கும் இலட்சியம் கைகூடும்" என்று அவளைத் தோத்தரித்தார். அவள் கருணையையும், இன்னருளையும் தம் உள்ளத்தில் தரித்துக்கொண்டார்.

இப்பாடலில் மகாகவி ஒன்றைத் தெளிவுபடுத்துகிறார். தாம் வேட்கும் அருள் தம்பொருட்டு அன்று. அவர் வேண்டுகோளில் சுயநலம் லவலேசமும் இல்லை. திருமகள் அருள்கொண்டு தாம் இவ்வையத்தைப் பாலித்திடவே விழைந்தார். இந்த மாநிலம் தம்மால் பயனுறல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவர் விளங்கினார். அவள் அருள், தம் பாட்டில் வெளிப்பட, அப்பாட்டுத் திறத்தால் இவ்வையத்தை வாழ்விக்க விரும்பினார். இக்குறிக்கோள் நிறைவேற பெருந் தெய்வங்களை அவர் வேண்டினார்.

"செய்யா ளினியாள் ஸ்ரீதேவி,
செந்தாமரையிற் சேர்ந்திருப்பாள்
கையா ளெனநின் றடியேன் செய்
தொழில்கள் யாவும் கைகலந்து
செய்வாள்; புகழ்சேர் வாணியுமென்
னுள்ளே நின்று தீங்கவிதை
பெய்வாள், சக்தி துணைபுரிவாள்
பிள்ளாய், நின்னைப் பேசிடிலே"

என்று விநாயகரை ஏற்றினார், போற்றினார்.

கிருதயுகத்தினைக் கேடின்றி தாம் ஆக்கவே விரதம் பூண்டவர் மகாகவி. ஆகவே, ஸ்ரீதேவியைப் பார்த்து, "அமரயுகம் செய்யத் துணிந்து நிற்பேன்" என்றார். தேனானதேவி, தம் இரு கண்ணான செல்வி, தம்மை உகந்து, தானாகவே அத்தையல் தம்பால் வந்தருள வேண்டினார்.

தேன், சோறு போன்ற சொற்கள் முத்தியைக் குறிப்பன. "அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்து," "பாதகமே சோறு பற்றினவா," "அன்னம் பாலிக்கும் தில்லை," "சோழநாடு சோறுடைத்து," என்பனவற்றை தியானிப்போமாக.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

14. மூன்று காதல்

முதலாவது; ஸரஸ்வதி காதல்

பிள்ளைப் பிராயத்திலே - அவள்
பெண்மையைக் கண்டு மயங்கிவிட் டேனங்கு
பள்ளிப் படிப்பினிலே - மதி
பற்றிட வில்லை யெனிலுந் தனிப்பட
வெள்ளை மலரணை மேல் - அவள்
வீணையுங் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருளமுதும் - கண்டென்
வெள்ளை மனது பறிகொடுத்தே னடா! 1

ஆடி வருகையிலே - அவள்
அங்கொரு வீதி முனையி னிற்பாள் கையில்
ஏடு தரித்திருப்பாள் - அதில்
இங்கிதமாகப் பதம் படிப்பா ளதை
நாடி யரு கணைந்தால் - பல
ஞானங்கள் சொல்லி யினிமை செய்வா ளின்று
கூடி மகிழ்வ மென்றால் - விழிக்
கோணத்திலே நகை காட்டிச் செல்வா ளடா! 2

ஆற்றங் கரைதனிலே - தனி
யானதொர் மண்டப மீதினிலே தென்றற்
காற்றை நுகர்ந் திருந்தேன் - அங்கு
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தா ளதை
ஏற்று மன மகிழ்ந்தே - அடி
என்னொ டிணங்கி மணம்புரிவா யென்று
போற்றிய போதினிலே - இளம்
புன்னகை பூத்து மறைந்து விட்டா ளடா! 3

சித்தந் தளர்ந்த துண்டோ? - கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பித்துப் பிடித்ததுபோல் - பகற்
பேச்சு மிரவிற் கனவு மவளிடை
வைத்த நினைவை யல்லால் - பிற
வாஞ்சை யுண்டோ? வய தங்ஙனமே யிரு
பத்திரண் டாமளவும் - வெள்ளைப்
பண்மகள் காதலைப் பற்றிநின்றே னடா! 4

இரண்டாவது : லக்ஷ்மி காதல்

இந்த நிலையினிலே - அங்கொர்
இன்பப் பொழிலி னிடையினில் வேறொரு
சுந்தரி வந்து நின்றாள் - அவள்
சோதி முகத்தி னழகினைக் கண்டென்றன்
சிந்தை திறை கொடுத்தேன் - அவள்
செந்திரு வென்று பெயர்சொல்லினாள் மற்றும்
அந்தத் தினமுதலா - நெஞ்சம்
ஆரத் தழுவிட வேண்டுகின்றே னடா! 5

புன்னகை செய்திடுவாள் - அற்றைப்
போது முழுது மகிழ்ந்திருப்பேன் சற்றென்
முன்னின்று பார்த்திடுவாள் - அந்த
மோகத்திலே தலை சுற்றிடுங் காண் பின்னர்
என்ன பிழைகள் கண்டோ - அவள்
என்னைப் புறக்கணித் தேகிடுவா ளங்கு
சின்னமும் பின்னமுமா - மனஞ்
சிந்தியுளமிக நொந்திடுவே னடா! 6

காட்டு வழிகளிலே - மலைக்
காட்சியிலே புனல் வீழ்ச்சியிலே பல
நாட்டுப் புறங்களிலே - நகர்
நண்ணு சில சுடர் மாடத்திலே, சில
வேட்டுவர் சார்பினிலே - சில
வீரரிடத்திலும், வேந்தரிடத்திலும்
மீட்டு மவள் வருவாள் - கண்ட
விந்தையிலே யின்ப மேற்கொண்டு போமடா! 7

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூன்றாவது : காளிகாதல்

பின்னொ ரிராவினிலே - கரும்
பெண்மை யழகொன்று வந்தது கண்முன்பு
கன்னி வடிவ மென்றே - களி
கண்டு சற்றே யருகிற் சென்று பார்க்கையில்
அன்னை வடிவமடா - இவள்
ஆதி பராசக்தி தேவியடா! இவள்
இன்னருள் வேண்டுமடா - பின்னர்
யாவு முலகில் வசப்பட்டுப் போமடா! 8

செல்வங்கள் பொங்கிவரும் - நல்ல
தெள்ளறி வெய்தி நலம்பல சார்ந்திடும்
அல்லும் பகலு மிங்கே - இவை
அத்தனை கோடிப் பொருளினுள்ளே நின்று
வில்லை யசைப்பவளை - இந்த
வேலை யனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிர்ப்பவளை - நித்தம்
தோத்திரம் பாடித் தொழுதிடுவோ மடா! 9

இப்பாடலில் ஞானவாணியும், செந்திருவும், உமையம்மையும் மகாகவியால் போற்றப்படுகின்றனர். ஊனடைந்த உடம்பின் பிறவி உறுதிபெற கல்வியும், செல்வமும், அருளும் வேண்டப்படும். கல்வி தெளிவைத் தரும். செல்வம் அறவாழ்விற்கு அடிகோலும். அருள் பரிபூர்ணம் வழங்கும்.

மகாகவிக்குக் கல்வி நாட்டம் என்பது உடன்பிறப்பு. அவர் சிறு பிள்ளையாக இருந்தபோதே சரஸ்வதியின் கடாக்ஷம் பெற்றவர். அது இன்று நேற்று வந்த உறவன்று; நெடும் பண்டைக்காலம் முதல் நேர்ந்து வந்ததாம். வாணி வயப்பட்டார்க்குப் பள்ளிப்படிப்பு மிகை. பாரதியாருடைய அறிவு பள்ளிப்படிப்பில் தோயவில்லை. இஃதோர் குறை அன்று என்கிறார் அவர். பாரதியார் தனிமையைப் போற்றுவார். "தனிமை கண்டதுண்டு; அதிலே சாரமிருக்குது அம்மா!" என்று அவர் கூறியுள்ளார். அவர் பெற்ற தனிமையிலே அவர் உற்றது வாணி தரிசனம். காட்சி தந்த கலைவாணி வெள்ளைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாமரையில் வீற்றிருந்தாள். அவள் கையில் வீணை விளங்கியது. ஒளி பொருந்திய அவள் முகம் ஞானக் கதிர்களை வீசிற்று. அவற்றை வாரி உண்ட பாரதியார் உண்மை கண்டார். அக்கணமே தம் வெள்ளை மனத்தை வாணிக்குச் சமர்ப்பித்தார்.

கற்பனை உலகில் ஞானரதம் செலுத்தியவர் பாரதி. அவ்வுலகில் வளைய வருதல் அவர் பழக்கம். அங்குக் களித்து ஆடி வருகையில் அவர் வீதி முனையில் வாணி நிற்பதைக் கண்டார். அவள் ஞான ஏட்டினைக் கைக்கொண்டிருந்தாள். அவ்வேட்டில் உள்ள சிலவற்றைப் பண்ணோடு பாடினாள். அவளை நாடி பாரதி அவள் அருகில் சென்றார். அப்போது அவருக்குக் கலைவாணி ஞானோபதேசம் அருளினாள். "நீ வேறு நான் வேறு எனாதிருக்க வேண்டும்" என்று அவளிடம் பாரதி விண்ணப்பித்தபோது, பாரதியான சரஸ்வதி பாரதிக்குத் தன் விழிக்கோண மென்னகை காட்டி அகன்றுவிட்டாள். அவள் காட்டிய இங்கிதம் ஞான சாரமாகும்.

மகாகவியின் தனிமை உலகம் ஒரு தனிச்சிறப்புடையது. அங்கே ஞான கங்கை பாயும். அவ்வாற்றின் கரையில் தனியான மண்டபம் ஒன்று உண்டு. அங்கிருந்தபடியே தென்னந் தமிழுடன் பிறந்த தென்றலை அவர் நுகர்ந்து இன்புறுவார். அப்படி அவர் இன்புற்ற நாள் ஒன்றில் சரஸ்வதி அங்கு வந்தனள். அவளை பாரதி கன்னி என்கிறார். வந்தவள் கன்னித் தமிழ்த் தாய்தானே! தன்னுடைய கவிதையை அவள் பாரதிக்குச் சமர்ப்பித்தாள். தன் பாடலை பாரதி ஏற்கவேண்டும் என்பதுதான் அவள் பெருவிழைவு. புலவர்கள் தாம் பாடிய பாடல்களை ஸரஸ்வதிக்குச் சமர்ப்பிப்பர். இங்கு ஸரஸ்வதி தான் பாடிய பாடலை பாரதிக்குச் சமர்ப்பிக்கிறாள். அவள் கவிதை செவ்விது என்று பாரதி ஏற்றார். அடடா, இந்தச் சிறப்பு வேறு எந்தக் கவிக்கு உண்டு? பாரதி பாடியதை பாரதி ஏற்று மனமகிழ்ந்தாராம். அதன் விளைவை வெளிப்படுத்த, தம்மோடு வாணி அத்துவிதமாகக் கலந்திருக்க வேண்டும் என்று தம் ·விருப்பத்தைத் தெரிவிக்க, கன்னியாம் கலைவாணியும் இளமுறுவல் காட்டி மறைந்து போனாள்.

தாம் வேட்ட அத்துவித உறவு தள்ளிப்போனாலும், பாரதியின் சித்தம் தளரவில்லை. கலைத்தேவியின்மீது அவர் கொண்ட விழைவு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாடொறும் பெருகிவளர அவள்மீது அவர் பித்துற்றார். தாம் உற்ற மதோன்மத்த நிலையில் பகற்போதிலும், கங்குலில் கொள்ளும் உறக்கத்தில் உற்ற கனவிலும், அப்பெருமாட்டி மீது அவர் பதித்து வைத்த நினைவு நிலைத்தே நின்றது. வேறு எந்த ஒரு விருப்பும் அவரை அண்டவில்லை. பிள்ளைப் பிராயத்தைக் கடந்து 22 வயதுடைய யுவராக விளங்கினார். யுக புருஷர், இப்படிப் பல ஆண்டுகள் பாரதியையே பற்றுக்கோடாகக் கொண்டிருந்தார் பாரதியார்.

வாணி உபாசனையில் ஈடுபட்டிருந்த மகாகவி ஸ்ரீதேவியால் ஈர்க்கப்பட்டார். இவ்வனுபவமும் அவர் தனிமை உலகில் நிகழ்ந்ததுவே. இன்பப் பொழில் ஒன்றில் அவர் இருந்தபோது அவர் முன்பு ஒரு சொக்கழகுச் சுந்தரி வந்து நின்றாள். அவள் முக ஒளியைக் கண்ட அளவிலேயே அவர் தம்முடைய சிந்தையை அவளுக்குத் திறையாக வழங்கிவிட்டார். அதைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீதேவி தன் பெயர் செந்திரு என்றனள். அன்று முதல் அவளோடு அத்துவிதப் படவேண்டும் என்று நெஞ்சார விழைந்தார் மகாகவி.

அம்மாது நல்லாளின் சோதிமுகப் புன்னகையைத் தரிசித்த அளவில் அற்றைப் பொழுது முழுதும் உவகைப் பெரு வெள்ளத்தில், தேனில் தோய்ந்த ஞிமிறென, இன்புற்றுத் திளைப்பார். அச்சீமாட்டி பாரதி முன்பு வந்து நின்று தன் பார்வையை மகாகவிமீது செலுத்த, அவர் கிறுகிறுத்துப்போய் விடுவார். அக் கிறக்கத்தால் அவர் தலை சுற்றும். ஆனால் இச்சந்திப்பு தொடரவில்லை. மகாகவி என்ன தவறிழைத்தாரோ? அதனை அவர் அறியார். செந்தாமரையாள் மகாகவியைப் புறக்கணித்து அப்பால் போய்விட்டாள். அவர் உள்ளம் சின்னாபின்னம் அடைந்தது. மன உளைச்சலுக்கு ஆளானார். உளம் நொந்து நின்றார்.

இதன் பின்னர் அவர் பெற்ற அனுபவம் நனி நூதனமானது; சால விசேடமானது. தனியோர் இடத்தில் நிகழ்ந்த சந்திப்பு அங்கங்கும் பரவலாயிற்று. கவிஞரின் காட்சி விரிவு பெற்றது. காட்டு வெளிகளில் அவளைக் கண்டார். பர்வதங்களில் அவளைப் பார்த்தார். மலையருவியில் அவ்வலைமகள் தோன்றினாள். அம்மட்டோ? நாட்டுப்புறங்களிலும் அவள் தோற்றம் காட்டியருளினாள். நகரில் அமைந்த சுடர் மாடங்கள் அவளது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கையாயின. வேடர், வீரர், வேந்தர் ஆகியோரிடமும் அவள் தென்பட்டாள். இங்ஙனம் மகாகவி கண்ட காட்சியில் இன்பம் மீதூர்ந்து விளங்கியது.

கலை மகளிடமும், அலைமகளிடமும், பழகிய பாரதியார் மலைமகள் தரிசனத்தில், இதற்கு முன்பு காணாத பேர் இறும்பூது எய்தியதையும் இப்படி வருணிக்கிறார். இரவுப் பொழுது கங்குலில் கரும் பெண்மை அழகு அவர் கண்முன்பு காட்சி தந்தது. இக் கன்னி வடிவத்தின் கவினை நெருங்கிக் காண்டல் வேண்டும் என்று களிப்பொடு கருதிய மகாகவி உற்ற தெய்வ அதிர்ச்சி இதுவே. காட்சி தந்தவள் அகிலாண்டகோடி ப்ரம்மாண்ட நாயகியாம் அன்னை காளியே. வந்தவள் ஆதி பராசக்தி. அவள் வடிவம் தடையிலா ஞானமாயிற்றே. அவள் இன்னருள் கைவரப்பெற்றால், பின்னர் உலகில் யாவும் வசப்படுமே! அவள் அருள் பெற்றோர் பெறும் பயன்கள் சொல்லில் அடங்கா. செல்வங்கள் பொங்கிவரும். நனி நல்ல தெள்ளறிவு கைவரப்பெறும். தெளிவு பெற்ற மதியினை ஒப்பதோர் செல்வமுண்டோ? ஈதுள்ள இடத்தில் அதர்வினாய் நலம் பல வந்து சாரும். அனைத்துச் செயல்களின் ஆதாரம் சக்தி என்றே அருமறைகள் சாற்றுகின்றன. யாண்டும் எஞ்ஞான்றும் அனைத்துப் பொருளின் உள்ளே நின்று இயக்குபவள் அவள் அல்லளோ? இவ்வனைத்தையும் செய்யும் அவளை வினைச்சி என்கிறார் பாரதியார். திருமூலரும் சக்தியைப் "புரி வளைக் கைச்சி" என்கிறார். உடல் உள்ளிருந்து வில்லை அசைக்கும் கிரியா சக்தியும் அவள்தானே! அவள் அருளால் தொல்லைகள் தொலையும். ஆகவே தொல்லை தவிர்ப்பவளை நித்தம் தோத்திரம் பாடித் தொழல் வேண்டும் என்று ஆணையிடுகிறார் அமரகவி.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

15. நவராத்திரிப் பாட்டு

உஜ்ஜயினீ! நித்ய கல்யாணீ!
ஓம் சக்தி ஓம்சக்தி ஓம் சக்தி ஓம்சக்தி (உஜ்ஜயினீ!)

உஜ்ஜய காரண சங்கர தேவி
உமா ஸரஸ்வதி ஸ்ரீ மாதா ஸா. (உஜ்ஜயினீ!)

வாழி புனைந்து மஹேசுவர தேவன்,
தோழி, பதங்கள் பணிந்து துணிந்தனம் (உஜ்ஜயினீ!)

ஸத்ய யுகத்தை அகத்தி லிருத்தி
திறத் தைநமக்கருளிச் செய்யும் உத்தமி (உஜ்ஜயினீ!)

இப்பாடலில் மலைமகள், அலைமகள், கலைமகள் ஆகிய மூவரும் போற்றப்படுவதால் இப்பாடலின் தலைப்பு நவராத்திரிப் பாட்டு என்று காட்டப்பட்டிருக்கிறது. இதை அடுத்துவரும் பாடலுக்கும் இதே மகுடம் தரப்பட்டிருக்கிறது. மகாகவி என்ன தலைப்புத் தந்தார் என்று அறியக்கூடவில்லை.

வடநாட்டில் உள்ள உஜ்ஜயினி காளி பாரததேசம் முழுவதும் போற்றப்படுகின்றவள். உஞ்சை மாகாளம் என்ற வைப்புத்தலம் இதனையே குறிப்பதாகக் கூறுவர். திருக்காட்டுப்பள்ளியை ஒட்டிய நியமத்தின் (நேமத்தின்) அருகில் உஞ்ஜினியும் உஜ்ஜையினி என்கிறார் குடவாயில் பாலசுப்பிரமணியன்.

பாரதியார் காளிதாசன். தம்மைப் பிஞ்சுக் காளிதாசன் என்றே கூறி வந்தவர். காளிதாசர் உஜ்ஜயநி காளி அருள்பெற்றவர். பராசக்தியை உஜ்ஜயநி என்று போற்றும் மரபு நெடுஞ் சேய்மையானது. இந்த உஜ்ஜயநி நித்திய கல்யாணி. சிவனாரை நித்த மணாளர் என்று தானே மணிவாசகம் போற்றுகிறது. “நித்த மணாளர்” நிரம்பிய அழகரும் ஆவர், அவர் மனைவியார் நித்ய கல்யாணி. சாஸ்வத மங்கள சொரூபி. அவள் அழிவற்ற சக்தி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓமெனும் ஒரு மொழியை உச்சரித்து பிறகு சக்தி என்று ஓதினால் உயிர்க்கு உறுதி கூடும். ஆகவே, "ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி" என்றே தம் பாடலின் இரண்டாம் அடியை மகாகவி அமைத்திருக்கிறார். நான் மறைகளின் உண்மைப் பொருளை நான்கு முறை கூறித் துதிக்கிறார்.

இவ்வன்னையை "உஜ்ஜய காரண சங்கர தேவி" என்று மகாகவி போற்றுகிறார். ஆம், இவ்வன்னையே வெற்றிக்குக் காரணமாவாள். வெற்றி எட்டுத் திக்கும் எட்ட அருள்பாலிப்பவள். இவள் சங்கரன் தேவி. "சலமிலன் சங்கரன்" என்பது வாகீச வேதம். இதையே திருவருட் பயன் வழிமொழிகிறது. இவள்: உமா, சரஸ்வதி, ஸ்ரீதேவி. இப்பாடலின் நான்காம் அடியை 'ஸா' என்று ஒரு சொல் கொண்டு முடிக்கிறார். 'ஸா' என்றால் வடமொழியில் 'அவள்' என்று பொருள். வடமொழியும், தென்தமிழும் சிவனார் நமக்கு வழங்கிய கொடை. "தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும் உணர்த்தும் அவனை உணரலும் ஆமே" என்றும், "ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே" என்றும் திருமந்திரம் சாற்றுகிறது.

மஹேசுவரன் அருளால் மஹேசுவரியை வணங்க முடிந்ததை எண்ணி மகாகவி மகிழ்கிறார். ஆகவே இக்காரியத்தை சாதித்துத் தந்த தம் மனத்தை 'வாழி' என்று போற்றுகிறார். தமிழ் இலக்கியத்தில் 'பைந்தொடி', 'தோழி' போன்ற சொற்கள் மனத்தைக் குறிக்கும். மஹேசுவர மகாதேவனின் பதங்களைச் சென்னியில் புனைந்து பணிந்து ஓர் உறுதி கூறுகிறார் பாரதியார். 'துணிந்தனம்' என்று இதை அறிவிக்கிறார்.

அவர் பெற்ற துணிவு யாது? இப்போது நடைபெறுவது கலி யுகமாயினும், சத்திய யுகத்தை அகத்தில் இருத்திவைக்க முடியும். இத்திறத்தை நமக்கு அளுபவள் பராசக்தி. அவளே உத்தமி. அப்பெயரே கொண்டு அவளைப் போற்றியவர் அருணகிரிநாதர். விநாயகரை 'உத்தமி புதல்வன்' என்று அவர் அறிவித்ததை மறக்க முடியுமா? அவ்வுத்தமியைப் போற்றுவோம்.

ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம் சக்தி.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

16. நவராத்திரிப் பாட்டு – II

பராசக்தி
(மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி)

மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய்
ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே?
ஏதாயினும் வழி நீ சொல்வாய்; எமதுயிரே,
வேதாவின் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே. 1

வாணி

வாணி கலைத்தெய்வம், மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்.
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே. 2

ஸ்ரீ தேவி

பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவரத்தினம் போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே. 3

பார்வதி

மலையிலே தான்பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி யுலகக் கனல் வளர்ப்பாள்
நிலையி லுயர்த்திடுவாள், நேரே யவள் பாதந்
தலையிலே தாங்கித் தரணிமிசை - வாழ்வோமே 4

பராசக்தி பராபரை ஆவாள். பரிபூரணமாயிருக்கிற மேன்மையுடையவள். அவளே ஆதி (திரோத) சக்தியாய், இச்சா, ஞான, கிரியா சக்திகளாய் செயல்படுபவள். ஓங்கு ஒளியாய் அருள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஞானமூர்த்தியாகி உலகமெலாம் அளித்து அருளும் உமையம்மை அவள். அப்பராசக்தியின் தாஸன் பாரதி. தம்மை சக்திதாஸன் என்று அறிவித்தார் அவர். அவ்வன்னையின் எங்கும் நிறைந்த தன்மையைப் போற்றி, "மாதா பராசக்தி வையமெலாம் நீ நிறைந்தாய்" என்று தம் போற்றித் துதியைத் தொடங்குகிறார். வையவாழ்வில் தமக்கு ஆதாரம் அவளே, வேறு எவரும் இல்லை என்று அறை கூவுகின்றார். தாம் உகந்து பின்பற்றுமாறு ஏதாயினும் ஒரு வழியைத் தமக்குக் காட்டியருள வேண்டுகிறார். தம் உயிருக்கு உயிரான அத்தேவியை "எமதுயிரே" என்று விளித்துப் போற்றுகிறார். அருமறைகளைப் பயந்த பிரமனின் தாய் அவளே. அவ்வன்னையை 'தாழ்ந்து பணிந்து வாழ்வோமே' என்று துதி செய்கிறார்.

வாணி

வாணியே கலைத் தெய்வம். சுத்த மாயையில் தோன்றும், ஆணவ, கன்ம மலங்கள் விரவா, வாக்கினை அருளுபவள் அவளே. இதுவே அவள் புரியும் ஒப்பற்ற உதவி. அறிவையே நித்தியமாலையாக அணிபவள் வாணி. அம் முத்து மாலையில் உள்ள ஒவ்வொரு முத்தும் ஆணி முத்து, காண்பார் தங்காட்சியாய், காண்பாராய், காண்பொருளாய் மாண்பார்ந்து இருப்பவள் வாணி. அவளுடைய மலரடி சூழ்ந்து வாழவிழைந்தவர் மகாகவி.

ஸ்ரீ தேவி

பொன்னென்றும், பொருளென்றும் இருப்பன அனைத்திற்கும் அரசி ஸ்ரீதேவி. நாரணக் கடவுளின் தேவி அவள். புகழுக்கு அரசி அவளே. அவள் சொர்ணமயமான திருமேனி நவமணிகள்போல் ஒளிரும். அனைத்து உலகையும் நிலைபெறுத்தி வைப்பவள் அம் மாமகள். அவளது ஆதரவில் அகிலம் தழைக்கிறது. "ஸ்ரீதேவியின் ஸ்ரீபாதங்கள் நமக்குச் சரண கமலங்கள்" என்று போற்றி அவ்வன்னையைத் தமக்குப் புகலாகக் கொள்ளுகிறார் பாரதியார்.

பார்வதி

தாக்ஷாயணியாய்த் தோற்றமெடுத்த குறைதீர இமவான் புத்திரியாக இமயமலையில் தோன்றினாள் பார்வதி. வளர் சிமய இமயப் பொருப்பில் விளையாட்டயர்ந்த இப்பெருமாட்டி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இளமென்கொடி ஆவாள். இவள் இளமென் பிடியும் ஆவாள். சலமிலாச் சங்கரன் இச்சீமாட்டியை நாடிவந்து மாலை சூட்டினான்.

பனிபடர்ந்த இமயமலையில் இவள் உலைவைத்து ஊதியதால் ஜீவராசிகளுக்குத் தேவைப்படும் கதகதப்பு குறைவின்றி உள்ளது. அங்கோர் உலையில் ஊதி உலகில் உள்ள இல்லம் ஒவ்வொன்றின் உலையிலும் கனல் எழக்காரணமாயினாள். பக்தர்கள் உள்ளத்தில் சிவக் கனலை எழுப்பும் சிவகாமசுந்தரி இவள். நவசக்திகளுக்கும், நவநவமாய்த் தோன்றும் சக்திகளுக்கும் நாயகி இவளே. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம், தான் வளர் மலையின் மாண்புடைத்தாய் ஆக்குவாள். இதையே "நிலையில் உயர்த்திடுவாள்" என்று மகாகவி போற்றுகிறார். இவள் இராஜராஜேஸ்வரி. இவள் திருப்பாதம் செம்மலர் நோன்றாள்.

"நேரேயவள் பாதம் தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே" என்று கூறித் தம் பாடலைத் தாடலையாக்கித் தலைக்கட்டுகிறார் சக்தி தாஸனார்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

17. சக்தி

துன்ப மிலாத நிலையே சக்தி
தூக்கமிலாக் கண் விழிப்பே சக்தி
அன்பு கனிந்த கனிவே சக்தி
ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி
இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி
எண்ணத்திருக்கு மெரியே சக்தி
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி
முக்தி நிலையின் முடிவே சக்தி. 1

சோம்பர் கெடுக்கும் துணிவே சக்தி
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி
தீம்பழந் தன்னில் சுவையே சக்தி
தெய்வத்தை யெண்ணு நினைவே சக்தி
பாம்பை யடிக்கும் படையே சக்தி
பாட்டினில் வந்த களியே சக்தி
சாம்பரைப் பூசி மலைமிசை வாழும்
சங்கர னன்புத் தழலே சக்தி. 2

வாழ்வு பெருக்கு மதியே சக்தி
மாநிலங் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி
சஞ்சல நீக்குந் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை யளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி. 3

"எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்று பாரதிதாஸன் பாடினார். சக்தி தரிசனம் ஓர் உன்னதக் காட்சி. துக்கக் கலப்பு இல்லாததே சக்தி நிலை. இதில் தூக்கக் கலக்கத்திற்கு இடமே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இல்லை. புறக்கண் மூடிய நிலையிலும் சக்தி அருளால் அகக்கண் திறந்தே இருக்கும், "அகத்தில் கண்கொண்டு காண்டலே ஆனந்தம்" என்று திருமூலர் அருளியுள்ளார். அகக்கண் விழித்திருத்தல் சக்தியின் அருளால். நேயத்தே நிற்பார்க்கு உடனாய் நிற்பவள் சக்திதேவி. அதாவது, அன்பு அளித்த கனிவே சக்தி. ஆளுமையின் கொலுபீடமே சக்தி. சக்தியிடம் அன்னையின் பெண்மையும், அத்தனின் ஆண்மையும் நிரம்பி நிற்கும். சக்தி என்பது பேரின்பக் கனி ரஸம். இன்ப முதிர்வு சக்தி. நல் எண்ணச் சுடர் சக்தியே. இதைத்தான் 'எண்ணத்திருக்கும் எரியே சக்தி' என்கிறார் மகாகவி. சக்தியருள் கொண்டே பாரதியார் பாடினார். "நமக்குத் தொழில் கவிதை" என்று கழறியவர் அவர். அவரவர் இயற்றவேண்டிய தொழிலாக விளங்குபவள் சக்தி. கர்மயோகம் முக்திக்கான மார்க்கம். ஆகவே முக்திநிலையின் முடிவே சக்தி.

ஜீவனிடம் தாமஸ குணம் மேலோங்கி நிற்கும். அதில் சுவை கண்டு அங்கேயே அமிழ்ந்திருக்க ஜீவன் விரும்பும், இந்நிலையை உதறி எறியத் துணிதல் வேண்டும்; இத்துணிவைத் தருபவள் சக்தி. சக்தியே ஆன்மாவின் சோம்பரை அகற்றுபவள். "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று அறிவித்தவர் மகாகவி. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழியே மந்திரச் சொல். அச்சொல்லில் விளங்கும் சுடரே சக்தி. தீம் பழந்தன்னில் சுவையே சக்தி. தீம்பழம் என்பது சிவக்கனி. பாரதி போற்றிய அப்பர் அடிகள்,

"மனிதர்காள் இங்கே வம்; ஒன்று சொல்லுகேன்
கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங் கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே"

என்று அருளினார். இச்சிவக் கனியின் சுவையே சக்தி. சிவசக்திகளின் உறவு தாதான்மியம். அதாவது ஒன்றன் இருமை. தெய்வ சிந்தையில் தோய்ந்திருப்பவர் மகாகவி. அவன் அருளாலேதான் அவன்தாள் வணங்குதல் ஒல்லும். வணங்கல் வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பவள் சக்தி. ஆகவே, "தெய்வத்தை எண்ணு நினைவே சக்தி" என்கிறார் சக்திதாஸன். சக்தியே கொடுமையைச் சாடும் படையாவாள். இதையே சூசகமாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"பாம்பை அடிக்கும் படையே சக்தி" என்கிறார் பாரதியார். பாரதியின் பாட்டை ஒருவன் பண்ணோடு பாட கவிமணி கேட்டுக் கிறுகிறுத்துப் போனார். பாட்டில் இப்பரவசத்தைப் படைத்தவள் சக்தி.

தூய்மை செய்வது தழல். சுடச்சுடப் பொன் ஒளிரும். சங்கரன் அன்புத் தழலாம் சக்தி நம் அக மாசுகளை சாம்பரும் இன்றி சுட்டெரிக்கும். என்றாலும், சவந்தாங்கு மயானத்துச் சாம்பரைப் பூசி மலைமிசை வாழ்பவன் சம்பு. இச்சம்புவின் சுயம்பு மூர்த்தத் தழலே சக்தி.

மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிவகுப்பது சக்தி. சித்தமிசை சிரத்தையோடு குடிகொண்டு பக்தனின் ஆக்கத்தைப் பெருக்குபவள் சக்தி. இங்ஙனம் மானுடத்தின் ஆக்கத்தைப் பெருக்கி மாநிலம் காப்பவள் சக்தி. தாழ்வுற்று வறுமை மிஞ்சி சஞ்சலம் பெருகும் நிலையிலும் இவற்றைத் தன் சதிரால் நீக்கிக்கொள்ளும் தவலிமையை அருளுபவள் சக்தியே. அவளுடைய விறல் வீழ்வைத் தடுத்து நல்வாழ்வைப் பயக்கும். அனைத்திற்கும் ஆதாரம் ஆகாயம். அவ்வாகாயத்தின் விரிவு சக்தியுள் அடங்கும். "ஊழிற் பெருவலி யாவுள?" என்று வினவியவர் அவ்வூழையும் உப்பக்கம் காணலாம் என்று கூறியுள்ளார். விதியை சக்தி அருளும் மதியால் வெல்ல முடியும். இப்படி உயர்வற உயர்நலமுடையவளாய்த் திகழ்பவள் சக்தி. இச்சக்தி உள்ளத்தில் ஒளிரும் விளக்காவாள். உள்ளொளியைத் தூண்டும் தூண்டா விளக்கவள். அவள் அருள் ஒளியில் வாழப் பிரார்த்திப்போம். இது சாதனை செய்க பராசக்தி.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18. சக்தி விளக்கம்

ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் - அதை
அன்னை யெனப் பணிதல் ஆக்கம்.
சூதில்லை காணுமிந்த நாட்டீர் - மற்றத்
தொல்லை மதங்கள் செய்யுந் தூக்கம் 1

மூலப் பழம்பொருளின் நாட்டம் - இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்.
காலப் பெருங்களத்தின் மீதே - எங்கள்
காளி நடமுலகக் கூட்டம். 2

காலை யிளவெயிலின் காட்சி - அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி
நீல விசும்பினிடை யிரவிற் - சுடர்
நேமி யனைத்துமவ ளாட்சி. 3

நாரண னென்று பழவேதம் - சொல்லும்
நாயகன் சக்தி திருப் பாதம்.
சேரத் தவம்புரிந்து பெறுவார் - இங்கு
செல்வ மறிவு சிவபோதம். 4

ஆதி சிவனுடைய சக்தி - எங்க
ளன்னை யருள் பெறுதல் முக்தி
மீதி யுயிரிருக்கும் போதே - அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி. 5

பண்டை விதியுடை தேவி - வெள்ளைப்
பாரதி யன்னையருள் மேவி
கண்ட பொருள் விளக்கும் நூல்கள் - பல
கற்றலில் லாதவனோர் பாவி. 6

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூர்த்திகள் மூன்று பொருளொன்று - அந்த
மூலப் பொரு ளொளியின் குன்று
நேர்த்தி திகழுமந்த வொளியை - எந்த
நேரமும் போற்று சக்தி யென்று. 7

ஆதிப் பரம்பொருளாம் சிவத்தின் ஆற்றலே சக்தி. இதையே சிவஞானபோதம் "ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே" என்று சாற்றுகிறது. சிவசக்தியே அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி. அவளே நம் அன்னை என்று பணிதலே நாம் பெறும் ஆக்கம். இந்நாட்டு மக்கள் இந்த சூக்கும தரிசனம் கைவரப் பெறுதல் வேண்டும். இதுவே தவநிறைவு. இதில் கைதவம் ஏதுமில்லை. அன்னையே அனைத்தும் என்பதே உண்மை மதம். அன்னைக்கு இடமளிக்கா ஏனைய மதங்கள் தாமசத்தின் தாக்கத்தால் விளைந்தவை, அவை வழங்குவன துக்கமும், தூக்கமுமே.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் இருப்பதே மூலப் பழம்பொருள். அதன் அருளாலே மூவுலகங்களும் இயங்குகின்றன. காலப்பெருங்களத்தின்மீது களிநடம்புரிபவள் நம் காளி. அவள் நடனமே உலகக் கூட்டத்திற்கு உறுதிப்பொருள் வழங்குவது.

காலை இளம்பரிதி வீசும் கதிர்ஒளிபோல் காளியின் கண்ணொளி அருளொளி வீசும். இந்த ஆரியக் காட்சி ஓர் ஆனந்தம் அன்றோ! பட்டுக் கருநீலப்புடவையில் பதித்த நல் வயிரம் போல் இரவில் சுடரும் தாரகைக் கூட்டம் உட்பட அனைத்து ஒளிப்பொருள்களும் காளியின் சக்கரமாண்பில் அடங்கும். அவள் ஆக்ஞா சக்கரத்தால் அனைத்து உலகங்களும் இயங்குகின்றன.

நலந்தரும் மந்திரம் நாராயண மந்திரம். அதன் அதிபதியாகிய நாராயணன் பழ வேதம் போற்றும் பெரும்பொருள், அருள் பொருள். அப்பெருமான் கருணை வடிவாம் சக்தி திருப்பாதம். சிவசக்தி பதம்பெற கூடித் தவம் புரிதல் வேண்டும். இக்கூட்டு முயற்சியில் முகிழ்ப்பனவே செல்வம், அறிவு, சிவஞானபோதம்.

பராசக்தி பராபரானகிய சிவனது சக்தி. அவளே நம் அன்னை. அவ்வன்னையின் அருள் பெறுதலே முக்தி. விதேக முக்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெறுவதற்கு முன்பே ஜீவன்முக்தி நிலை பெறுதல் வேண்டும். இதையே பாரதியார்,

"மீதி உயிர் இருக்கும் போதே - அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி"

என்று அருளியுள்ளார்.

சக்தியே சரஸ்வதிக்கு அருள்புரிபவள். மலைமகள் அருளால் கலைமகள் சிறந்து விளங்குகிறாள். அறிவைப் பெறுவதற்கான விதிமுறைகளைப் பண்டே வகுத்துத் தந்தவள் வாணி. அவள் அருளாலே விளைந்த நூல்கள் உண்மைப் பொருளுக்கான விளக்கம் வழங்குபவை. இவற்றைக் கற்றுத் தேர்ந்து அனுட்டிக்க வேண்டும். அப்படியிருக்க இந்நூல்களைக் கல்லாமலே இருப்பவன் யார்? அவன்தான் பாவி என்கிறார் பாரதியார்.

ஒரே பரம்பொருள் மூன்று தெய்வங்களாக விளங்குகிறது. அப்படியுள்ள மூலப்பொருள் பேரொளிக்குன்று; அதாவது சக்தி. ஆகவே நேர்த்தியொடு திகழும் இந்த ஒளியை எந்த நேரமும் சக்தி என்று போற்றவேண்டும்.

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி!

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

19. சக்தி திருப்புகழ்

சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
சக்தீ யென்றோது
சக்தி சக்தி சக்தீ யென்பார் சாகா
ரென்றே நின்றோது. 1

சக்தி சக்தி யென்றே வாழ்தல் சால்பா
நம்மைச் சார்ந்தீரே
சக்தி சக்தி யென்றீ ராயில் சாகா
வுண்மை சேர்ந்தீரே. 2

சக்தி சக்தி யென்றால் சக்தி தானே
சேருங் கண்டீரே
சக்தி சக்தி யென்றால் வெற்றி தானே
நேருங் கண்டீரே. 3

சக்தி சக்தி யென்றே செய்தால் தானே
செய்கை நேராகும்
சக்தி சக்தி யென்றா லஃது தானே
முக்தி வேராகும். 4

சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
யென்றே யாடோமோ?
சக்தி சக்தி சக்தீ யென்றே தாளங்
கொட்டிப் பாடோமோ. 5

சக்தி சக்தி யென்றால் துன்பந் தானே
தீருங் கண்டீரே
சக்தி சக்தி யென்றா லின்பந் தானே
சேருங் கண்டீரே. 6

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சக்தி சக்தி யென்றால் செல்வம் தானே
யூறுங் கண்டீரோ?
சக்தி சக்தி யென்றால் கல்வி தானே
தேறுங் கண்டீரோ? 7

சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
சக்தீ வாழீ நீ
சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ
சக்தீ வாழீ நீ. 8

சக்தி சக்தி வாழீ யென்றால் சம்பத்
தெல்லா நேராகும்
சக்தி சக்தி யென்றால் சக்தி தாச
னென்றே பேராகும். 9

சக்தியின் புகழ் பரவும் பாடலிது. பாரதியார் எப்படி சக்தி தாஸன் ஆனார் என்ற கேள்விக்கு விடை இப்பாடலில் கிடைக்கிறது. பாடலின் முடிவிலே "சக்தி சக்தி யென்றால் சக்தி தாச(ன்) என்றே பேராகும்" என்ற செய்தி அருளப்பட்டிருக்கிறது.

வழுக்கி வீழினும் சக்தியின் திருநாமத்தை வழுத்துவார் பாரதியார். எப்போதும் சக்தியின் நாமத்தை ஓதவேண்டும் என்ற அவரது ஆணை பாடலின் தொடக்கத்திலேயே அருளப் பட்டிருக்கிறது. இந்நாமத்தைக் கூறி வருவார் சாகார் என்று மகாகவி கூறுகிறார். "தமிழ்த் தொண்டர் பாரதிதான் செத்ததுண்டோ?" என்று பாரதிதாஸன் கூறியுள்ளதை நினைவு கூர்வோம்.

சக்தி சக்தி என்று வாழ்தலே சால்பு என்று அறிவிக்கிறார் பாரதியார். சால்பு என்ற சொல் மேன்மை, சான்றாண்மை, நற்குணம், மனவமைதி என்றெல்லாம் பொருள்படும். மேலும்,

> "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
> ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

என்கிறார் வள்ளுவர். சக்தியின் திருப்பெயரையே வாழ்விற்கான சால்பு என்று உணர்ந்தோர் தம்மைச் சார்ந்தவர் என்று அவர்களைக் கொண்டாடுகிறார் பாரதியார். இவர்கள் எய்திய சால்பால் அமரத்துவம் அடைந்தவர்கள் என்று மகாகவி போற்றுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சக்தி சக்தி என்றால், அங்ஙனம் கூறுவோரிடம் சக்தி, தானே சேரும், அன்னார் எடுத்த காரியம் யாவினும் வெற்றி பெறுவர். இவ்வெற்றி விளைவு சக்தியின் லீலை.

சக்தி சக்தி என்று கூறியபடி எச்செய்கையைச் செய்தாலும் அச்செய்கை தானே நேரும். அம்மட்டோ? தொடர்ந்து அங்ஙனம் முழங்கிவந்தால், அதுவே அவர்கள் பெற உள முக்திக்கு வேராகும். சக்தி வேறு, முக்தி வேறா? இல்லையே!

சக்தி சக்தி என்று ஆடவேண்டும்; தாளங்கொட்டிப் பாடவேண்டும். சக்தி வயப்பட்டார் ஆடவும், தாளங்கொட்டிப் பாடவும் செய்வர்.

யாரும் துன்பம் உறவேண்டியதில்லை. சக்தி அருள் பரவாத இடத்தில் துன்பம் தோன்றும். சக்தி சக்தி என்று மொழிந்தவண்ணம் இருந்தால் துன்பம் தொலையும்; இன்பம் தானாகவே விளையும். இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

சக்தி உபாசகரிடம் செல்வமும், கல்வியும் மண்டிக் கிடக்கும். காரணம், சக்திக்கு மேற்பட்ட சக்தி இல்லை.

சக்தியை வாழ்த்த வேண்டும். அங்ஙனம் வாழ்த்தவே நாம் வாயுடன்கூடியிருக்கிறோம். சக்தியை வாழ்த்தினால் நாம் வாழலாம்.

சக்தியை வாழ்த்துவார் அனைத்து சம்பத்துக்களையும் சம்பூர்ணமாகப் பெறுவர். சக்தி தாஸராக மாறுவர். ஜகமெலாம் ஆளுவர்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

20. சக்திக் கூத்து

பல்லவி

தகத் தகத்தகத் தகதகவென் றாடோமோ - சிவ
சக்தி சக்தி சக்தி யென்று பாடோமோ? (தக)

சரணங்கள்

அகத் தகத் தகத்தினிலே உள்நின்றாள் - அவள்
அம்மை யம்மை யெம்மை நாடு பொய் வென்றாள்
தகத்தக நமக் கருள்புரிவாள் தாளொன்றே
சரண மென்று வாழ்ந்திடுவோம் நாமென்றே (தக) 1

புகப்புகப் புக வின்பமடா போதெல்லாம்
புறத்தினிலே தள்ளிடுவாய் சூதெல்லாம்
குகைக்கு ளங்கே யிருக்குதடா தீபோலே - அது
குழந்தை யதன் தாயடிக்கீழ்ப் பேய்போலே. (தக) 2

மிகத்தகைப்படு களியினிலே மெய்சோர - உள
வீரம் வந்து சோர்வை வென்று கைதேர
சகத்தினிலுள்ள மனிதரெல்லாம் நன்று நன்றென - நாம்
சதிருடனே தாளமிசை யிரண்டு மொன்றேன (தக) 3

இந்திரனா ருலகினிலே நல்லின்பம்
இருக்கு தென்பார் அதனை யிங்கே கொண்டெய்தி
மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம் - நல்ல
மதமுறவே யமுதநிலை கண்டெய்தி (தக) 4

இப்பாடலை மகாகவி பியாக் ராகத்தில் அமைத்திருக்கிறார். பாடலின் பல்லவியை அடுத்து நான்கு சரணங்கள் உள.

நாட்டியத்திற்கு பாடலுக்கு ஏற்ற ராகம் பியாக். "ஆடும் சிதம்பரமே" எனத் தொடங்கும் பாடல் பியாக் ராகத்தில் அமைந்த பாடல். நல்ல தாளக் கட்டுடைய பாடலிது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தகத் தகத் தகத் தக தக என்று ஆடவேண்டுமாம்; பாடியபடி சிவசக்தி சக்தி சக்தி என்று பாடவேண்டுமாம். பாடிய படியே ஆட வல்லார்க்கு ஆர்வம் சேர்க்கும் பாடலிது.

பாட்டின் முதலடியில் சரிதக் குறிப்பும், கொழிப்பும் உண்டு. தொடக்கச் சொற்கள் வெறும் சொற்கட்டமாக மட்டுமில்லாமல், பொருள்படும்படியும் இருப்பது சுவையாக உள்ளது. "தகத் தக" என்ற சொற்றொடர் பொருள் பொதிந்தது என்பதை முதல் சரணத்தின் மூன்றாம் அடியில் பாரதியார் காட்டுகிறார்.

"தகத் தகத்..." என்பதற்கு ஏற்ப, சரணம் "தகத் தகத்..." என்று தொடங்குகிறது. சரணத்தின் முதலடி அகம், அகத்தில் உள்ள அகம் என்று மூவகை அகம் பற்றிப் பேசுகிறது. அகம் என்பது அந்தக் கரணம்; அகத்து அகம் என்பது அக அந்தக் கரணம், அதற்குள்ளும் இருப்பது ஆன்மா, அதற்குக் கரணம் சித்தம், மனம், புத்தி, ஆங்கார தத்துவங்கள். அக அந்தக்கரணம் வித்தியா தத்துவங்களான மிஸ்ர தத்துவங்கள். பிறகு இவையெல்லாம் கடந்து உள்ளே உள்ள ஆன்மா. இவ்வான்மாவின் ஆன்மா அன்னை பராசக்தி. அவள் போதானந்தப் பொருள். அவளைப் பொய் அண்டமுடியாது. மகாகவி அன்னையை "பொய் வென்றாள்" என்று போற்றுகிறார். அவள் இம்மை மறுமைகளைக் கடந்த அம்மை. "அம்மை எனக்கு அருளியவா ஆர் பெறுவார் அச்சோவே!" என்கிறது மணிவாசகம். எம்போலியரை நாடும் பொய் அவள் பார்வைபட்டு அழியும். உள்ளதாம் பொருள் அவளே. அவளை நாடும்படி நம்மைப் பணிக்கின்றார்! முயற்சி திருவினை ஆக்கும். நம் தகுதிக்கு ஏற்ப அவள் அருள்புரிந்து உறுதி கூட்டுவாள். இதையே தகத் தக அருள்புரிவாள் அன்னை என்கிறார் பாரதியார். ஆகவே அவள் தாள் ஒன்றே நமக்குக் கதி கூட்டும். அவள் சரணத்தில் சரண் புகுவோம்; அங்ஙனம் புகுந்து வாழ்வாங்கு வாழ்வோம்.

அன்னையின் அருட்பதங்களை அடைய. நாம் அவள் அருள் வெள்ளத்தில் புகப்புக இன்புறுவோம். எந்நேரமும் இன்பம், இன்பம், இன்பம். கைதவம் விட்டுமெய்த்தவம் புரிவோம். சக்தி ஒளி குகையில் ஒளிரும் தீ. குகை என்பது இருதயம்; தகராகாசம். நம்முள் ஒளிர்ந்து நமக்கு வழி காட்டுபவள் நம் அன்னை. அன்னையின் மடியிலும் அடியிலும் விளங்கும் குழந்தைகளே நாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பாடலில் "குழந்தையதன் தாய் அடிக்கீழ்ப் பேய் போலே" என்றுள்ள அடியை எங்ஙனம் புரிந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி நான் வரைந்த வழி வழி பாரதி என்ற நூலில் விளக்கியிருக்கிறேன். பேய் போல உள்ள சூதெல்லாம் புறத்தினிலே தள்ள வேண்டும் என்பதே பாரதியார் கருத்து. கொண்டு கூட்டல் என்ற உத்தியை இங்கு கையாளல் வேண்டும்.

சரீரத்தின் தாங்கும் சக்தி அளவுபட்டது. அதீத ஒளி கண்ணொளியைப் பறித்துவிடும். பேர் இரைச்சலால் செவி செவிடுபடும். அளவுமிகுந்த உணவு உமட்டும். இன்பப் பெருக்கால் உடல் சோர்வு உறும். இன்ப மிகுதியால் உடல் சோர்வுபடும். அந்நேரம் உளவீரம் மருந்தென வெளிப்பட்டு, உற்ற சோர்வினை மாற்றும். ஒருசமயம் இரவு முழுதும் இன்பமாக அமரர் திருலோகத்திடம் வார்த்தையாடி இருந்தும் சோர்வு நான் உறவில்லை. இதை அவரிடம் நான் தெரிவித்தபோது, "மிகத் தகைப்படு களியினிலே மெய் சோர - உள வீரம் வந்து சோர்வை வென்று கைதேர" என்று விடை இறுத்தார். மகாகவியின் பாடல் அநுபூதியாயினதை அவர் எனக்கு உணர்த்தினார். இவ்வநுபூதி பெற்ற உலகமாந்தர் "இது நன்று, நனி நன்று" என்று மகிழ்வர்; கூத்துமிடுவர். இக்கூத்தும் தாளம் இசை என்ற இரண்டும் ஒன்று என்கிறார் மகாகவி. பாகவதமேளாவைத் துய்த்தவர் இவ்வுண்மையை நன்கு உணர்வர். கூத்து, ராகம், பாவம், தாளம் ஆகியவற்றின் சம்மேளனமே பாகவதமேளா. இதன் உயிர் காலப்ரமாணம். தாளம் என்பதைக் கம்பதாசன் விளக்கியதைப்போல எவரும் கூறவில்லை. அவர் கூறியதாவது: "பண் இளைப்பாறத் தாளமுண்டு." தெய்வத் துடிப்பு ஏங்கும் மனத்தை இளைப்பாற்றும்.

பொதுவாக, இந்திரன் உலகில் இன்பம் இருக்கிறது என்பர். அங்கு இன்பம் இருந்தால் நமக்கு அதனால் ஆய பயன் என்ன? விண்ணின்பத்தை மண்ணில் கொண்டுவரவேண்டும். இது அறிஞருக்கு அரிய காரியமன்று. இதைத் தாம் படைத்த பாத்திரமாகிய வசுபதி மூலம் நமக்கு மகாகவி அறிவித்துள்ளார். தண்ணொளிச் சந்திரன் வானத்தில் இருக்கிறது. ஆனால் அது அங்கு மட்டுந்தான் இருக்கிறதா? சீதக் கதிர் மதியின் கிரணங்கள் மண்ணுலகைத் தைவருகின்றனவே. விண்ணின்பம் மண்ணில் விளைகின்றதே. வசுபதி பாடுகின்றான்:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்
வானொளி தன்னை மண்ணில் காண்பீர்!"

விஷ்ணு பகவான் வைகுந்தத்தில் மட்டும்தான் உள்ளாரா? அவருடைய அர்ச்சாவதாரங்கள் (விக்கிரகங்கள்) பூவுலகில் பொலிகின்றனவே. அர்ச்சாவதார நிகழ்விற்குப் பிறகு வைகுந்தம் புல்மண்டிப் போயிற்று என்றன்றோ உரையாசிரியர் உரைத்துள்ளார். சரி, விண்ணின்பத்தை மண்ணில் கொண்டுவருவது யாது? அதுதான் மந்திரம். அதனால் சாதிக்க இயலாதது ஏதுமில்லை.

"பேய் உண்டு, மந்திரமுண்டு;
பேயில்லை, மந்திரமுண்டு"

என்றார். பேய்பிடித்தாற் போன்ற நிலையை மந்திர ஆற்றலால் மாற்ற முடியும். உண்மையில் பேய் என்பது இல்லை. இருப்பது மந்திரமே. சொல்லின் சுகநிலையில் சொக்கிக் கிடக்கும் மந்திரத்தை உபாசித்து உயர்வுறல் நம் கடமை. மந்திர வலியால் மத்தமத வெங்கரி போல் நசை வாய்ந்து இறுமாந்து இருக்கலாம். மந்திரமே வற்றாத அமிர்த கடம். அமிர்தகடேஸ்வரர் வாழ்க.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

21. வேள்விப் பாட்டு

இயற்கை யென்றுனை யுரைப்பார் - சிலர்
இணங்குமைம் பூதங்க ளென்றிசைப்பார்
செயற்கையின் சக்தி யென்பார் - உயிர்த்
தீயென்பர், அறிவென்பர், ஈசனென்பர்
வியப்புறு தாய்நினக்கே - இங்கு
வேள்விசெய் திடுமெங்கள் "ஸோம" மெனும்
நயப்படு மதுவுண்டே - சிவ
நாட்டியங் காட்டிநல் லருள் புரிவாய் 1

அன்புறு சோதி யென்பார் - சிலர்
ஆரிருட் காளியென் றுனைப்புகழ்வார்
இன்பமென் றுரைத்திடுவார் - சிலர்
எண்ணருந் துன்பமென் றுனையிசைப்பார்
புன்பலி கொண்டுவந்தோம் - அருள்
பூண்டெமைத் தேவர்தங் குலத்திடுவாய்
மின்படு சிவசக்தி - எங்கள்
வீரைநின் திருவடி சரண்புகுந்தோம். 2

உண்மையி லமுதாவாய் - புண்க
ளொழித்திடுவாய் களி யுதவிடுவாய்
வண்மைகொ ளுயிர்ச்சுடராய் - இங்கு
வளர்ந்திடு வாயென்று மாய்வதிலாய்
ஒண்மையும் ஊக்கமுந்தான் - என்றும்
ஊறிடுந் திருவருட் சுனையாவாய்
அண்மையி லென்று நின்றே - எம்மை
ஆதரித் தருள்செயும் விரதமுற்றாய். 3

தெளிவுறு மறிவினை நாம் - கொண்டு
சேர்த்தன நினக்கது ஸோமரஸம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒளியுறு முயிர்ச்செடியில் - இதை
ஓங்கிடு மதிவலி தனிற் பிழிந்தோம்
களியுறக் குடித்திடுவாய் - நின்றன்
களிநடங் காண்பதற் குளங்கனிந்தோம்
குளிர்சுவைப் பாட்டிசைத்தே - சுரர்
குலத்தினிற் சேர்ந்திடல் விரும்புகின்றோம். 4

அச்சமுந் துயருமென்றே - இரண்
டசுரர்வந் தெமையிங்கு சூழ்ந்துநின்றார்
துச்சமிங் கிவர்படைகள் - பல
தொல்லைகள் கவலைகள் சாவுகளாம்,
இச்சையுற் றிவ ரடைந்தார் - எங்கள்
இன்னமு தினைக்கவர்ந் தேகிடவே.
பிச்சையிங் கெனக்களித்தாய் - ஒரு
பெருநக ருடலெனும் பெயரினதாம். 5

கோடி மண்டபந் திகழும் - திறற்
கோட்டையிங் கிதையவர் பொழுதனைத்தும்
நாடிநின் றிடர்புரிவார் - உயிர்
நதியினைத் தடுத்தெமை நலித்திடுவார்
சாடுபல் குண்டுகளால் - ஒளி
சார்மதிக் கூடங்கள் தகர்த்திடுவார்
பாடிநின் றுனைப்புகழ்வோம் - எங்கள்
பகைவரை யழித்தெமைக் காத்திடுவாய். 6

நின்னருள் வேண்டுகின்றோம் - எங்கள்
நீதியுந் தருமமு நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும் - எங்கள்
பொற்புடை மாதரு மதலையரும்
அன்னநல் லணிவயல்கள் - எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்
இன்னவை காத்திடவே - அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம். 7

எம்முயி ராசைகளும் - எங்கள்
இசைகளுஞ் செயல்களுந் துணிவுகளும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செம்மையுற் றிடவருள் வாய் - நின்றன்
சேவடி யடைக்கலம் புகுந்துவிட்டோம்
மும்மையி னுடைமைகளும் - திரு
முன்னரிட் டஞ்சலி செய்துநிற்போம்
அம்மைநற் சிவசக்தி - எமை
அமரர்தந் நிலையினி லாக்கிடுவாய். 8

"செயல் தீர்ந்த செம்பொருளின் நாட்டம் மிக்கிச்
செய்கின்ற வேள்வி இந்தச் சிறிய வாழ்வு"

என்று பாடினார் பொற்காசுப் புலவராம் திருலோக சீதாராம். வாழ்வாங்கு வாழும் முறையே வேள்வி. செம்மலர் நோன்றாளை எய்திடவே வேள்வி இயற்றப்படல் வேண்டும். நோன்றாள் திருவடி. திருவடி சக்தியே. திருவடி ஞானம் பதிஞானம். ஈசன் மட்டுமே இயற்கை. இயற்கை என்று நம்மால் கருதப்படும் மலை, கடல் முதலியன ஈசனால் அமைக்கப்பட்ட செயற்கையே. ஆகவே சிவசக்தி இயற்கை என்று ஞானிகளால் போற்றப்படுகிறது. பகைக் குணங்கள் கொண்ட ஐம்பூதங்களையும் திணறாமல் இணைத்து வைத்திருப்பது சக்தியே. ஐம்பூதங்களின் இணக்கம் சக்தியின் லீலை. செயற்கைப் பொருள்களான மலை, கடல் முதலிவற்றிற்கு உள்ள ஆற்றல் சிவசக்தி அருளிய கொடையே. உயிராகிய ஆன்மா அவிந்து போகாமல் அதைக் காக்கும் தீ, சக்தி. அதை அறிவு, ஞானம், என்பர். சக்தியே சிவன். ஆக, சக்தி ஈசன் எனப்படுபவள். இவ்வன்னையின் பெற்றிமை நயப்பொடு சிவணிய வியப்பு. இத்தாயை வேட்டு இயற்றப்படும் செய்கை அனைத்தும் வேள்வியே. இதற்கான அவிசு ஸோமம்; ஸோமம் என்பது அழிவை அழிக்கும் அமிர்தம். இவ்வமிர்தம் என்பது தூய சிந்தனை. தீய சிந்தனை அழிவிற்கு வழிகோலும். தூய சிந்தனை என்பது சக்திக்குப் படைக்கப்படும் நிவேதனம். "எண்ணத்திருக்கும் எரியே சக்தி" என்று மகாகவி கூறியுள்ளார். ஆத்ம நிவேதனத்தால் சிவ நாட்டிய காட்சி பெறமுடியும். அதை அருளுபவள் சக்தி. அதை அருள அவளை வேண்டி நிற்போம்.

உயிர்த் தீயாம் சக்தி அன்புறு சோதி. ஒளி மட்டுமா சக்தி? இருளும் அவளே. ஆகவே, ஆரிருட்காளி என்றும் இவள் போற்றப்படுவாள். இன்பம் அவளே. துன்பமும் அவளே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திரோதான சக்தியாக விளங்கி துன்பப் புசிப்பை அளித்து ஆன்மாவைத் தூய்மை செய்பவள் சக்தி. இது மறக் கருணை. அவள் பெற்றிராத ஒன்றை அவளுக்குச் சமர்ப்பிக்கமுடியுமா? மிகமிகச் சிறப்பான ஒன்றை அவளுக்குப் படைத்தாலும் அது புன்பலியே. சிறுபிள்ளை எச்சிற்படுத்தித்தரும் தின்பண்டம் பெற்றோரால் ஏற்கப்படும். அன்பு நனிசுவை உடைத்து, நம் புன்மையான பலியை ஏற்று நம்தாய் நம்மை அமரர் ஆக்கிடுவாள். "நல்ல குணங்களே நம்மிடை அமரர் பதங்களாம்" என்று இதை விநாயகர் நான்மணி மாலையில் விளக்கியுள்ளார் அமரகவி. அருள் பூண்டு நம்மை அவள் தேவர்தம் குலத்திடுவாள். அதாவது அவள் நமக்கு அமரவாழ்வு நல்குவாள். மன்னி நிற்கும் ஒளிப்பொருள் அவை. அவளை மின்படு சிவசக்தி என்று அறிதல் வேண்டும். அவள் வீராங்கனை; தீரமிக்க தாய். அவள் திருவடிகளைத் தஞ்சமாகக் கொள்வோம்.

சேயின் நலமே தாயின் நாட்டம். இதற்காக, வேண்டுவனவற்றின் வாய்நாடி வாய்ப்பச் செய்பவள் அன்னை. அவள் பூணும் விரதமெல்லாம் தன் சேயின் நலத்திற்குத்தான். விசயையின் விரதத்தில் சீவகன் சீர்த்தியுற்றான். அன்னையே உண்மையில் அமுதம். சேயின் புற, அகப்புண்களைப் போக்குபவள் அவள். "பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென்று சேயுண் மருந்தை" தாய் உண்பாள். "வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலடா" என்று பாரதியார் அருளியுள்ளார். சேயின் மகிழ்ச்சிக்குத் தாயே ஆகரம். அன்னை பராசக்தி ஒருதனிப் பரம்பொருள். "ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்." சிற்றுயிரில் பேருயிராய்ச் சுடர்பவள் அவளே. அதனால் சிற்றுயிர் உண்மையும், வண்மையும் உறும். அங்ஙனம் அவள் நம்முள் வளர்வதால் நாம் வளர்கிறோம். அவள் மாய்வற்ற மகமாயி. அவள் திருவருட்சுனை. அவற்றில் ஊறுவன உண்மையும் ஊக்கமும் ஆம். நாம் உறும் ஒண்மை அவள் வழங்கும் வண்மை. நாம் பெறும் ஊக்கம் அவள் அளிக்கும் ஆக்கம். உயிருக்கு உயிராய் நின்று உயிரினங்களை ஆதரிக்கும் அம்மையே அன்றி, வேறு புகல் நமக்குண்டோ?

சாகாக்கலை கைவரப் பெற விழைந்தவர் பாரதியார். இதைச் சாதிக்கவல்லது சக்தியே. ஆகவே அவர் சக்தி பூஜையை மேற்கொள்ளுகிறார். இப்பூஜை பௌதிகப் பொருள்களான பத்ரம், புஷ்பம், பலம், தோயம் ஆகியவை கொண்டு இயற்றப்படுவது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்று. மகாகவி படைக்கும் மதுவர்க்கம் தெளிந்த அறிவெனும் ஸோமரஸம். இது தகத்தகாயமான உயிர்ச் செடியிலிருந்து ஞான பலத்தால் பிழியப்பட்டதாகும். இதை சக்திதேவி மகிழ்ச்சியுடன் ஏற்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறார், சக்திதாஸன். இப்பூசனையின் பயனாக சக்தியின் ஆனந்த நடனம் காண்டற்குரிய தகுதியைத் தாம் பெற்றிருப்பதாக அவர் கருதுகிறார். ஆகவே அந்நடன தரிசனம் தமக்கு வாய்க்கவேண்டும் என்று வேண்டுகிறார். மேலும், கனிவு கொடுக்கும் நல்லபாட்டை இசைத்தபடியே தாம் மரணமிலாப் பெருவாழ்வு பெற்றோருடன் இணைதல் வேண்டும் என்றும் விரும்புகிறார்.

உலக வாழ்வு உறுதி கூடாதபடி அச்சம் என்ற ஒன்றும், துயரம் என்ற மற்றொன்றும் அதைச் சூழ்ந்து நிற்கின்றன. இவ்விரண்டும் இரு அசுரர்கள் போல் சுரர் வாழ்வைச் சூழ்ந்து தொலைக்க வளைய வந்தபடி உள்ளனர். இவர்களுடைய பல்படைகள் தொல்லை, கவலை, சாவு என்பன. உண்மையில் இவை ஒரு பொருட்டன்று. என்றாலும் இவற்றின் மூலமே மானுடரின் அமுத நிலைபேற்றினை இவர்கள் விருப்புடன் வந்து தகர்க்கின்றனர். இத்தாக்குதலை முறியடிக்கவே மாதா பராசக்தி மானுடருக்குச் சேமவைப்பாக தெய்விக உடல் அருளியுள்ளாள்.

> "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
> திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்"

ஆகவே உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்க்குமாறு வளர்த்து உயிரைப் பேணல் வேண்டும். இதன்பொருட்டே, சக்தி நமக்கு ஒரு பெருநகர் எனும் உடலினை ஒவ்வொருவருக்கும் அருளியுள்ளார்.

இஃதோர் பொன்னகர். இதில் கோடி மண்டபங்கள் உண்டு. வலிமையான் கோட்டையால் சூழப்பட்டது இந்நகர். இதைக் கைப்பற்ற அசுரர்கள் பொழுதெலாம் பாடுபடுகின்றனர். இதிலோடும் ஜீவநதியைத் தடுக்க அத்தானவர் முயன்றபடி இருப்பர். அசட்டையாக இருந்தால் இந்நகரின் அறிவுக் கூடங்களை, பொறி மாடங்களை பல குண்டுகளால் அவ்வசுரர் மாய்த்திடுவார். இவ்வழிபாடு (அழிபாடு) நிகழாதபடி அன்னை காத்தல் வேண்டும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று அவளை அமரகவி தோத்தரிக்கின்றார். அவரது பிரார்த்தனை இதுவே:

"பாடி நின்றுனைப் புகழ்வோம் - எங்கள்
பகைவரை யழித் தெமைக் காத்திடுவாய்"

இறைவன்அருளைப் பெற அவனைப் பாடவேண்டும். சிவனை எய்த திருமால் பாடுகிறார்.

"பாடி மால் தேடும் பாதமே அல்லால் மற்றுநான் பற்றிலேன் கண்டாய்" என்பது மணிவாசகம். உடல் என்பது ஒரு பெருநகர் என்கிறார் பாரதியார். "Your house is your larger body" என்கிறார் ஜிப்ரான்.

பாரதியார் இல்லறத்தையே போற்றியவர். இல்லற தருமமே சாலச் சிறந்தது என்ற கொள்கையர். இல்லறம் தழைக்கவே இறைவியை அவர் வேண்டுகிறார்.

"எங்கள் நீதியும் தருமமும் நிலைப்பதற்கே, நின்னருள் வேண்டுகின்றோம்" என்று அருளியுள்ளார்.

நீதி என்பதன் பொருளைப் பலரும் அறியார். வாழ்வாங்கு வாழு முறையே நீதி.

"நீதி, உயர்ந்த மதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்".

ஊர் செழிக்கப் பத்தினிகள் செழிக்கவேண்டும். தங்க மதலையர் செழிக்கவேண்டும். இவர்கள் செழிக்க வயல்களும், ஆடு, மாடு, குதிரை முதலியன செழிக்கவேண்டும். இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக உள்ள கோயில்கள் செழிக்கவேண்டும். ஆகவே,

"பொன்னவிர் கோயில்களும் - எங்கள்
பொற்புடை மாதரு மதலையரும்
அன்னநல் லணி வயல்கள் - எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்னை காத்திடவேண்டும் என்று வேண்டுகிறார். இதற்கான சுலபவழி அன்னையின் இணைமலர்த் திருவடி துணை எனக் கொள்ளல் வேண்டும்.

உடல் ஆசை அழியும்; உயிராசை அழியாது. புகழ் போற்றப்பட வேண்டும். நற்செயல்களும் திட சங்கல்பங்களும் செம்மையுற்றிட திருவருளே துணை. ஆகவே, அவளுடைய செவ்வடி செவ்வித் திருக்காப்பு. முக்கால உடைமைகளையும் அம்மைக்கே சமர்ப்பணம்.

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய்! என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ?"

என்று கூறிய மணிவாசகர் பாரதியாரால் நனி போற்றப்பட்டவர். அனைத்தையும் சிவசக்திக்கு அர்ப்பணம் செய்துவிட்டால் அவள் அருளால் உயர்வற உயர்நலம் உறுதல் ஒருதலை.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

22. கேட்பன

நல்லதோர் வீணைசெய்தே - அதை
நலங்கெடப் புழுதியி லெறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகு மறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி - நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ? 1

விசையுறு பந்தினைப் போல் - உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்
நசையறு மனங் கேட்டேன் - நித்தம்
நவமெனச் சுடர்தரு முயிர் கேட்டேன்
தசையினைத் தீ சுடினும் - சிவ
சக்தியைப் பாடுநல் லகங் கேட்டேன்
அசைவறு மதி கேட்டேன் - இவை
அருள்வதி லுனக்கெதுந் தடையுளதோ? 2

"காணா விழியும் கருதா மனமும்
வீணாகிவிட முன் விதியோ, 'விதியோ!"

என்றார் அருணகிரியார். படைப்பிற்குப் பொருள் உண்டு. படைக்கப்பட்டது பொருள் அற்றதாகி விடுதல் கூடாது. பயன் கொள்வார் இதனை உணர்ந்து செயல்படவேண்டும். உரிய காலத்தில் உரிய செயல் நிகழ்த்தப்பட வேண்டும். காலம் கடந்தால் தின்பண்டத்தில் பூசணம் பூக்கும். கருவி துருப்பிடித்து விடும். "பயன்படுத்தப்படாத திறலும் தெய்வக் கலைஞானமும் நம்முள் மக்கி மடிந்துவிடும்" என்றார் ஷேக்ஸ்பியர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(That capability and God-like reason to fust in us unused - Hamlet.) இசைக்கருவி எப்பொழுதும் பயன்பாட்டில் இருக்கவேண்டும். அதை மூடிப்போட்டு மூலையில் வைத்திடலாகாது. "Like a cunning instrument cased up" என்பது ஷேக்ஸ்பியர் வாக்கு.

தம்மைப் படைத்த பராசக்தியைப் பார்த்து பாரதியார் கேட்கிறார்: "நல்லதொர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" நல்ல நாத லய கீத சுகப் பெட்டகமான வீணை மீது தெய்வத் துடிப்புள்ள விரல்கள் அன்றன்றும் மேவி வரல் வேண்டும். "வீணையடி நீ எனக்கு, மேவு விரல் நானுக்கு" என்று அவர் கூறியதை நினைவு கூர்வோம். பயனற்ற வாழ்வை வெறுத்தவர் மகாகவி. "சில வேடிக்கை மனிதரைப் போலே நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ?" என்று பராசக்தியைக் கேட்டவர் அவர். தம் ஆற்றலை உணர்ந்தவர் அவர். அவர் உணர்வை அருளியவள் சக்தி என்றும் அவர் அறிவார். சுடர்விடும் அறிவு தந்தவள் அதனைப் பயனாக்கும் வல்லமையைத் தாராது போனால், பெற்ற அறிவால் ஆய பயன் என்? வல்லமையை ஏன் வேண்டுகிறார் அவர்? அவர் வேண்டுதலில் சுயநலம் எள்ளளவும் இல்லை.

"வல்லமை தாராயோ - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே!"

என்று கூறி அன்னையிடம் மன்றாடுகிறார்.

அறிவற்றவன், சோம்பேறி ஆகியோர் பூமிக்குப் பாரம். மனித மந்தையில் பாரதியாரும் ஒருவரா? இல்லையே. அவர் ஓர் அவதார புருஷர். அவர் செயல் ஆற்றமுடியாத நிலையில் எப்படி துடிதுடிக்கிறார்! "பராசக்தி, என்னை நிலச் சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?" என்று கதறுகிறார்.

தம் வேண்டுகோளைப் பட்டியலிட்டுப் பராசக்தி முன்வைக்கிறார். அரிவாளைக் கொண்டு வெட்டினாலும் கட்டு மாறாத உடல் வேட்டவர் அவர். விசையுற்ற பந்து விசித்தெழும். அவ்விசை கூடி உள்ளம் வேண்டியபடி செலும் உடல் வேட்கிறார். கேடு சூழும் ஆசைகளால் மாசுபடா மனம் வேண்டுகிறார். "இன்று புதிதாய்ப் பிறந்தேன், நற்பணிகள் விரைந்து செய்வேன்" என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தீவிரத்துடன் சிவணிய சுடர்விடும் உயிர் தமக்கு அமைதல் வேண்டும் என்கிறார்.

"செற்றிலென் சீவிலென் செஞ்சாந்து அணியிலென்
மத்தகத்தே உளிநாட்டி மறிக்கிலென்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மை குன்றாரே"

என்றார் திருமூலர். பாரதியாரும்,

"தசையினைத் தீ சுடினும் - சிவ
சக்தியைப் பாடுநல் அகம்"

வேண்டுகிறார். கேடும் ஆக்கமும் கெட்ட திருப்பெற அசைவறு அறிவு வேட்கிறார். இவையெல்லாம் பெரிய பேறுகள். என்றாலும், இவை பெறுதற்கு உரிமை உடையவர் உமையாளின் உத்தமபுத்திரர் பாரதியார். ஆகவே இவையிற்றை அருளற்கு அவ்வன்னைக்குத் தடையிருத்தல் கூடாது. தடையற்ற சக்திக்குத் தகையும் தடையும் உண்டோ?

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

23. மஹாசக்தி

சந்திரி கையில் அவளைக் கண்டேன்
சரண மென்று புகுந்து கொண்டேன்
இந்திரி யங்களை வென்று விட்டேன்
எனதெ னாசையைக் கொன்று விட்டேன். (சந்) 1

மீன்கள் செய்யும் ஒளியைச் செய்தாள்
வீசி நிற்கும் வளியைச் செய்தாள்
வான்க ணுள்ள வெளியைச் செய்தாள்
வாழி நெஞ்சிற் களியைச் செய்தாள் (சந்) 2.

பயனெண் ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்
துயரி லாதெனைச் செய்து விட்டாள்
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள் (சந்) 3

சிவயோகிகள் சந்திரமண்டலத்தில் சக்தி தரிசனம் பெறுகிறார்கள். சிவ சித்தராகிய பாரதியார் சந்திரன் ஒளியில் சக்தியைத் தரிசிக்கிறார். தரிசனப் பொருளே தாரகம் என்று அறிந்து அதனிடம் சரண் அடைந்து அத்வைதானுபவம் உறுகிறார். விளைவு? அவர் ஜிதேந்திரியராக மலர்ந்தார். புலன்களை வென்றதால் அவர் உண்மைப் புலவர் ஆனார். அகங்கார மமகாரங்களை வென்று ஆனந்தத்தில் அமிழ்ந்தார்.

சக்தியின் ஒளியே அனைத்து ஒளிகளும். தாரகைக்குத் தேஜஸ் அருளியவள் மகாசக்தி. அவளே யாண்டும் எப்போதும் சஞ்சரிக்கும் காற்றாகவும் நிற்கிறாள். பரவும் காற்றே பிராண வாயு. வளியாம் காற்றைப் படைத்தவள் வான் வெளியையும் படைத்தவள். வான்வெளியாம் ஆகாயம் எங்கும் இருப்பது; எவற்றிற்கும் ஆதாரமானது. 'காட்சி' என்ற தலைப்பில் பாரதியார் பலவற்றைத் தந்திருக்கிறார். அதில் ஒரு பகுதி, "மண்ணிலே வேலி போடலாம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விண்ணிலே வேலி போடலாமா?" என்று தொடங்கும். இப்பகுதியைப் படிக்கப் படிக்க, 'ஆகாசம்' என்றால் என்ன? என்பது புரியும். எங்குள்ளது ஆகாசம்? நம் உள்ளும் அது இருக்கிறது. அது மாசு மறுவற்று இருப்பின் உள்ளே மகிழ்ச்சி துள்ளும். இந்த அநுபூதி பெற்ற மகாகவி, "வாழி நெஞ்சிற் களியைச் செய்தாள்" என்று பரவஸப் படுகிறார்.

வாழ்க்கையில் வெற்றிபெற உழைப்பே அடிப்படை. உழைப்பிற்குப் பலன் உண்டு. அனேகமாக எல்லோரும் பயன் துய்க்கவே உழைப்பை மேற்கொள்ளுகின்றனர். இது தவறாகாது. என்றாலும், இந்தப் பயனைக் கருதாது உழைத்தல் உன்னதமானது. இதுவே கீதாசாரம். இதையே, "பயனெண்ணாமல் உழைக்கச் சொன்னாள்" பராசக்தி என்கிறார் பாரதியார். சிவார்ப்பணமே சீவன் பழகவேண்டியது.

"செய்தலுன் கடனே - அறஞ்
செய்தலுன் கடனே - அதில்
எய்துறும் வினைவிளைவினில் எண்ணம் வைக்காதே"

என்று பறைகொட்டியவர் பாரதியார். இங்ஙனம் வாழ வழிகோலுவது பக்தி. பக்தி செய்தல் எளிதன்று. பக்தி செய்தோர் ஆழ்வார்களும், நாயன்மாரும் ஆவர். ஆனால் பக்தி என்பது ஆன்ம முதிர்ச்சி.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதலினைப் போல்"

என்றார் திருமங்கையாழ்வார். துயரும் துன்பமும் பக்தியில் அழியும்.

"துன்ப நினைவுகளும்
சோர்வும் பயமும் எல்லாம்
அன்பில் அழியுமடி-கிளியே
அன்புக் கழிவில்லை காண்"

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

24. மஹாசக்தி வெண்பா

தன்னை மறந்து ஸகல வுலகினையும்
மன்ன நிதங்காக்கு மஹாசக்தி - அன்னை
அவளே துணையென் றமைவெய்தி நெஞ்சந்
துவளா திருத்தல் சுகம். 1

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி யுயிர்வாழ்த லறியாமை - தஞ்சமென
வையமெலாங் காக்கு மஹாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்ற லறிவு. 2

வையகத்துக் கில்லை மனமே நினக்கு நலஞ்
செய்யக்கருதி யிவை செப்புவேன் - பொய்யில்லை
எல்லா மளிக்கும் இறைநமையுங் காக்குமெனுஞ்
சொல்லா லழியுந் துயர். 3

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாம்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெலாம் - பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்ததுகாண், நூறாண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு. 4

சுகம் என்பது துவளாதிருத்தல். இது சாத்தியமா? அமைதி கூடிய உயிர் சுகத்தில் திளைக்கும். அமைதி கூடுவது எங்ஙனே? "நான், நான்" என்று முனைப்புற்று இருத்தலே துக்கத்திற்குக் காரணம். இந்த "நான்" என்பதை மறந்து அன்னை வசமாகி நிற்றலே அமைதிக்கான அடிப்படை. சகல உலகங்களையும் எப்போதும் இரட்சிக்கும் அன்னை நம்மைக் கைவிடுவாளா? விடவே மாட்டாள். இந்த நினைவு நம்மைவிட்டு நீங்காமல் இருக்க அன்னையின் துணையை நாடியவாறே இருத்தல்வேண்டும். அப்போது துவளுதல் என்பது இல்லையாகிவிடும். "தன்னை மறந்தாள்; தன் நாமம் கெட்டாள்; தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்பது வாகீச வேதம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கவலைப்படுதல் மானுட இயற்கையாக இருக்கிறது. "கருதிக் கருதிக் கவலைப்படுவார்" என்றார் மகாகவி. உள்ளக் கழனியில் சிவப்பயிர் விளைத்தல் வேண்டும். மாறாக நாம் கவலைப்பயிர் செய்கிறோம். களை என்பது களையப்படவேண்டும். அதைப் பயிராக்கலாமா? கவலை என்னும் களையைக் களையக் களைய மீளவும் மண்டும். இங்ஙனம் மண்டுவதற்கு உரமாக விளங்குவது அச்சம். "அச்சமே அனைத்துப் பாவங்களின் தாய்" என்று மகாகவி கூறியுள்ளார். 'அஞ்சேல்' என்று அருள் செய்பவள் அன்னையே. அவள் கருணையே நமக்குப் பற்றுக்கோடு. வையமெலாம் காக்கும் அன்னையின் கஞ்சமலர்ப் பாதமே துணை என்று வாழ்தல் வேண்டும். இதில் ஐயம் எக்காரணம் கொண்டும் எழலாகாது. 'எக்கிரமத்தினாலும் இறை செயல் அருளே என்றும்' என்று சிவஞானசித்தியார் சாற்றுகிறது. ஆகவே சிவசக்தியை ஐயமறப் பற்றுதலே அறிவு ஆகும். அச்சத்தால் பிற பொருள்களைப் பற்றுதல் அறியாமை. அஞ்சாமல் துணிவோடு அன்னையின் இணையடி நீழலில் நிலைத்திருத்தல் வேண்டும். கவலை பின்னும் வலைக்கு அப்பால் உள்ளதே அன்னையின் அருள் திருப்பாதம். "கவலையற்று இருத்தலே முக்தி."

அவரவரும் தம்மைத் தாம் திருத்திக் கொண்டால் உலகம் திருந்தும். ஊருக்கு உரைக்கப்படும் உபதேசம் உபதேசிப்பவனுக்குப் பயன்தருமா? உபதேசத்தின் செயலாக்கம் நம்மில் தொடங்க வேண்டும். ஆகவே தம் மனம் நலமுற அதை விளித்துப் பேசுகிறார் மகாகவி. மனமே, நினக்கு நலஞ்செயக் கருதி இவை செப்புவேன் என்கிறார் பாரதியார். எல்லாம் அளிக்கும் கடவுள் நம்மைத் திண்ணமாகக் காக்கும். இது உண்மை; பொய் நெருங்கமுடியாத மெய். "காக்கும் கடவுள் நம்மையும் காக்கும்" என்று சொல்லிச் சொல்லி வந்தால், அதை அனுபவமாக்கிவிட்டால் துயர் திண்ணமாக அழியும். இல்லையேல் அது நம்மில் பொங்கிவழியும்.

"ஏன் இந்தப் பிறப்பு?" என்பதைச் சிந்தித்தல் வேண்டும். இனிப் பிறவாமை பெறவே இப்பிறவி வாய்த்திருக்கிறது. நல்ல அறிவோடு கூடிய இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்த்திடுமோ? இப் பிறவியால் ஆய பயன் கொள்வோம். வேதம் விதித்த பிராயம் நூறு. அவ்வளவு காலம் வாழவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. என்று பிறவிப் பயன் கைகூடுகிறதோ அன்றே இவ்வுடலை நீத்து விடலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"கரும்பாட்டிக் கட்டிச் சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயர் ஆண்டு உழலார்"

என்று நாலடி நவில்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தை ஈன்று புரப்பவள் பராசக்தி. நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த விண்மீன்களையும், அண்டங்களையும் காத்து வருகிறாள். அவள்தானே நம்மையும் படைத்திருக்கிறாள். நம்மை அவள் பூரண வாழ்வு வாழ அருளுவாள். ஆனால் ஒன்று. அவளிடம் பூர்ணமான பக்தி செலுத்தல் வேண்டும். பூரணபக்தி சம்பூரண அருளைப் பெற்றுத் தரும்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

25. மஹாசக்தி பஞ்சகம்

கரணமுந் தனுவு நினக்கெனத் தந்தேன்
காளிநீ காத்தருள் செய்யே
மரணமு மஞ்சேன் நோய்களை யஞ்சேன்
மாரவெம் பேயினை யஞ்சேன்
இரணமுஞ் சுகமும் பழியுநற் புகழும்
யாவுமோர் பொருளெனக் கொள்ளேன்
சரணமென் றுனது பதமலர் பணிந்தேன்
தாயெனைக் காத்தலுன் கடனே. 1

எண்ணிலாப் பொருளும் எல்லையில் வெளியும்
யாவுமா நின்றனை போற்றி
மண்ணிலார் வந்து வாழ்த்தினுஞ் செறினும்
மயங்கிலேன் மனமெனும் பெயர்கொள்
கண்ணிலாப் பேயை யெள்ளுவேன் இனியெக்
காலுமே யமைதியி லிருப்பேன்
தண்ணிலா முடியிற் புனைந்துநின் றிலகுந்
தாயுனைச் சரண்புகுந் தேனால். 2

நீசருக் கினிதாந் தனத்தினு மாதர்
நினைப்பினு நெறியிலா மாக்கள்
மாசுறு பொய்ந்நட் பதனிலும் பன்னாள்
மயங்கினேன் அவையினி மதியேன்
தேசுறு நீல நிறத்தினாள் அறிவாய்ச்
சிந்தையிற் குலவிடு திறத்தள்
வீசுறுங் காற்றி னெருப்பினில் வெளியில்
விளங்குவாள் தனைச்சரண் புகுந்தேன். 3

ஐயமுந் திகைப்புந் தொலைந்தன ஆங்கே
அச்சமுந் தொலைந்தது சினமும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொய்யுமென் றினைய புன்மைக ளெல்லாம்
போயின வுறுதி நான் கண்டேன்
வையமிங் கனைத்து மாக்கியும் காத்தும்
மாய்த்துமே மகிழ்ந்திடு தாயைத்
துய்யவெண் ணிறத்தாள் தனைக்கரி யவளைத்
துணையெனத் தொடர்ந்து கொண்டே. 4

தவத்தினை யெளிதாப் புரிந்தனள் யோகத்
தனிநிலை யெளிதெனப் புரிந்தாள்
சிவத்தினை யினிதாப் புரிந்தனள் மூடச்
சித்தமுந் தெளிவுறச் செய்தாள்
பவத்தினை வெறுப்ப அருளினள் நானாம்
பான்மை கொன் றவண்மயம் புரிந்தாள்
அவத்தினைக் களைந்தாள் அறிவென விளைந்தாள்
அநந்தமா வாழ்கவிங் கவளே. 5

முன் செய்த வினைக்கு ஏற்ப தனு, கரண, புவன, போகங்கள் வாய்க்கின்றன. பெற்ற உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் அன்னையின் பணிக்கு அர்ப்பணித்தல் வேண்டும். அங்ஙனம் அர்ப்பணிக்க, அர்ப்பணம் செய்தாரைக் காத்தல் அன்னையின் கடனாம்.

"தன் கடன் அடியேனைத் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்றார் அப்பர் அடிகள். பூரணமாகச் சரணம் புகுந்துவிட்டால் அச்சம் அடியோடு தொலையும்.

"யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக்கு
என் கடவேன்"

என்றார் மணிவாசகர். மகாகவியும், "மரணமும் அஞ்சேன், நோய்களை அஞ்சேன்" என்கிறார்.

மனத்திலே தோன்றி மனத்தையே உண்பவன் மன்மதன். அவன் இழைக்கும் தொல்லைகள் அனந்தம். பேய்போல் அலைக்கழிப்பவன் மாரன். தாம் செய்த சரண வெற்றியால், மாரவெம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பேயினை அஞ்சேன்" என்று அறைகூவுகிறார் பாரதியார். கச்சணிந்த கொங்கைமாதர் கண்கள் வீசு போதினும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே. சரணத்தின்மூலம் இரட்டைகளின் தொந்தங்களைக் கடக்கலாம். இன்பம் - துன்பம், புகழ் - பழி என்பவை பொருள் அற்றவை என்பது உணரப்படும். ஆகவே அன்னையின் பதமலரில் சரண்புகுந்தார் சக்திதாசன். அவருடைய லோகக்ஷேமத்தை வகுத்தல் அருள் அன்னையின் கடனாயிற்று.

"அங்கங்கும் சிவமாய் நின்றார் தாமே" என்றார் அப்பர் அடிகள். "அங்கங்கும் சிவசக்தி" என்கிறார் பாரதியார். எண்ணிக்கை அற்ற பொருள்கள், அளவுபடா அகிலவெளி இவையனைத்தும் சிவசக்தியே. எப்போதும் இத்தோற்றம் காட்டும் சக்தியைப் போற்றி இசையினையும், வசையினையும் ஒன்றாகவே கருதி மயக்கமற்ற நிச்சயநிலை உற்று வாழ்வேன் என்கிறார் மகாகவி. மானுடத்தை அலைக்கழிப்பது மனமே. சந்தேக விபரீதங்களின் ஒட்டுமொத்த உருவேமனம். இஃதே எண்ணிலாப் பேய். கண் என்ற சொல்லுக்குக் கருணை, அன்பு, அருள் என்று பொருள் உண்டு. (தமிழ் அகராதி காண்க).

மனத்தைப் 'பொல்லாப் புழு' என்றும் மகாகவி வருணித்துள்ளார். அன்னை அருளால் மனத்தை எள்ளிப் புறந்தள்ளுவேன் என்கிறார் பாரதியார். மனோ நாசத்தால் விளைவது நிலைபெற்ற அமைதி. ஆகவே, "எக்காலமுமே அமைதியிலிருப்பேன்" என்று உறுதிபடக் கூறுகிறார் நம் கவிஞர். சிவனார் துணைவியும் தம் முடியில் தண்ணிலவைப் பூண்டவர். தேய்ந்து ஒழிய இருந்த சந்திரனுக்கு உயிர் ஊட்டியது சிவசக்தியே. அச்சக்தியையே தமக்குப் புகலாகக் கொண்டார் பாரதியார்.

தம்முடைய தொடக்ககாலம் சிறப்பாக அமையவில்லை என்று கூறுகிறார் மகாகவி. நீசர் போற்றும் பொருள் மீதும், மாதர் நினைப்பின் மீதும், நன்னெறி அறியா மக்களின் மாசுறு பொய்ந் நட்பின் மீதும் தம் கவனம் சென்று மயங்கினமை கண்டு வருந்துகிறார். ஒரு நொடியில் விடுபட்டு விளங்கத் தொடங்கினார். பண்டு தாம் மதித்தன மதிப்பற்றவை என்றுணர்ந்து அவையிற்றை இனி மதியேன் என்று உறுதியுறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எல்லாமாய்க் கலந்து நிறைந்து நிற்கும் அன்னையையே தமக்குத் தாரக, போஷக, போக்கியமாகக் கொள்ளுகிறார். அவ்வன்னை நீல நிறத்தள்; அவள் அறிவின் அறிவாய்ச் சிந்தையில் குலவிடு திறத்தள். வீசு தென்றலாய், மாசினைச் சுட்டெரிக்கும் நெருப்பாய், பரவெளியாய் விளங்குபவள். அவளே தஞ்சம் என்று கொள்ளுகிறார் பிஞ்சுக் காளிதாசர்.

மஹாசக்தியைத் தஞ்சமடைந்ததால் தாம் பெற்ற நன்மைகளைப் பட்டியல் இடுகிறார் பாரதியார். அன்னை தூய வெள்ளை நிறத்தினள். கரிய காளியான அவள் நடப்பன அனைத்திற்கும் சாட்சி. முதலில், குழப்பும் ஐயம் தொலைந்தது. திகைப்பு அறவே ஒழிந்தது. அப்பர் அடிகளும் அரனை, "சிந்தையைத் திகைப்பியாதே" என்று வேண்டினார். அச்சம் அறவே சுவடற்று மறைந்தது. நீட்டித்த கோபமாகிய சினமும், பொய்யும், அன்ன பிறவும் மறைந்தன. புன்மைகள் போயின ஞானோதயத்தால். ஊனடைந்த உடம்பின் உறுதியைக் கூடினார் அவர். இவை அனைத்தும் அகிலத்தை ஆக்கியும், அளித்தும், அழிக்கும் அகிலாண்டேஸ்வரியின் அருள்.

அன்னை அருளால் தவமியற்றல் இயல்பாயிற்று.

"தவமே புரியும் வகையறியேன்
சலியாதுற நெஞ்சறியாது
சிவமே நாடிப் பொழுதனைத்தும்
தியங்கித் தியங்கி"

நின்ற தம் நிலையை விநாயகர் நான்மணி மாலையில் பதிவு செய்து வைத்தார் மகாகவி. அன்னை அருளால் தவமியற்றல் அவருக்குச் சாத்தியமாயிற்று; சகஜமாயிற்று. களித்து யோக நீருள் நிலைத்தலும் அவருக்கு எளிதாயிற்று. ஆகவே, "தனிமை கண்டதுண்டு அதிலே சாரமிருக்குதம்மா" என்று அவர் அன்னையைக் கொண்டாட முடிந்தது. அன்னை அவரை சிவமயமாக்கினாள். குழப்பும் மனத்தை அவர் முழுமூட நெஞ்சு என்று சாடியவர். அவரது சித்தத்தின் மௌட்டியம் மறைந்தது. தெளிவு பிறந்தது. தெளிவு என்பது நிச்சயபுத்தி. பவமாகிய தொடர் பிறப்பின்மீது உவர்ப்புற்றார். "நான்" எனும் ஆணவம் அவரைவிட்டு அகன்றது. சிவசக்தி மயமானார் சக்திதாஸர்.

✣

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

26. மஹாசக்தி வாழ்த்து

விண்டுரைக்க, அறிய, அரியதாய்
விரிந்த வான வெளியென நின்றனை.
அண்ட கோடிகள் வானி லனமத்தனை
அவற்றி லெண்ணற்ற வேகஞ் சமைத்தனை.
மண்டலத்தை யணுவணு வாக்கினால்
வருவ தெத்தனை யத்தனை யோசனை
கொண்ட தூர மவற்றிடை வைத்தனை
கோலமே நினைக் காளியென் றேத்துவேன். 1

நாடு காக்கு மரசன் றனையந்த
நாட்டு ளோரர சென்றறிவார், எனிற்
பாடு தண்டைக் குழந்தை, தனக்கிதம்
பண்ணு மப்ப னிவனென் றறிந்திடும்.
கோடி யண்டமியக்கி யளிக்குநின்
கோல மேழை குறித்திட லாகுமோ?
நாடி யிச்சிறு பூமியிற் காணுநின்
நலங்க ளேத்திட நல்லருள் செய்கவே. 2

பரிதி யென்னும் பொருளிடை யேய்ந்தனை;
பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை;
கரிய மேகத் திரளெனச் செல்லுவை,
காலு மின்னென வந்துயிர் கொல்லுவை;
சொரியு நீரெனப் பல்லுயிர் போற்றுவை;
சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை;
விரியு நீள் கடலென்ன நிறைந்தனை;
வெல்க காளி யெனதம்மை வெல்கவே. 3

வாயு வாகி வெளியை யளந்தனை;
வாழ்வெதற்கு முயிர்நிலை யாயினை;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேயு வாகி யொளியருள் செய்குவை;
செத்தவற்றைக் கருப்பொரு ளாக்குவை.
பாயு மாயிரஞ் சக்திக ளாகியே
பாரி லுள்ள தொழில்க ளியற்றுவை;
சாயும் பல்லுயிர் கொல்லுவை; நிற்பன
தம்மைக் காத்துச் சுகம்பல நல்குவை. 4

நிலத்தின் கீழ்ப்பல் லுலோகங்க ளாயினை;
நீரின் கீழெண் ணிலாநிதி வைத்தனை;
தலத்தின் மீது மலையு நதிகளுஞ்
சாருங் காடுஞ் சுனைகளு மாயினை;
குலத்தி லெண்ணற்ற பூண்டு பயிரினம்
கூட்டி வைத்துப் பலநலந் துய்த்தனை;
புலத்தை யிட்டிங் குயிர்கள் செய்தா யன்னே
போற்றி, போற்றி நினதருள் போற்றியே! 5

சித்த சாகரஞ் செய்தனை, யாங்கதிற்
செய்த கர்மப் பயனெனப் பல்கினை;
தத்து கின்ற திரையுஞ் சுழிகளும்
தாக்கி யெற்றிடுங் காற்று முள்ளோட்டமுஞ்
சுத்த மோனப் பகுதியும், வெண்பனி
சூழ்ந்த பாகமுஞ் சுட்டவெந் நீருமென்
றொத்த நீர்க்கடல் போலப் பலவகை
யுள்ள மென்னுங் கடலி லமைத்தனை. 6

பாரத நாட்டின் வேத, ஆகம, இதிகாச, புராணங்கள் சாற்றும் விஞ்ஞானத்தை இன்றைய விஞ்ஞானிகள் அறிந்து போற்றத் தொடங்கி உள்ளனர். ஆகாசத்திற்கு எல்லை இல்லை என்று இன்று கூறுகின்றனர். இதைப் பண்டே நம் நூல்கள் கூறியுள்ளன. இன்னது என்று இதை விரித்து உரைக்க முடியாது. அறிய இயலாது. அரியதுள் அரியதாய் இருப்பது வானவெளி. அனைத்தையும் தாங்கி நிற்கும் ஆகாயத்தைத் தாங்கி நிற்பவள் அன்னை மகாசக்தி.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெரும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்கிறது திருவாசகம். அன்னையே அண்ட கோடியினை வானில் அமைத்தனள் என்கிறார் பாரதியார். வேகச் சுழற்சியால் ஒவ்வொன்றும் நிலைபெற்று நிற்கிறது. வேக ஈர்ப்பும் இவற்றிற்கு உண்டு. இவற்றின் எண்ணற்ற வேகத்தை அன்னை உண்டாக்கினாள் என்கிறார் பாரதியார். இவ்வேகத்தில் சுழற்சியும், ஈர்ப்பும் உண்டு. ஒரு மண்டலத்தைப் பொடிப் பொடியாக்கினால் வரும் அணுத் துகள்கள் எத்தனை? அத்தனை யோசனை தூரம் இவற்றிடையே உண்டு. இதுபோன்ற அமைப்பைச் சிந்திக்கும் அறிவு அலைக்கழிக்கப்படும். இதை 'mind - boggling' என்பர். இவை அனைத்தையும் சாதித்த அன்னை ஓர் சுந்தரி. அந்த சௌந்தரியை பாரதியார், கோலமாகிய காளி என்கிறார்; ஏற்றுகிறார், போற்றுகிறார்.

அரசனைக் கண்டு அவன் குடிமக்கள் அஞ்சி நிற்பர். அகலாது அணுகாது தீக்காய்வார் போல சற்றே எட்டநின்று அவனைக் கொண்டாடுவர். ஆனால் அவனுடைய, கிண்கிணியும், தண்டையும் அணிந்த குழந்தை அவனுடைய பெருமையை ஏதும் அறியாது. தனக்கு இன்பு செய்யும் தந்தை என்று அறிந்து அவனோடு விளையாடும்.

அக்குழந்தையின் நிலைதான் தம்நிலை என்கிறார் பாரதியார். தம்மால் அகிலாண்ட கோடி ப்ரம்மாண்ட நாயகியின் ஆற்றலை அறியப் போமோ? என்கிறார்.

பென்மை பெரிய அண்டங்களோடு ஒப்பிடுகையில் இந்த பூமி மிகச்சிறிய ஒன்று. இச்சிறு பூமியும் அன்னையின் நலங்களைக் கொண்டு திகழ்கிறது. அவற்றைப் போற்றுதல் அன்னையைப் போற்றுதல் ஆகும். ஆகவே, அந்நலங்களை ஏத்திட அன்னை நல்லருள் புரிதல் வேண்டும் என்று வேண்டுகிறார் பாரதியார்.

அன்னையே அனைத்தும். பரிதி என்று கூறப்படும் பகலவனைப் படைத்து அதை இயக்கும் சக்தியாய் அதனுள் இயைந்து நிற்பவள் அவளே. அதில் காயும் கதிரும் அவளே. அவளே மேகத்திரள்களாய்ப் பரவுவாள். அவற்றில் தோன்றும் மின்சக்தியும் அவளே. அதில் அவள் கொலை சக்தியாய்த் திகழ்வாள். பொழியும் மழையும் அவளே. நீராக நின்று பல்லுயிர்கள் புரப்பாள். தீங்கின்றி நாடெல்லாம் மும்மாரியாய்ப் பெய்பவள் அவளே. வெள்ளமாய்ப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருகி உயிரின் பெற்றியை மாற்றுவாள், கெடுப்பாள்; கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே நிற்பாள். அனைத்தும் அவளே. கடலென நிறைந்து நிற்பவள் அவளே. இங்ஙனம் அவள் பெருமையை உணர்ந்த பாரதி, 'வெல்க என் காளி, வெல்க என் அன்னை' என்று பரவசப்படுகிறார்.

சிவசக்தியே அனைத்தையும் நிலைபெறுத்துவிக்கும் சக்தி. அவள் ஒளியே பஞ்ச பூதங்களையும் இயக்குகின்றது.

"காரொளி அண்டம் பொதிந்து உலகெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காவொளி
வானொளி ஒக்கவளர்ந்து கிடந்தபின்
தேரொளி ஒன்றாய் நிறைந்தங்கு நின்றதே"

என்றருளினார் திருமூலர்.

பராசக்தியே வாயுவாகி ஆகாயத்தை அளக்கின்றது. அவளே தீயாகி ஒளியை அருளுகிறாள். வாழ்வு எதற்கும் உயிர்நிலை அவளே. உயிர்த்தேசு வெளிக்கிளம்பினால் உடல் சாய்ந்துவிடும். செத்தவற்றையும் மாயை எனும் மூலத்தில் இருத்தி, அதனின்றும் மீளவும் கருக்கொண்ட பொருட்கு தனுவும், கரணமும், புவனமும், போகமும் அளிப்பள். பராசக்தி அனந்த சக்திகள் உடையவள். தொழில் இயக்கச் சக்தி அவள்தானே. ஆக்கும் சக்தி அவள்; காக்கும் சக்தி அவள்; ஒடுக்கும் சக்தி அவள். ஒடுக்கத்தைச் செய்து, காக்கப்பட வேண்டியவற்றைக் காத்து சுகம்பல வழங்கும் சக்தியும் அவளே.

நிலத்தடியில் உலோகங்கள் உளவே. அவற்றை உண்டாக்கியது யார்? சக்தியே, உண்டாக்கிய அவளே உலோக வடிவிலும் ஒளிர்பவள். மணிகளுக்கு ஆகரம் சமுத்திரம். சக்திதான் கடலெனப் பல்கி எண்ணிலா நிதியுமானவள். மலை, மலையிற் றோன்றும் சுனை, நதி முதலியன, காடுகள் யாவும் இயற்கை அல்ல; அன்னை சமைத்த செயற்கையே அவை. பயிர், புல், பூண்டு வகைகளும் அவளே. இவையிற்றை உண்டுபண்ணி உயிர்கள் மகிழ, தான் மகிழும் அன்னை அவள். நிலத்தையும், புலத்தையும் தோற்றுவித்து பயிர் உயிர்கள் வளர்ப்பவளும் அவளே. அவளைப் போற்றுதல் நம் கடன். "அன்னே! போற்றி, போற்றி, நினதருள் போற்றி" என்று போற்றுகிறார் பாரதியார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆறு செய்யுள்கள் அடங்கிய இப்பாடலில் ஆறாம்பாடல் ஆறாத இன்பம் பயப்பது. எண்ணத்தெரிந்தவன், சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன். மன் என்ற வேர்ச்சொல் சிந்தித்தலைக் குறிக்கும். "Cogito ergo sum". 'சிந்திக்கிறேன், அதனால் இருப்பதானேன்' என்று இதற்குப் பொருள். ஆகவே, சிந்தனையே மானுடன் பெற்ற பெருஞ்செல்வம். சிந்தனைத் தடம் கடல் போன்றது. இந்த சித்த சாகரம் எவருடைய கொடை? அளித்தவள் அன்னை அல்லளோ? சித்த சாகரத்தில் இருவினைப் பயன்கள் பல்கி நிற்கும். இங்கு தாவும் அலைகள் உள; சுழிகளும் உள. விண்ணை அளக்கும் எண்ணங்கள் சித்தத்தில் தோன்றுவன. நேர்மையற்ற எண்ணங்கள் சுழிகள் போல் பொல்லாதவை. சாகரத்தின்மீது தாக்கி எற்றிடும் காற்று வீசும். வாழ்வைக் குலைக்க புறத்திலிருந்து ஊறுகள் விளையும். அவற்றிலிருந்து நம்மைக் காப்பவள் அன்னையே. எண்ணம் வெளிப்படா நிலையிலும் எண்ண ஓட்டம் உள்ளே நிகழும். இரைச்சல் மிகுந்த ஆரவாரக் கடலின் உள்ளே சுத்த மோனப்பகுதி உண்டு. தெளிந்த சிந்தனையாளர் உள்ளே அமைதி கூடி நிற்பள். சீதக்கடலின் உள்ளே வெண்பனி சூழ்ந்த பாகம் உண்டு. பரபரப்பு அடங்க அன்னையே அருள்புரிதல் வேண்டும். பனிசூழ்ந்த பகுதியில் அமைதி உண்டு. கடலில் வெந்நீரின் ஓட்டமும் உண்டு. சிந்தனையினின்றும் தீப்பொறிகள் பறக்கும். முரணான பல பொருள்கள் திணறாமல் கடலில் வாழும். மானுடச் சிந்தனையின் பெற்றிமையும் அங்ஙனம் இருக்கும். கடல் போன்றதே சிந்தனைத் திறலும். பலப்பல வகைகள் தொகை தொகையாக சித்த சாகரத்தில் உள. இவையிற்றைத் தக்கவாறு பயன்கொள்ள சக்தி அருளே நமக்குத் தாரகம்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

27. வைய முழுதும்

வைய முழுதும் படைத் தளிக்கின்ற
மஹா சக்தி தன்புகழ் வாழ்த்துகின்றோம்;
செய்யும் வினைக ளனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க வென்றே. 1

பூதங்க ளைந்தி லிருந் தெங்குங் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம்;
வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டு மென்றே. 2

வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவுகின்றோம்;
ஏக நிலையி லிருக்கும் அமிர்தத்தை
யாங்க ளறிந்திட வேண்டு மென்றே. 3

உயிரெனத் தோன்றி யுணவு கொண்டே வளர்ந்
தோங்கிடும் சக்தியை ஓதுகின்றோம்;
பயிரினைக் காக்கும் மழையென எங்களைப்
பாலித்து நித்தம் வளர்க்க வென்றே. 4

சித்தத்திலே நின்று சேர்வ துணரும்
சிவசக்தி தன்புகழ் செப்புகின்றோம்;
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டு மென்றே. 5

மாறுத லின்றிப் பராசக்தி தன்புகழ்
வண்ணமுற நித்தம் பாடுகின்றோம்;
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டு மென்றே. 6

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
ஓம்சக்தி யென்றுரை செய்திடுவோம்;
ஓம்சக்தி யென்பவர் உண்மை கண்டார், சுடர்
ஒண்மை கொண்டார், உயிர் வண்மை கொண்டார். 7

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"நன்று கருது, நாளெலாம் வினைசெய், நினைப்பது முடியும்" என்று கூறிய பாரதியார், நினைப்பது முடிவுறுவது எதனாலே என்பதைக் கூறாமல் இங்கு,

"செய்யும் வினைகள் அனைத்திலுமே வெற்றி
சேர்ந்திட நல்லருள் செய்க"

என்று இப்பாடலில் மஹாசக்தியை வேண்டுகிறார். அவள் அருள் விளையாத போது வினைகள் வியர்த்தமாம். வேதகம் (செம்பைப் பொன்னாக்கல்) செய்வது எப்படி என்று அறிந்தவர், அது கைகூடாதபோது, "என்ன செய்வது! பூர்வ புண்ணியம் எமக்கில்லை" என்பர். அருள் உறாத செயல் இருள் உறும். வையம் முழுதும் ஆக்கி அளிப்பவள் சக்தி. அவளைப் போற்றுதல் நம்கடன். அவள் நமக்குத் தகத்தக அருள்புரிவாள்.

வேதம் என்ற சொல்லுக்கு ஞானம் என்று பொருள். வேதம் விதித்தனவற்றைச் செய்தல் வேண்டும்; விலக்கியனவற்றை ஒழிதல் வேண்டும். இதுவே சுகத்தினுக்கு யுக்தி. வேதவாழ்வு பெற நாம் சக்தியின் அருள் பெறல் வேண்டும். சக்தி தரிசனம் என்பது என்ன? அவள் அங்கங்கும் இருப்பதைக் கண்டுகொள்ளுதலே. ஆகவேதான்,

"பூதங்கள் ஐந்திலிருந்து எங்கும் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்று கின்றோம்"

என்றார் மகாகவி.

ஈர்ப்பும், விரைவும் சக்தியால் விளைவன. அவ்வவ் வினைக்கு ஏற்ற ஆற்றல் அளிப்பவள் சக்தி. கிரியையாய் மேவும் சக்தியே கிரியா சக்தி; ஞானமாய் மேவும் சக்தி ஞான சக்தி; சங்கல்பம் செய்யும் சக்தி இச்சா சக்தி. இம்மூவகைச் சக்தியும் ஒன்றே. இது அநுபவமானால், ஒரு நிலையில் இருக்கும் சக்தியின் அருள் அமுதம் பக்தனுக்குக் கிட்டும். ஆகவே இவ் வேதநிலை அறிந்து பயனுற சக்தி அருள் வேண்டும்.

சைவ சித்தாந்தக் கருத்தின்படி ஜீவாத்மா வேறு; பரமாத்மா வேறு. இறை உயிருக்கு உயிராய் இருப்பது. பரமாத்மா கடவுள், "செயல் தீர்ந்த செம்பொருளின் நாட்டம் மிக்குச் செய்கின்ற வேள்வி இந்தச் சிறிய வாழ்வு" என்றார் திருலோகம். ஆக, வாழ்வு வேள்வியாதல் வேண்டும். அது செழிக்கத் தேவைப்படும் அவிசே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உணவு என்று கொள்ளல் வேண்டும். இவ்வுணர்வு ஓங்குமாறு நாம் வளர, சக்தியை வாழ்த்தி வணங்குவோம். பயிரினைக் காப்பது மழை. உயிரினைக் காப்பது சக்தி. இவ்வுயிர் நித்தமும் அவளாலே வளர்தல் வேண்டும்; உறுதி கூடவேண்டும்.

ஆன்மாக்களுக்கு சிவசக்தி இருபெரும் வகைகளில் உதவுகின்றது. அவை காணும் உபகாரம், காட்டும் உபகாரம் என்ப. காணும் உயிருக்குக் காட்டும் கண்போல செயல்படுவது அருட்சக்தி. அதுசித்தத்திலே நின்று சேர்வது உணரும். அச் சிவசக்தியின் புகழ் செப்புதல் நமக்கு ஆக்கம் அளிக்கும். இறைவியே இவ்வுலகில் பலப்பல கோடி இன்பங்கள் வைத்தருளியுள்ளாள். அவற்றை ஒவ்வொன்றாய் அறிந்துகொள்ளுதல் அசாத்தியம். ஆனால் அவற்றை அவள் அருளால் நாம் பெறலாம். சிறுசிறு இன்பங்களைக் கடந்தவரே பேரின்பம் பெறத் தகுதி பெறுவர். சக்தி வணக்கத்தை இயல்பாக இயற்ற வேண்டும். இதில் இடையீடு நிகழ்தல் ஆகாது. மாறுதல் நிகழ்தல் ஆகாது. நாம் செய்வது சௌகரிய பக்தி. வாய்ப்பு கிடைத்த போது பக்தி செய்கிறோம். இதில் வலிமை இல்லை. பிறவி என்பதே சக்தி வழிபாட்டிற்கான நிரந்தர வாய்ப்பு என்று உணர்ந்து செயலாற்றல் வேண்டும். அகங்கார, மமகாரங்கள் தொலைந்து, ஜீவன் சக்தியின் கைப்பொருளாய், கருவியாய் விளங்குதல் வேண்டும். வேதநூல் பிராயும் நூறு பெற்று, புகழ் உற்று, கொண்ட உயர் நோக்கங்கள் நிறைவுகூட சக்தி அருளால் வாழ்தல் வேண்டும். அவள் அருளால் நூறாண்டு வாழாமலேயே புகழ், செய்திறன், வெற்றி ஆகியவற்றை நாம் அடையமுடியும்.

"வாயே வாழ்த்து கண்டாய்" என்று அறிவிக்கின்றது வாகீச வேதம். உதடுகள் உரையாவிடினும், உள்ளம் எப்போதும் ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி என்று கூறிக்கொண்டே இருத்தல் வேண்டும். உள்ளதாம் பொருள் ஓம் சக்தியே. இவ்வுண்மை கண்டார் சுடர் ஒண்மை கொண்டார்; உயிர் வன்மை கொண்டார். ஒண்மை என்ற சொல்லில் விளக்கம், இயற்கை அழகு, நன்மை, நல்லறிவு, ஒழுங்கு ஆகிய அனைத்தும் அடக்கம். சக்தி வழிபாட்டில் உயிரின் புன்மை தொலையும். வண்மை விளையும். வண்மை என்ற சொல்லில் ஈகை, குணம், அழகு, வாய்மை, வளப்பம், வலிமை ஆகியவை அடக்கம்.

ஓம்சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி!

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

28. மஹாசக்திக்கு விண்ணப்பம்–1

மோகத்தைக் கொன்றுவிடு - அல்லா லென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு - அல்லா லதில்
சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு - அல்லா லென்றன்
ஊனைச் சிதைத்துவிடு
ஏகத் திருந்துலகம் - இங்குள்ளன
யாவையும் செய்தவளே! 1

பந்தத்தை நீக்கிவிடு - அல்லா லுயிர்ப்
பாரத்தைப் போக்கிவிடு
சிந்தை தெளிவாக்கு - அல்லா லிதைச்
செத்த உடலாக்கு
இந்தப் பதர்களையே - நெல்லா மென
எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளினுமே - உள்ளே நின்
றியங்கி இருப்பவளே. 2

கள்ள முருகாதோ? - அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ?
உள்ளந் தெளியாதோ? பொய்யாணவ
ஊன மொழியாதோ?
வெள்ளக் கருணையிலே - இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ?
விள்ளற் கரியவளே - அனைத்திலு
மேவி நிறைந்தவளே. 3

அருள் சூல்கொண்ட அங்கயற் கண்ணியே பராசக்தி. அப் பால்மொழி கன்னியாகும். பவனாம் சிவனும் பிரமசாரியாகும். இது சித்தியார் அறிவிக்கும் செய்தி. இயல்பான ஒருமையில் இருக்கும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பெருமாட்டியே பிரபஞ்சத்தில் உள்ள யாவையும் படைத்தவள். அவளது இப்பெருநிலையை உணரத் தடையாய் இருப்பன மோகம், இயல்பிழந்த சரீரம், சிதறும் சிந்தனை, ஊனத்தைப் பெருக்கும் ஊன் வாழ்வு ஆகிய இவை. மோகம் என்பது காக்கைப் பொன். அஃதோர் மேனி மினுக்கு; திசை திருப்பி. மோக வயப்பட்டு வாழ்தலைவிட சாதலே நன்று. ஆகவே, மூச்சை நிறுத்திவிடு என்று பிரார்த்திக்கிறார் பாரதியார். உறுதிகூட துணைபுரியா சரீரம் பயனற்றது. அதில் எழும் சிந்தனைச் சிதறல் ஆன்மாவிற்கு ஊறுவிளைக்கும். ஒருமைப் படுத்தப்பட்ட சிந்தனையே உறுதி கூட்டுவது. இவ்வொருமைப் பாட்டை உறாத "தேகத்தைப் போற்றுவது வீண்செயல். ஆகவே, தேகத்தைச் சாய்த்துவிடு" என்று வேண்டுகிறார் மகாகவி. ஊனம் உடைய உடல் போகமே விரும்பும்; யோகத்தை நாடாது. ஆகவே,

"யோகத் திருத்தி விடு - அல்லால் என்றன்
ஊனைச் சிதைத்து விடு"

என்று பிரார்த்திக்கிறார் மகாகவி.

எவ்வகைப் பந்தமும் பிரதி பந்தமே. பந்தப்பட்ட ஜீவன் பெத்த நிலையில் உள்ளவன். அவன் பூமிக்குப் பாரமாக உள்ளவன். அவன் வாழ்வு அவனுக்கும் உலகிற்கும் சுமையே. பந்த பாசங்கள் நாசம் உறவேண்டும். தெளிவின்மையே மயல் விளைப்பது. சந்தேக விபரீதங்கள் உடலில் எழும் வரை வாழ்வு பொருளற்றதாகிவிடும். இவற்றோடு வாழ்வதைவிட மடிதலே மேல். இந்நிலையில் சாதல் அறங்கூறும், ஆக்கம் தரும். மும்மலப்பாசம் விளைப்பது பயனற்ற பதார்த்தங்கள். பதார்த்தங்களைப் பாராதே பரமே பார்த்திருத்தல் வேண்டும் என்று சித்தியார் செப்புகிறது. கருக்காயும் பதரும் உணவாகுமா? நெல்லு வழங்கும் அரிசியே ஜீவாதாரம். ஆனால் பலரும் பதரையே நெல்போல் மதித்துக் கைக்கொள்ளுகின்றனர். அந்த வாழ்வு தமக்கு வேண்டாம் என்று அறுதியிட்டு அறைகிறார் அருட்கவி பாரதி. வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும். ஜீவன் சக்தியாலே இயக்கப்படுகிறது.

அவளை,

"எந்தப் பொருளினுமே - உள்ளே நின்
றியங்கி இருப்பவளே"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று போற்றுகிறார் பாரதியார். காளியாம் பராசக்தியின் பெருமையைப் பரவிக் கூறியதாவது:

"அத்தனை கோடிப்பொருளின் உள்ளே நின்று
வில்லை அசைப்பவளை - இந்த
வேலையனைத்தையும் செய்யும் வினைச்சியைத்
தொல்லை தவிர்ப்பவளை - நித்தம்
தோத்திரம் பாடித் தொழுதிடுவோமடா"

பொதுவாக மனிதன் உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவன். அவன் கள்ளம் விளை களர்நிலம். அன்புப் பயிர் வளர தேவைப்படுவது கருணையாம் நீர். பக்தி இருந்தால் கண்ணீர் பெருகும். காதல் உண்டேல் கண்ணீர் மல்கும். உள்ளத்தில் தெளிவு ஊற்றெடுக்க வேண்டும். ஊனைப் புரட்டி எடுப்பது ஆணவ மலமே. இதுவே சைவ சிந்தாந்தப் பால பாடம். கருணை வெள்ளமெனப் பெருகுதல் வேண்டும்.

"...... என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தான் நின்று உருகி கள்ளம் நெஞ்சால்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதா"

என்று கதறினார் மணிவாசகர். பாரதியாரும்,

"வெள்ளக் கருணையிலே - இந் நாய் சிறு
வேட்கை தவிராதோ?"

என்று வேண்டுகிறார். அனைத்திலும் மேவி நிற்பவளாய், ஆனால் இன்ன தன்மையள் என்று அறியவொண்ணாது இருப்பவளாம் பராசக்திக்குப் பாரதியார் மேல்வரைந்தவாறு விண்ணப்பித்துக் கொண்டார்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

29. மஹாசக்திக்கு விண்ணப்பம் – II

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின்மு னிங்கு
நசித்திடல் வேண்டு மன்னாய்.

நல்லனவற்றையே எண்ணல் வேண்டும். அங்ஙனம் எண்ணியவை நிறைவேல் வேண்டும். இதற்கான திண்ணிய நெஞ்சம் வேண்டும். இத்திண்ணிய நெஞ்சம் தெளிந்த நல்லறிவாய் விளக்கம் பெறல் வேண்டும். அறிந்தோ அறியாமலோ பாவங்கள் புரிந்து விட்டோம். பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்று பராசக்தி அறுத்திடல் வேண்டும். பாவக் கூட்டம், சூரியன் உதிக்க மறைந்திடும். பனிமூட்டம் அகலவேண்டும். இவையிற்றை அன்னை சாதித்தருளல் வேண்டும். இப்படி ஒரு விண்ணப்பத்தை உமைமுன் வைக்கிறார் உத்தமக் கவிஞரான பாரதியார்.

திரிகரணங்களால் இயற்றப்படும் பாவங்களைத் திரி கரணங்கள் மூலமே தொலைக்க வழியுண்டு என்று ஞானப்பிள்ளையார் தாம் அருளிய "உரையினில் செய்த பாவம்" என்று தொடங்கும் தேவாரத்தில் அருளியுள்ளார். பாரதியாரின் பாடலை இத் தேவாரப் பாடலொடு ஓதிப் பயன் பெறல் வேண்டும்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

30. பராசக்தி

கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்
காவியம் பல நீண்டன காட்டென்பார்
வித விதப்படு மக்களின் சித்திரம்
மேவு நாடகச் செய்யுளை.மேவென்பார்
இதயமோ வெனிற் காலையு மர்லையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்,
எதையும் வேண்டில தன்னை பராசக்தி
இன்ப மொன்றினைப் பாடுத லின்றியே. 1

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொரு தெய்வங்கூறுமே
கூட்டி மானுடச் சாதியை யொன்றெனக்
கொண்டு வைய முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்
பண்ணி லின்பமுங், கற்பனை விந்தையும்
ஊட்டி யெங்கும் உவகை பெருகிட
ஓங்கு மின்கவி யோதெனும் வேறொன்றே 2

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டிலே தனி யின்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி நான்
மூட்டு மன்புக் கனலொடு வாணியை
முன்னுகின்ற பொழுதிலெல் லாங்குரல்
காட்டி யன்னை பராசக்தி யேழையேன்
கவிதை யாவும் தனக்கெனக் கேட்கின்றாள். 3

மழை பொழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்
வானிருண்டு கரும்புயல் கூடியே
இழையு மின்னல் சரேலென்று பாயவும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈரவாடை யிரைந்தொலி செய்யவும்
உழையெலா மிடையின்றி யிவ்வானநீர்
ஊற்றுஞ் செய்தி யுரைத்திட வேண்டுங்கால்
மழையுங் காற்றும் பராசக்தி செய்கை காண்
வாழ்க தாயென்று பாடுமென் வாணியே. 4

சொல்லினுக் கெளி தாகவு நின்றிடாள்
சொல்லை வேறிடஞ் செல்ல வழிவிடாள்
அல்லினுக்குட் பெருஞ்சுடர் காண்பவர்
அன்னை சக்தியின் மேனி நலங் கண்டார்
கல்லினுக்கு ளறிவொளி காணுங்கால்,
கால வெள்ளத்திலே நிலை காணுங்கால்,
புல்லினில் வயிரப்படை காணுங்கால்,
பூதலத்தில் பராசக்தி தோன்றுமே! 5

"அன்பர்கள் என்னைக் கதைகளும், கவிதை தேக்கிய பாடல்களும் எழுதுக என்கின்றார்கள். பல நெடிதான காவியங்கள் நான் வரைய வேண்டும் என்கின்றார். மேலும் பல்வகைப்பட்ட மக்களின் சரிதைகள் அடங்கிய நாடகச் செய்யுள்களை அமைக்கச் சொல்லுகிறார்கள். ஆனால் இதயமோ காலையும், மாலையும், எந்நேரமும் கலைவாணியைத் தோத்தரிக்கும்போது பராசக்தியைப் பாடும் இன்பம் தவிர வேறு எதையும் கேட்டு நிற்கவில்லை." இது பாரதியார் தரும் தன்னிலை விளக்கம்.

அவர் தொடர்ந்து கூறுவதாவது: "நாட்டு மாந்தர் உறும் பிணியும் வறுமையும் பைந்தொழியப் பாடுக என்று தெய்வம் பணிக்கின்றது. வேறு ஒரு தெய்வம் மானுடச் சாதி முழுவதும் ஒன்றே என்று உணர்ந்து, வையகம் முழுவதும் பயனுற என் பாடல்கள் அறவழியை நிறுவ வேண்டும் என்று ஆணையிடுகிறது. பிறிதோர் தெய்வம் பண்ணின் இனிமையையும், கற்பனை விந்தையையும் நலனுறப் பிசைந்து உவகை பெருகிட ஓங்குவிக்கும் ஆற்றல் மிக்க கவி புனைக என்று கட்டளை இடுகிறது."

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்', 'நானிலம் முழுதும் நல்லின்பத்தில் ஆழ்க' என்ற நல்லெண்ணங்களால் உந்தப்பட்டு, மிகச் சிறந்த இன்பத்தைப் பாட்டிலே நாட்டவும், பண் சுமந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாடலைப் பாடவும், அன்புக் கனல் என் பிடர் பிடித்து உந்த, வாணியருளை வேட்க முயலுங்கால் பராசக்தி எளியேன் உட்செவியில் தன்குரலைக் கேட்பித்து, தன் மீது மட்டுமே இன்சுவைச் செஞ்சொற்கவி புனைக என்று கட்டளை இடுகிறாள்." இதுவே தம் நிலை என்று அறிவிக்கிறார் பாரதியார்.

"எதைப் பெற்றால் அனைத்தையும் பெற்றதாகுமோ அதைப் பெற முயலுக" என்று உபநிடதம் சாற்றுகிறது. நல்லெண்ணங்களே நம்மிடை தெய்வங்களாம். அவை ஒவ்வொன்றும் ஒருவகை நற்செய்கை சாதிக்கத் தூண்டும். எல்லா நல்லெண்ணங்களும், குணங்களும் மகா சக்தியின் சிதறல்களே. ஆகவே, முழுமையான அவளைப் போற்றினால் அனைத்துமே போற்றப்பட்டதாகிவிடும். சிறிய சிறிய இன்பங்கள் பலப்பல. ஆனால் பேரின்பம் ஒன்றே ஒன்றுதான். அறிவு ஒன்றே. இதை அற நின்று அறிவார் அறிவில் பிரிவு ஒன்று அற நிற்பவள் பராசக்தியே.

கடல், மலை, கானகம், விண், அண்ட கோளங்கள், அன்ன பிறவற்றைப் பார்த்துச் சொக்கிப் போய்ப் பரவஸப் பாட்டெடுப்பர் பாவாணர்கள். பாரதியாரும், பொழியும் மழையினைக் காண்கிறார். இருண்ட வானில் கரிய மஞ்சுக் கூட்டம் அலைமோதுகின்றது. சரேலென மின்னல் இழைகிறது. ஈர வாடை இரைச்சலிடுகிறது. எங்கெங்கும் இடைவெளியின்றி மழை பொழிந்தவண்ணம் இருக்கிறது. இவற்றைப் போற்றிப்பாட பாரதி விழைகிறார். அவர் உள்ளத்தில் உறையும் கவிதா சக்தி, அவருக்கு ஓர் பேருண்மையை விளக்குகிறது. "காற்றும், மழையும் பராசக்தியின் செய்கையே. அத்தாயைப் போற்றிப் பாடுக" என்கிறது.

நமக்கு இயற்கையாய்க் காட்சி தருவன எல்லாமுமே பராசக்தியின் செயற்கையே. இயற்கை என்று கூறப்படும் இத் தெய்வச் செயற்கையைப் போற்றுதலே உண்மையில் துதி ஆகும்.

மாற்றம், மனம் கழிய நிற்பவள் பராசக்தி. சொற்களில் அவளைச் சிமிழ்ப்புற வைத்தல் அசாத்தியம். என்றாலும் சொல்லைக் கழித்திட வழியில்லை. எதைச் சொன்னாலும், அதிலும் அவள் இருப்பாள். ஆகவே சொல்லாமற் சொல்லும் அருங்கலை, புலவனுக்கு வசப்படல் வேண்டும். அது எப்படி நிகழும்? காரிருளில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெருஞ்சுடர் காண்டல் வேண்டும். அங்ஙனம் காணின், அன்னையின் கோலமேனி தரிசனம் கிடைக்கும். கல்லினுக்குள் அறிவொளி காண்டல் வேண்டும், இது முடியுமா? ஏன் முடியாது? 'கல்லும் சொல்லாதோ கவி?' "கல்லும் கவி சொல்லும்; கேட்க நமக்குக் காது உண்டா என்பதே கேள்வி" என்றார் திருலோகம். "Sermons in stones" என்றார் ஷேக்ஸ்பியர். காலவெள்ளத்தில் நிலைத்திருத்தல் வேண்டும். புல்லினில் வயிரப்படை (வஜ்ராயுதம்) காண்டல் வேண்டும். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் ஆமே. இங்ஙனம் நம் காட்சிகள் அமைந்தால் பூதலமாம் பேர் உள்ளத்தில் பராசக்தி கொலுவிருப்பாள். அல்லினுக்குள் பெருஞ்சுடர் என்பதை 'தமஸோமா ஜோதிர்கமய' என்றும், 'கல்லினுக்குள் அறிவொளி' என்பதை "அஸதோமா ஸத்கமய" என்றும், 'காலவெள்ளத்தில் நிலை காண்டல்' என்பதை 'ம்ருத்யோர்மா அம்ருதம் கமய' என்றும் உபநிடதம் சாற்றும்.

'தான்' என்ற சொல் கடவுளைக் குறிக்கும். கல்லினுக்குள் அறிவொளி காண்பார் சிவயோகிகள். "தானே அளித்ததோர் கல் ஒளி ஆகி" என்பது திருமந்திரம் (பாடல் 937).

"பன்னரு உபநிட நூல் எங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே"

என்று சொன்னவர் நவசித்தராம் பாரதியார்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

31. காணி நிலம்

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அடி
தூணி லழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்திடையே - யொர் மாளிகை
கட்டித் தரவேண்டும் - அங்கு
கேணி யருகினிலே - தென்னைமரம்
கீற்று மிள நீரும். 1

பத்துப் பனிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல
முத்துச் சுடர்போலே - நிலாவொளி
முன்பு வர வேணும் - அங்கு
கத்துங் குயிலோசை - சற்றேவந்து
காதிற்பட வேணும் - என்றன்
சித்த மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும். 2

பாட்டுக் கலந்திடவே - அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும் - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டுதர வேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா, நின்றன்
காவலுற வேணும் - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேணும். 3

நிம்மதியாக வாழ ஒருவனுக்குத் தேவைப்படுவது அவனுக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு வீடு. காணி என்ற சொல்லுக்கு உரிமை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று பொருள். இப்பாடலில் அது நில அளவைக் குறிக்கவில்லை. சீதனமாக மணப்பெண் பெறும் நிலத்திற்கு 'மஞ்சள் காணி' என்று பெயர். வாடகை வீட்டில் வாழ்தல் இரண்டாம் தரமானது. ஆகவே சொந்தமான நிலம் தமக்கு வேண்டும் என்கிறார். கட்டப்பட்ட வீட்டை வாங்குவதைக் காட்டிலும் தேவைப்பட்ட மனையை வாங்கி தேவைக்கு ஏற்ப வீடு அமைத்துக்கொள்ளல் சிறப்புடையது. தமக்குத் தேவைப்படும் வீட்டைப் பராசக்தியே கட்டித் தரவேண்டும் என்கிறார். தூய நிறத்த மாடங்கள் தம் வீட்டில் அமைதல் வேண்டும் என்று வேண்டுகிறார். அளவில் சிறிய வீடாயினும் அவ்வீடு மாளிகை போன்ற சிறப்புடையதாக இருத்தல் வேண்டும் என்பதும் அவர் விருப்பம். பெரிதான தோட்டமோ, துரவோ அவர் கேட்கவில்லை. நல்லதொரு கேணியும், அதன் பக்கத்தில் தாளுண்ட நீரைத் தலையாலே தருகின்ற பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்களும் அமையவேண்டும் என்கிறார்.

தம் வீட்டில் ஓர் அரமியம் (நிலாமுற்றம்) அமைதல் வேண்டும் என்றும் விரும்புகிறார். அங்கு முத்துச்சுடர் போலே நிலா ஒளி பரவ வேண்டும் என்கிறார். பறவைகளின் பாட்டொலி கேட்கப் படுவதாய்த் தம் இல்லம் இருத்தல் வேண்டும் என்றும், குறிப்பாகக் குயில் அங்குக் கூவவேண்டும் என்றும் விழைகிறார். குயிலோசை சன்னமாகக் கேட்கும்படி இருத்தல் வேண்டும் என்பதே அவரது ஆசை. தம் சித்தம் மகிழ, அங்கு சிறுகாலாம் இளம் தென்றல் வரவேண்டும் என்பதும் அவர் ஆவல்.

> "காதல் செய் மனைவியே சக்தி கண்டீர்
> கடவுள் நிலை அவளாலே எய்தலாகும்"

என்று கூறியவர் பாரதியார். மேலும் அவர் தமக்குத் தொழில் கவிதை என்றும் கூறிய்வர். பயனுள்ள பாடல்களைத் தாம் பாட, தம் பத்தினி அவற்றைச் செவிமடுக்க வேண்டும் என்கிறார். இத்தாம்பத்தியக் கூட்டுறவில் மகிழ்ச்சி மீதூரும் கவிதை விளைதல் வேண்டும் என்றும் வேட்கையுறுகிறார். தம் வீட்டைக் காக்கச் சேவகர்களை அவர் விழையவில்லை. சக்தி தேவியின் காவலே அங்கு இரட்சையாக அமையப் பிரார்த்திக்கிறார். இச்சூழலில் அவர் உள்ளத்தில் சிவிறி அடிக்கும் பாடல்கள் இவ்வையத்தைப் புரத்தல் வேண்டும் என்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்பாடலை அலெக்சாண்டர் போப் பாடிய 'Ode On Solitude' என்ற பாடலோடு ஒப்பிட்டு மகிழலாம். அப்பாடலின் தொடக்க அடிகளை மட்டும் இங்கே தருகிறேன்:

"Happy the man whose wish and care
A few paternal acres bound,
Content to breathe his native air
In his own ground."

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

32. ஓம் சக்தி

நெஞ்சுக்கு நீதியுந் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப்பூண்.
பஞ்சுக்கு நேர் பல துன்பங்களா மிவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ
வஞ்சனை யின்றிப் பகை யின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல்லாம்
தஞ்ச மென்றே யுரைப்பீர்: “சக்தி ஓம்சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்”. 1

நல்லதுந் தீயதும் செய்திடும் சக்தி
நலத்தை நமக் கிழைப்பாள்
அல்லது நீங்கு மென்றே யுலகேழும்
அறைந்திடுவாய் முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காண்! இங்கு
சொல்லு மவர் தமையே
அல்லல் கெடுத் தமரர்க்கிணை யாக்கிடும்;
ஆம், சக்தி ஓம், சக்தி ஓம். 2

நம்புவதே வழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பி விட்டோம்.
கும்பிட் டெந்நேரமும், “சக்தி”யென்றால் உனைக்
கும்பிடுவேன் மனமே.
அம்புக்குந் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாதபடி,
உம்பர்க்கு மிம்பர்க்கும் வாழ்வுதரும் பதம்
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 3

பொன்னை பொழிந்திடு மின்னை வளர்த்திடு
போற்றி யுனக் கிசைத்தோம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்னை பராசக்தி யென்றுரைத்தோம் தளை
யத்தனையுங் களைந்தோம்;
சொன்னபடிக்கு நடந்திடுவாய், மன
மே தொழில் வேறில்லை, காண்;
இன்னுமதே யுரைப்போம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம். 4

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய்!
தெள்ளு கலைத்தமிழ் வாணி, நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்.
எள்ளத்தனை பொழுதும் பயனின்றி
யிரா தென்றன் நாவினிலே
வெள்ள மெனப் பொழிவாய், சக்திவேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல்! 5

இப்பாடலைப் பலரும் அழகாகப் பாடுவர். ஆனால், இதன் பொருள் என்ன? என்று கேட்டால், திகைத்து நிற்பார்கள். மொழி பெயர்ப்பாளர்களைத் திணறவைக்கும் பாடலிது. என்றாலும், ஊன்றிப் பயின்றால் பொருள் தெளிவாக விளங்கும்.

நெஞ்சுக்கு நீதி என்பதே சுடர்விடும் பரிபூர்ண ஆபரணம். வீரனுக்கு அவன் கொண்டுள்ள வாளே சுடர்மணிப் பூண் ஆகும். வீரம் உறைகின்ற இடம் தோளே. "திண் தோளான்" என்று நளன் போற்றப்படுகிறான். ஒரு வீரனின் தோள் கல்லொத்த தோள். தோளுக்கு உரிய சுடர்மணிப் பூண் வாளே.

நாம் உறும் துன்பங்கள் பலப்பல. அவையிற்றை இல்லையாக்குவது எது? அதுவே சக்தியின் அருட் கனல் பார்வை. புறங்காணமுடியாத பெருந்துயர்கள் என்று கொள்ளப்படுவன, அன்னையின் அருட்கனல் பார்வையால் தீப்பட்ட பஞ்சின் நிலை உறும். அதி விரைவில் எரிந்து படக்கூடியது பஞ்சே. பெருந்தீக்கு முன்னால் தூசு எரிந்துபடும். "நின்றனவும் தீயினில் தூசாகும்" என்று அருளியுள்ளார் ஆண்டாள் நாச்சியார்.

அன்னை அருள்பெற வையக மாந்தர் செய்ய வேண்டியது யாது? வஞ்சனையற்ற, சூதற்ற மனத்தோடு அதாவது தூய உள்ளத்தோடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஓம் சக்தி, ஓம் சக்தி" என்று கூறியபடி சக்தியிடம் சரண் புகுதல் வேண்டும். இப்பாடலில் மகாகவி "சக்தி ஓம் சக்தி" என்ற தொடர் பெய்துள்ளார். இந்த ஓம் என்ற பதத்தை ஈரிடத்தும் கூட்டல் வேண்டும். சக்தியை ஓம் என்ற எழுத்துருவில் காண்டல் ஒல்லும். அங்ஙனம் காண்பாரின் பெருந் துயர்கள் எரிபட்ட சுருள் ஆகிவிடும். அன்னை நிவேதிதாவை, பாரதியார் "புன்மைத் தாதச் சுருளுக்கு நெருப்பாகி விளங்கிய தாய்" என்று போற்றுகிறார்.

சக்தி நல்லதும் செய்யும், தீயதும் செய்யும், தீமைகள் போல் தோற்றுவன அவள் மறக்கருணையால் விளைவன. ஆகவே நல்லதும் தீயதும் செய்திடும் சக்தி நலத்தை நமக்கு இழைப்பாள் என்கிறார். இங்ஙனம் உள்ள அவள் பெருமையை முரசறைந்து வெளிப்படுத்தல் வேண்டும். இங்கு இதற்கான கட்டளையை முரசுக்கு அறிவிக்கிறார்.

"அல்லது நீங்கும் என்றே உலகேழும்
அறைந்திடுவாய் முரசே"

என்கிறார். இவ்வருட் செய்தி எட்டுத் திக்கும் எட்ட முரசு கொட்டப்பட வேண்டும். சக்தியின் பெருமை சொல்லில் அடங்காது. அது சொல்லத் தகுந்த பொருள் அன்று. இப்படிச் சொல்லுவதையே சொன்னால் அவள் பெருமையைச் சொல்லியது ஆகும். இப்படி அவள் பெருமையைச் சொல்லுவோரின் அல்லல்களைக் கெடுத்து, அவர்களை அமர நிலைக்கு உயர்த்துவாள் அருள் அன்னை. ஆம், அப்படிச் செய்வாள் அவள். ஆகவே கூறுங்கள்: "ஆம், சக்தி ஓம், சக்தி ஓம்" என்று,

கடவுளைக் கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர். கடவுளின் இருப்பு உண்மையே. இவ்வுண்மையை நிறுவியிருப்பது வேதம். மறை உரைத்ததை நம்புவது நாம் கடைத்தேற வழி. கடவுளை நம்பு என்று விதித்த வேதத்தை நம்புவதே நமக்கு நல்வழி. அத்தெய்வத்தைக் கும்பிட்டு வாழ்தலே முறை. இதைத் தம்முடைய மனம் செய்தல் வேண்டும் என்றும், அங்ஙனம் அம் மனம் கும்பிட்டு, சக்தி என்று ஓதுமாயின், தம் மனத்தைத் தாம் கும்பிடச் சமைவாக இருப்பதாகவும் பாரதியார் அறைகிறார். மனம் நல்லான்மா காட்டும் வழியே படர்தல்வேண்டும். ஆன்மாவைத் தன் விருப்பப்படி இழுத்துச்செல்லும் மனம் பெரிய விரோதி. தூய ஆன்மாவின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விருப்பத்தை மனம் ஈடேற்றல் வேண்டும். அப்படி அம்மனம் இயங்குமானால், அதற்கு ஒரு கோயில் கட்டுவேன் என்கிறார் மகாகவி. விநாயகர் நான்மணிமாலையில் பாரதியார் கூறியிருப்பதைக் கேளீர்:

"..... மனமே....
தேறித் தேறி நான் சித்தி பெற்றிடவே,
நின்னா லியன்ற துணைபுரி வாயேல்,
பொன்னாலுனக் கொரு கோயில் புனைவேன்;
மனமே, எனை நீ வாழ்வித்திடுவாய்."

தம் மனம் எப்போதும் சக்தி துதி பாடல்வேண்டும் என்று கருதியவர். சக்தி அருளால் பல நன்மைகள் உளவாகும். சக்தி,

"அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில்லாதபடி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வுதரும்"

என்று கூறுகிறார். இங்கு அம்பு என்கிறாரே, அது என்ன? சரம் என்றோ வாளி என்றோ அது பொருள்படாது. அம்பு என்றால் தண்ணீர் என்று பொருள். அம்பாகிய நீரிலே தோன்றும் தாமரைக்கு அம்புஜம் என்று பெயர். அது அம்பிலே ஜநிக்கிறது. கம்பர் பாடிய இராமாயணத்தைப் புகழ வந்த கவி, "அம்பிலே சிலையை நாட்டி" என்று தமது பாடலைத் தொடங்குகிறார். அம்பு இங்கே கடலைக் குறிக்கும். சிலை என்றால் மலை என்று பொருள்.

நீர், தீ ஆகியவற்றைப் பாரதியார் கூறியிருப்பதால், மண், காற்று, விண் ஆகியவற்றையும் உபலக்ஷணத்தால் நாம் கொள்ளல் வேண்டும். இப்படிப் பொருள் கொள்ளவேண்டிய முறைமையை 'ejusdem generis' என்ற சட்டத்தொடர் சாற்றும். "உடுப்பதூஉம் உண்பதூஉம்" என்று கூறும் குறளுக்கு உரை வரைந்த பரிமேல் அழகியார் "உடுப்பது உண்பது என்பன கண்டவ் வத்தொழில் மேல் நின்றன" என்றும், "அவற்றால் பூண்டல், ஊர்தல் முதலிய பிற தொழில்களும் கொள்ளப்படும்" என்றும் கூறியிருப்பதை உன்னுக.

உம்பர் வாழ்வு நிரந்தரம் அன்று. சுவர்க்க வாழ்வு நிலையற்றது. நிலைத்திருப்பது அந்தமில் பேரின்பமான முத்தியே. ஆகவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
உம்பரும் (வானோரும்) உறுதிகூட சக்தியைப் போற்றுதல் வேண்டும். தமக்குப் பொன்னும், மின்னும் (அசாத்தியமான வலிமையும்) சக்தி அருளப் பிரார்த்திக்கிறார் பாரதியார். தடைபெற்றுள்ள தமது சக்தி விம்மி விகசித்து வளருமாறு அருட்சக்தி தம்மை ஆதரிக்கக் கோருகிறார் மகாகவி. உயிரைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது மும்மலக் கூட்டமாகிய பாசம். இது தளை என்று சைவசித்தாந்தம் சாற்றும். இத்தளையை அன்னை பராசக்தி களைதல் வேண்டும் என்று வேண்டுகிறார் காளிதாஸரான பாரதியார். இதை இன்னும் அழுத்தமாகவே அவர் அறைகின்றார்.

"அன்னை பராசக்தி என்றுரைத்தோம் தளை
அத்தனையும் களைந்தோம்"

என்பது அவர் வாசகம். ஓம் என்ற ஓரெழுத்து ஒரு மொழியைத் தம் கூற்றின் இறுதியில் அவர் அமைத்துப் பாடியிருப்பது தனி அழகுடையது.

மீளவும் மனத்துக்கு அவர் கூறுவதாவது:

"சொன்னபடிக்கு நடந்திடுவாய்; மன
மே தொழில் வேறில்லை காண்;
இன்னும தே உரைப்போம் சக்தி ஓம் சக்தி
ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்"

அன்னை எங்கிருக்கிறாள்? எப்படி இருக்கிறாள்? அவள் வெள்ளை மலர்மிசை இருக்கிறாள். வெள்ளை மலர் என்பது மாசற்ற உள்ளம். மாமுநி மில்டனாரும் இதையே 'upright heart and pure' என்று சாற்றியுள்ளார். வெள்ளைமனத்தில் பராசக்தி வேதக் கருப்பொருளாக விளங்குகிறாள். பாரதியார், "பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்" என்று அப்பர் கூறியதைப் போலே, தெள்ளுதமிழ் வாணிக்கு ஒருவிண்ணப்பம் சமர்ப்பிக்கின்றார். அது இதுவே:

"எள்ளத்தனைப் பொழுதும் பயனின்றி
இராது என்றன் நாவினிலே
வெள்ளமெனப் பொழிவாய், சக்திவேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல்!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சக்திவேல் என்று கூறக் காரணம் என்ன? வேல் என்பது ஞானம். இந்த ஞானமே முருகன் தன் தாயிடம் பெற்றது. இது அஞ்ஞானமான சூரனை ஒடுக்கிற்று. இவ் வேலைப் பாடுவதே நம் வேலை.

"ஆடும் பரி வேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என்றார் அருணகிரியார்.

பாரதியார் வேட்டது அருள் ஞானம்.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

33. சிவசக்தி புகழ்

ஓம்

சக்தி சக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுங் கொல்லு
சக்தி சக்தி சக்தியென்று சொல்லி - அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு. 1

சக்தி மிசை பாடல்பல பாடு - ஓம்
சக்தி சக்தி யென்று தாளம் போடு
சக்தி தருஞ் செய்கை நிலந் தனிலே - சிவ
சக்தி வெற்றி கொண்டு களித்தாடு. 2

சக்தி தனையே சரணங் கொள்ளு - என்றும்
சாவினுக் கொரச்ச மில்லை தள்ளு
சக்தி புகழா மமுதை யள்ளு - மதி
தன்னிலினிப் பாகுமந்தக் கள்ளு. 3

சக்தி செயும் புதுமைகள் பேசு - நல்ல
சக்தி யற்ற பேடிகளை யேசு
சக்தி திருக் கோயிலுள்ள மாக்கி - அவள்
தந்திடு நற் குங்குமத்தைப் பூசு. 4

சக்தியினைச் சேர்ந்த திந்தச் செய்கை - இதைச்
சார்ந்து நிற்ப தேநமக்கொ ருய்கை
சக்தியெனு யின்பமுள்ள பொய்கை - அதில்
தண்ணமுத மாரிநித்தம் பெய்கை. 5

சக்தி சக்தி சக்தி யென்று நாட்டு - சிவ
சக்தி யருள் பூமிதனில் காட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சக்தி பெற்ற நல்லநிலை நிற்பார் - புவிச்
சாதிக ளெல்லா மதனைக் கேட்டு. 6

சக்தி சக்தி சக்தி யென்று முழங்கு - அவள்
தந்திர மெல்லா முலகில் வழங்கு
சக்தி யருள் கூடிவிடு மாயின் - உயிர்
சந்ததமும் வாழுநல்ல கிழங்கு. 7

சக்தி செயுந் தொழில்களை யெண்ணு - நித்தஞ்
சக்தி யுள்ள தொழில் பல பண்ணு
சக்திதனை யேயிழந்து விட்டால் - இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு. 8

சக்தியருள ளாலுலகி லேறு - ஒரு
சங்கடம் வந்தா லிரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால் - அவள்
தண்ணரு ளென்றே மனது தேறு. 9

சக்தி துணை யென்று நம்பி வாழ்த்து - சிவ
சக்தி தனையே யகத்தி லாழ்த்து
சக்தியுஞ் சிறப்புமிகப் பெறுவாய் - சிவ
சக்தியருள் வாழ்க வென்று வாழ்த்து. 10

ஓம் எனும் ஓரெழுத்து ஒருமொழி ஒருதனிச் சிறப்புடைத்து. பாஞ்சாலி சபதத்தை ஓமென்று கூறியே பாரதியார் தொடங்குகிறார்.

"ஓமெனப் பெரியோர்கள் - என்றும்
ஓதுவதாய், வினை மோதுவதாய்"

என்றே தம் சிறு காப்பியத்தை மகாகவி தொடங்குகிறார். சிவ சக்தியின் புகழ் உரைப்பதற்கு, ஓம் என்று முதலில் கூறுகிறார். நம்மை ஓம் சக்தி, ஓம் சக்தி என்று சொல்லச் சொல்லி, சஞ்சலங்கள் யாவையும் கொல்லச் சொல்லுகிறார். அனந்த சக்திகள் படைத்த சொல் ஓம்; அவற்றுள் மாரணமும் அடங்கும். சக்தியின் திருநாமத்தைக் கூறியபடியே அவள் சந்நிதியில் தொழுதுநிற்றல் வேண்டும்.

சக்தியே கவிஞனின் உள்நின்று பாடவைக்கிறாள். இதை உணர்ந்து சக்திமிசை பல பாடல்கள் அவன் பாடவேண்டும். ஓம் சக்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
என்பதை இசைக்கும் போது, அவ்விசையில் இலயமும் கூடவேண்டும். ஆகவே, "சக்தி சக்தி என்று தாளம் போடு" என்றும் மகாகவி ஆணையிடுகிறார். நிலமிசை நம் செய்கைகள் சக்தியால் விளையும். செய்கையில், செயலில் வெற்றிகூட்டும். சக்தியைப் பாடி, களித்தாடு என்றும் கூறுகிறார். பண்ணோடு தாளம் இயைந்த பாடல் மரபு களிகொண்டு ஆடல் வேண்டும். "தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" என்று அருளினார் அப்பர் அடிகள்.

சக்தியின் சரணத்தில் சரணம்புக வேண்டும். இச்சரணமே மரண பயத்தைத் தவிர்க்கும். மரணம் பெரிதன்று; மரண பயமே பொல்லாதது. "Cowards die many times before their death" என்பது ஷேக்ஸ்பியர் வாசகம். சக்தி புகழே அமுதம். இதை அள்ளி அள்ளிப் பருகவேண்டும். இனிய கிறுகிறுப்பு இதுவே தரும்; கள் அன்று. உள்ளக் களிப்பும், காண மகிழ்ச்சியும் சக்தியால் பெறவேண்டும்.

நவநவமான இன்பங்களை விளைவிப்பவள் பராசக்தி. இவ்வின்பங்களை அறியாதார் பேடிகள். இத்தகு பேடிகள் எள்ளத் தகுந்தவர்கள்; தள்ளத் தகுந்தவர்கள். பக்தன் தன் உள்ளத்தைச் சக்தி பீடமாகக் கொள்ளுபவன். பீடாபகாரியான மகா சக்தியின் பிரஸாதமே குங்குமம். அதைப் பூசித்துப் பூசிக்கொள்ள வேண்டும். இதுவே ரக்ஷை.

நல்வழிபாட்டுச்செயல் சக்தியைச்சேரும். இச்செயலைச்சார்ந்து நிற்றலே நமக்கு உய்வை அளிக்கும்; உறுதி பயக்கும். சக்தியே பேரின்பப் பொய்கை. இப்பொய்கை தண்ணமுத நீரால் நிரம்பி நிற்கும். பொய்கை என்பது மானுடரால் ஆக்கப்படாத நீர் நிலை. தெய்வ ஞிமிறுகள் இப்பொய்கையில் பூத்த அருள் மலர்களை மொய்த்த வண்ணம் இருக்கும். அருள்மாரியே அருட் பொய்கை ஆகும்.

உள்ளத்தில் சக்தியை நாட்டு. அப்பிரதிஷ்டையால் விளையும் அருளை உலகிற்கு எடுத்துக்காட்டு. இதைக் கண்டும் கேட்டும் உலக உயிர்கள் சக்தி அருள் பெற்று நல்ல நிலையில் நிற்கும். இதுவே, ஒன்றே உயிர்க்குலம் என்பதை நிறுவும்.

சக்தி, சக்தி என்றே முழங்கவேண்டும். அவள் அருளைத் தேக்கி வைத்திருக்கும் சாக்த நூல்களை உலகினர்க்கு வழங்குக. சக்தி அருள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூடிடுமாயின், உயிர் என்றும் திண்ணிய கிழங்குபோல் விளங்கும். கிழங்கு என்ற சொல் காரணம் என்ற பொருளிலும் வழங்கும். சக்தியின் அருளே அமரவாழ்விற்கான காரணம்.

செய்யும் செயல்கள் பராசக்தியால் விளைவன; செயல்படுவன. இதை எண்ணுக. இங்ஙனம் எண்ணி சக்தி கூட்டும் செயல்கள் பல பண்ணுக. சக்தி அருளைப் போற்றுக. அதை இழந்து விட்டால் எஞ்சுவன நோயும், சாவுமே.

சக்தி அருளைப் போற்றித் திசை மிதித்து ஏறி உடுக்கள் நிறை வானத்துப் பைங்காலில் வளையவருக. அப்போது இடர்ப்பாடு ஏதேனும் தோன்றின் அது இரண்டு துண்டுபட்டு மாயும். நம்முயிரைப் புடம் போட சக்தி சில சோதனைகள் போடுவாள். அவையிற்றில் வெற்றிபெற உழைத்திடுக. சோதனைகள் அவள் அருளின் மறுபக்கமே அன்றி வேறில்லை. திரோதான சக்தியே அருட் சக்தி என்று சைவ சித்தாந்தம் சாற்றும்.

“நன்றே செய்வாய்; பிழை செய்வாய்
நானோ அதற்கு நாயகமே”

என்பது மணிவாசகம்.

“சக்தியே துணை” என்று வாழ்வீராக. இதையே நம்புக. நம்பினார் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு. சக்தியை அகத்தில் இருத்தி அவளை வாழ்த்தியபடியே வாழ்வீராக. உம்மை வலிமையும், பெருமையும் வந்து கூடும். ஆகவே சக்தி அருள் வாழ்க என்று வாழ்த்துக.

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

34. ஊழிக் கூத்து

வெடிபடு மண்டத் திடிபல தாளம் போட - வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாடப் - பாட்டின்
அடிபடு பொருளுன் அடிபடு மொலியிற்கூடக் - களித்
தாடுங் காளீ, சாமுண்டீ, கங்காளீ!
அன்னை, அன்னை,
ஆடுங்கூத்தை நாடச் செய்தா யென்னை. 1

ஐந்துறு பூதம் சிந்திப்போ யொன்றாகப் - பின்னர்
அதுவும் சக்திக் கதியில் மூழ்கிப் போக - அங்கே
முந்துறு மொளியிற் சிந்தை நழுவும் வேகத் - தோடே.
முடியா நடனம் புரிவாய், அடு தீ சொரிவாய் -
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 2

பாழாம் வெளியும் பதறிப் போய் மெய் குலையச் - சலனம்
பயிலும் சக்தி க் குலமும் வழிகள் கலைய - அங்கே
ஊழாம் பேய்தான் "ஓஹோ ஹோ" வென்றலைய - வெறித்
துறுமித் திரிவாய், செறுவெங் கூத்தே புரிவாய்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 3

சத்திப் பேய்தாந் தலையொடு தலைகள் முட்டிச் - சட்டச்
சடசட சட்டென் றுடைபடு தாளங் கொட்டி - அங்கே
எத்திக் கினிலும் நின்விழி யனல் போயெட்டித் - தானே
எரியுங் கோலங் கண்டே சாகுங் காலம்
அன்னை, அன்னை
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 4

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காலத்தொடு நிர்மூலம் படுமூ வுலகும் - அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியா யிலகும் - சிவன்
கோலங் கண்டுன் கனல்செய் சினமும் விலகும் - கையைக்
கொஞ்சித் தொடுவாய், ஆநந்தக் கூத்திடுவாய்
அன்னை, அன்னை,
ஆடுங் கூத்தை நாடச் செய்தா யென்னை. 5

சாக்த, சைவ சித்தாந்தத்தின் கருத்துக்களின் பெட்டகம் இப்பாடல். காண ஒண்ணா காளியின் கடு நடனத்தைக் கண்டு, உயிரில் உன்மத்தம் ஏறிவிட்ட நிலையில் காளிதாஸராம் பாரதி பாடிய இறை அனுபவப் பாடலிது.

யாது காரணம் பற்றியோ, உரிய காலத்திற்கு முன்னரே ஸம்ஹார வேலையில் காளி ஈடுபடுகிறாள். அதுபோது அவள் ஆடிய நடனமே ஊழிக்கூத்து. உமையம்மையின் உக்கிர வடிவங்களே காளி, சாமுண்டி, கங்காளி என்பன. எவ்வடிவிலும் அவள் அன்னையே. ஆகவே அவள் ஆடுங் கொடுங் கூத்தைக் காண மகாகவிக்கு அந்நேரத்தில் அருள் பாலித்திருக்கிறாள்.

யுக முடிவுக்குமுன் தோன்றுவன எவை? அண்டங்கள் வெடிபடத் தொடங்கும்; பேரிடிகள் தாளம் போடத் தொடங்கும். கூளி, இடாகினி போன்ற பூதங்கள் இரத்த வெறி கொண்ட களியோடு சந்திரன், சூரியன், தாரகைகள் அற்றுவிடும் வெறும் ககன வெளியில் பாடத் தொடங்கும். காளி சாடியதால் உண்டாகும் ஒலியில் பூதங்கள் பாடும் பாட்டுக்களிலும் பொருண்மை கூடும். வெறிகொண்ட தாய் களிகொண்டு ஆடுகிறாள். காளி ¿ங்காளியாக மாறிவிட இருக்கிறாள். பேர் ஒடுக்க காலத்தில் சிவனார் பிரம விஷ்ணுவின் சடலங்களைத் தரித்து நிற்பர். அந்நிலையில் அவர் கங்காளர் என்று போற்றப்படுகிறார். கங்காளன் என்பதன் பெண்பால் கங்காளி.

காளி ஆடும் கோரதாண்டவத்தால் ஐந்து பூதங்களும் சிதறுகின்றன. காரிய நிலையில் பஞ்சபூதங்கள்; காரணநிலையில் தன்மாத்திரைகள்; சூக்கும காரணநிலையில் மாயை. வேறாகப் பிரிந்திருந்த பூதங்கள் காரணநிலையில் ஒன்றாகிவிடும். இதையே, மகாகவி "ஐந்துறு பூதங்கள் சிந்திப் போய் ஒன்றாக" என்கிறார். பின்னர் ஒன்றான அதுவும் சக்தியின் கதியில் மூழ்கி விடுகிறது. ஒடுக்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காலத்தில் அனைத்தும் மாயையில் ஒடுங்கும்; மாயை சக்தியில் ஒடுங்கும். அச்சக்தி சிவத்தில் ஒடுங்கும். இங்கு நிகழும் ஊழிக் கூத்தில் சக்தி இன்னமும் சிவத்தில் ஒடுங்கவில்லை. தொடர்ந்து அவள் முடியா நடனம் புரிகிறாள். விளைந்த பேர் ஒளியில் எதுவும் நிலைத்திருக்க முடியாது. சிந்தை கூட நழுவிவிடும். ஒடுக்கத்தை நிறைவு செய்ய அழிக்கும் தீயைச் சொரியத் தொடங்குகிறாள் காளி. தன் தாசனாம் பாரதியைத் தான் ஆடும் கூத்தைக் காணச் செய்கிறாள்.

பாழ், முப்பாழ் என்பன யோக பரிபாஷைச் சொற்கள். "முப்பாழும் தாண்டி" என்று கோபால கிருஷ்ண பாரதியாரும் நந்தன் சரித்திரத்தில் கூறியுள்ளார். காளியின் நடன வேகத்தை இப் பாழும் தாங்க முடியாது குலைந்து போகிறது. பல ஆயிரம் குறுஞ் சக்திகள் பராசக்திக்குக் கட்டுப்பட்டு அவ்வவற்றின் வழிகளில் நடைபோடும். இந்த ஒழுங்கும் கலைந்து போகிறது. ஊழிக்கு முடிவு ஏற்பட உள்ளதால் அது பதறி, பேய் போல, "ஓஹோ ஹோ" என்று அலறி அலையத் தொடங்குகிறது. காளியும் வெறிகொண்டு உறுமி, திரிந்து செறுவெங் கூத்து ஆடுகிறாள்.

பேயரசி காளியே. பேய்கள் நிலைதடுமாறி தலையொடு தலைகள் முட்டித் தடுமாறுகின்றன. காளியின் நடனத்திற்கு அவை கொட்டி வந்த தாளம் உடைபடுகிறது. உடைபடும்போது 'சட்டச் சடசட சட்டு' என்ற ஒலி எழுகிறது. காளியின் விழிகள் தீ உமிழ்கின்றன. அவை எட்டுத் திக்குகளிலும் படருகின்றன. இப்படி அனைத்தும் தீப்பட்டால் காலம் சாகும். ஆம், காலத்திற்குச் சாவு உண்டு. ஏனென்றால் காலம் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று. எதற்குத் தோற்றமுண்டோ அதற்கு முடிவு உண்டு. சைவ சித்தாந்தக் கருத்துப்படி, காலம் அசுத்த மாயையில் முதல் தத்துவமாகத் தோற்றுவிக்கப்பட்டதே. காலம் என்பது கற்பிக்கப்பட்டது. "மயக்கமும் காட்டி எழும் காலம் என்றே பெருங் கற்பனை...." என்பது திருலோக தரிசனம்.

இப்படி காலத்தொடு மூவுலகும் நிர்மூலம் பட உள்ளது. காலத்திற்கு அகால மரணம் வருதல் கூடாது. காலாதீதனான பரமசிவன் அதை ஏற்றருளமாட்டான். தனித்த மோனத்தில் ஒளியாய் இயங்கி இருந்த சிவபெருமான், தன் மோனத்தைக் கலைத்துக் காளிக்குத் தன் கோலத்தைக் காட்டுகிறார். அக்கோலம் கண்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாத்திரத்தில் காளியின் கனன்று எழுந்த சினம் விலகத் தொடங்குகிறது. கோர தாண்டவம் மறைந்து சாந்த நடனம் விளைகிறது. சினம் விலக சிவானந்தம் விளைகிறது. சிவனார் திருக்கரத்தை அன்னை கொஞ்சித் தொடுகிறாள். சின வெறி ஆனந்த வெறி ஆகிறது. ஊழிக்கூத்து ஆனந்தக் கூத்தாய் முடிகிறது. இதையும் பாரதியார் காண்கிறார்.

மகாகவியின் இப்பாடலுக்கு இணையான பாடலை எங்கும் காண்டல் அரிது. சவமாகிப் போக இருந்த அனைத்தும் சிவமாகி விளங்கத் தொடங்குகிறது. இது பாரதிக்கு அநுபூதியாகிறது. "அறுபத்தாறு" என்ற தலைப்பில் 66 பாடல்களை பாரதியார் பாடியுள்ளார். அப்பாடல் இப்படி முடிகிறது: "ஸதா காலம் 'சிவோஹம்' என்று ஸாதிப்பாயே."

✤

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)